# செயல்நிறைவேற்று அறிக்கையும் வருடாந்த கணக்குகளும்

**2016 ஆம் ஆண்டுக்கானது**

# வர்த்தக திணைக்களம்

## தலைப்பு 295

*4 ஆவது மாடி, "ரக்ஷன மந்திரய"*
*இல.21, வொக்ஸோல் வீதி,*
*கொழும்பு 02.*
*தொலை : 011-2329733 / 2436114*
*தொலைநகல் : 011 - 2430233*
*மின்னஞ்சல்: fortrade@doc.gov.lk*
*இணையம் : www.doc.gov.lk*

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | அறிமுகம் | 01 |
| 2 | இலங்கை வெளிநாட்டு வர்த்தகத்தின் மீளாய்வு - 2016 | 05 |
| 3 | பல்தரப்பு வர்த்தக உறவுகள் | 11 |
| 4 | இருதரப்பு வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு | 28 |
| 5 | பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு | 44 |
| 6 | வர்த்தக, முதலீடு மற்றும் சுற்றுலா ஊக்குவிப்பு | 50 |
| 7 | உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களினை (COOs) வழங்குதல் | 74 |
| 8 | பதவியினர் இடநகர்வுகள் 2016 | 77 |
| 9 | வருடாந்த கணக்குகள் 2016 | 78 |

# அட்டவணைகளின் பட்டியல்


| | பக்கம் |
|---|---|
| இலங்கையின் மொத்த இறக்குமதிகள், மொத்த ஏற்றுமதிகள், மொத்த வர்த்தக மீதி (2011 – 2016) | 06 |
| வர்த்தக உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பொழிப்பு (2016) | 53 |
| வழங்கப்பட்ட உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களின் எண்ணிக்கை 2011-2016 (உடன்படிக்கை ரீதியாக) | 75 |


# விளக்கப்படங்களின் பட்டியல்


| | பக்கம் |
|---|---|
| வர்த்தக திணைக்களத்தின் நிருவாக கட்டமைப்பு | 03 |
| வர்த்தக திணைக்களத்தின் உறவுகள் | 04 |
| இலங்கையின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொகுப்பு | 07 |
| ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வர்த்தகப் போக்கு (2016) | 10 |

# 1. அறிமுகம்

## ***திணைக்களத்தின் நோக்கு***

*"சர்வதேச வர்த்தக உறவுகளினூடாக மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துதல்"*

## ***திணைக்களத்தின் செயற்பணி***

***"இலங்கையின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சிக்கு பயன் மிக்கதான சேவையினை வழங்குவதன் மூலம் மொத்த உற்பத்தி, வருமானம் மற்றும் வேலைவாய்ப்பு மட்டங்களில் அதிகரிப்பினை ஏற்படுத்துவதனூடாக வாழ்க்கைத் தரங்களை உயர்த்தி வாழ்வின் அதி உன்னத இடத்தை அடைந்து கொள்ளும் நோக்கில் அரசாங்கத்தின் வர்த்தக கொள்கையினை வினைத்திறனுடன் அமுலாக்குவதன் ஊடாக இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக தொடர்புகளை இருதரப்பு, பிராந்திய மற்றும் பல தரப்பு மட்டங்களில் ஊக்குவித்து விருத்தி செய்தலாகும்."***

வர்த்தக திணைக்களமானது (வ.தி), கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் சர்வதேச வர்த்தக கொள்கை விடயங்களிலும் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக உறவுகளினை இருதரப்பு, பிராந்திய மற்றும் பல்தரப்பு மட்டங்களில் பேணிக்கொள்வதிலும் மதியுரை வழங்கும் முகவராண்மையென்ற முக்கியமான பாத்திரத்தினை வகித்து வருகின்றது. வர்த்தக கொள்கை மற்றும் ஊக்குவிப்புக்களுடன் தொடர்புடைய பல்வேறு நடவடிக்கைகள் உள்ளடங்கலாக வர்த்தக திணைக்களத்தினால் பல்வேறு தொழிற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வர்த்தக திணைக்களத்தினால் இது தொடர்பில் பொறுப்பேற்கப்பட்ட அத்தகைய பணிகள் பற்றி சுருக்கமாக கீழே தரப்படுகின்றது.


- உரிய வரிசை அமைச்சுக்கள் / அதிகாரசபைகள் மற்றும் தனியார் துறை அக்கறைதாரர்களுடன் ஒருங்கிணைந்து இலங்கையின் சர்வதேச வர்த்தக கொள்கையினை வகுத்தலும் அமுல்படுத்துதலும்.

- நாட்டின் ஒட்டுமொத்த அபிவிருத்தியினை விருத்தி செய்யும் வகையில் வெளிநாட்டு வர்த்தக கொள்கை தொடர்பில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சுக்கு மதியுரை வழங்குதல்.

- வெளிநாடுகளிலுள்ள இலங்கை வர்த்தக பிரதிநிதிகளினூடாக வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா துறைகளிலிலுள்ள இலங்கையின் வர்த்தக நலன்களை ஊக்குவித்தல்.

மீளாய்வு காலப்பகுதியில், வர்த்தக திணைக்களமானது வெளிநாட்டு வர்த்தக துறை தொடர்பான அரசாங்கத்தின் நோக்கு மற்றும் நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார அபிவிருத்தி நோக்கில் மேற்கொள்ளக்கூடிய முக்கியமான பங்களிப்புக்களின் அடிப்படையில் அதன் வேலை நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ந்தும் மேற்கொண்டு வந்துள்ளது. அந்தவகையில், 2016 ஆம் ஆண்டுக்கான வேலைத்திட்டம், தற்போதிருக்கும் வர்த்தக உறவுகளை மேலும் வலுப்படுத்துதல், புதிய சந்தைகளையும் உற்பத்திப் பொருட்களையும் ஊக்குவித்தல், சர்வதேச வர்த்தக முறைமையிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையின் வினைத்திறன் மிக்க பங்களிப்பினை ஊக்குவித்தல் மற்றும் தென்னாசிய பிராந்தியத்தில் வர்த்தகத்தில் முன்னணி வகிக்கும் நாடாக இலங்கையை ஊக்குவித்தல் போன்ற நடவடிக்கைகளில் கூடிய கவனம் செலுத்தியுள்ளது. வர்த்தக திணைக்களம், அதன் வெளிநாட்டு வர்த்தக பிரதிநிதித்துவத்தினூடாக நேரடி வெளிநாட்டு முதலீட்டினை ஊக்குவிப்பதற்கும் அவ்வாறே இலங்கை சுற்றுலாத்துறையினை ஊக்குவிப்பதற்குத் தேவையான உதவிகளையும் அவசியமான வழிகாட்டுதல்களையும்வழங்கியுள்ளது.

# வர்த்தக திணைக்களத்தின் நிருவாக கட்டமைப்பு





**Abbreviation**

| | |
|---|---|
| D | Director |
| DD | Deputy Director |
| AD | Asst. Director |
| CRO | Commercial Research Officer |
| DO | Development Officer |
| Mgt. Asst. | Management Asst. |
| KKS | Office Aid |

*Most senior (Director Level) officers are required to be posted as Ambassador/ PR to WTO, Washington, London, Brussels and Karachi.

# எமது உறவுகள்



வரிசை அமைச்சுக்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள்
உவநி மற்றும் ஏனைய வர்த்தகம் தொடர்பான நிறுவனங்கள்
வர்த்தக மன்றங்கள்
பிராந்திய மற்றும் இருதரப்பு உடன்படிக்கைகள்
ஒத்திய ல்புடன் செயலா ற்றுதல்
கேந்திர மையம் என்ற வகையில்
வர்த்தக ஊக்குவிப்பு நிறுவனங்கள்
முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகள்
தனியார் துறை
வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு மீதான கூட்டு ஆணைக் குழுக்கள்

## 2. **இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக மீளாய்வு** – 2016

வெளிநாட்டு வர்த்தகமானது அரசாங்க கொள்கையிலுள்ள இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலில் உயர்ந்தளவிலான முன்னுரிமையுடன் பேணப்பட்டு வருகின்றது. இது இலங்கையின் அபிவிருத்தி இலக்குகளினை அடைவதற்கான மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நுண்பாக பொருளியல் விடயங்களில் ஒன்றாகும். இது உலகப் பொருளாதாரத்திற்கான மிகப்பெரிய ஒருங்கிணைப்பினை அடையும் நோக்குடன், உலக வர்த்தக நிறுவனத்தின் பல்தரப்பு வர்த்தக முறைமையின் அடிப்படையிலான விதிகளுக்கமைவாக தொழிற்படுவதுடன் வெளிநோக்கிய வர்த்தக கொள்கையினை அடையும் நோக்குடனும் துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

இலக்கினை அடைந்து கொள்ளும் பொருட்டு, இலங்கையின் உற்பத்திப் பொருட்களுக்கான வெளிநாட்டு சந்தை வாய்ப்பினை வலுபடுத்துதல், வர்த்தக பகுப்பாய்வினை மேலும் வலுப்படுத்துவதன் மூலம் தேசிய சட்ட ரீதியான அபிவிருத்தியில் வர்த்தக ஊக்குவிப்பினை ஒருங்கிணைத்தல் மற்றும் தரிவுக் கொள்கைகள், நியாயமான வர்த்தக சூழலினை வசதிப்படுத்துதல் மற்றும் முதலீட்டினை ஊக்குவித்தல் உள்ளடங்கலானவை அதன் நோக்கங்களாக இருந்துள்ளன. இத்தகைய நோக்கங்கள் பலதரப்பு, பிராந்திய மற்றும் இருதரப்பு வர்த்தக பேச்சுவார்த்தைகளினூடாக நிறைவேற்றப்பட்டுள்ளன.

உலகளாவிய அளவொன்றிலான வர்த்தக சுதந்திரமளித்தலினை நோக்கியதாக பொதுவான இருந்தபோதிலும், இலங்கையானது சிறியதும் நலிவடைந்ததுமான பொருளாதாரமாக நடைமுறைகள் மற்றும் தேவைப்பாடுகள் போன்ற வரியல்லா நடைமுறைகளிலிருந்து எழுகின்ற பாதகமான விளைவுகள் கடுமையான தொழில்நுட்ப மற்றும் சுகாதார தரங்கள், சுங்க முறை மற்றும் தேவைகள் உள்ளடங்கலான பெருமளவிலான சவால்களினை எதிர்நோக்குகின்றது. வரியல்லா நடைமுறைகளின் பயன்பாடானது 2008 ஆம் ஆண்டின் பொருளாதார நெருக்கடியினைத் தொடர்ந்து தொடர்ந்தும் அதிகரித்து வந்துள்ளதுடன், அதன் ஏற்றுமதி சந்தைகளினால் வரி விடுதலையளிப்பில் ஏதேனும் முன்னேற்றங்களினை வலிதற்றதாக்குகின்ற அத்தகைய நடவடிக்கைகளின் போது இலங்கைக்கான பிரச்சனையானது தொடர்ந்துமிருக்கும்.

உலகளாவிய பொருளாதாரத்தில் வீழ்ச்சிப் போக்கானது இருந்துள்ள போதிலும், இலங்கையானத, இலங்கையின் எற்றுமதிகளுக்கான புதிய அல்லது மாற்று சந்தைகளினைக் கண்டறிதல் உள்ளடங்கலான முயற்சிகளில் அதிகம் கவனம் செலுத்தியுள்ளது. சீனா, பிறேசில், ரஷியா, துருக்கி, யப்பான், தென் கொரியா மற்றும் தென்னாபிரிக்கா போன்ற நாடுகள் வர்த்தக விரிவாக்கலுக்கான வாய்ப்புக்களைக் கொண்டுள்ள சில நாடுகளாக இனங் காணப்பட்டுள்ளன.

தற்போதிருக்கின்ற சர்வதேச சந்தைகளில் இலங்கையின் பங்கினை மேலும் அதிகரித்தலானது முக்கியத்துவம் வாய்ந்த பணியாகவும் சவால் நிறைந்த பணியாகவும் தொடர்ந்தும் இருந்து வருகின்றன. தற்போதிருக்கின்ற சந்தைகளிலுள்ள இலங்கையின் பங்கினை அதிகரிப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கைகள் குறிப்பாக, இலங்கை பங்காளராக இருக்கின்ற சுதந்திர வர்த்தக

உடன்படிக்கைள் மற்றும் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் கிடைக்கக்கூடிய சந்தை அணுகுமுறை வாய்ப்புக்களினை விரிவுபடுத்துதல் மற்றும் அதி கூடிய பயன்பாடு என்பவற்றின் மூலம், நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கூட்டு ஆணைக்குழுக்களின் கலந்துரையாடல்கள் மற்றும் வர்த்தக ஊக்குவிப்புக்கான நாடுகளுக்கிடையில் பரஸ்பர ஒத்துழைப்பினை அதிகரிப்பதற்கு வழிவகுக்கும் செயற்பாடுகள் மற்றும் வர்த்தகத்துடன் தொடர்புடைய பிரச்சனைகளுக்குத் தீர்வு காணுதல் போன்ற நடவடிக்கைகள் பின்பற்றப்படுகின்றன.


மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில், நாட்டின் சர்வதேச வர்த்தக கொள்கையானது எற்றுமதித் துறையின் விருத்தியினை நோக்கமாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த விடயத்தில், அரசாங்கமானது கிராமிய மற்றும் நகர துறைகளுக்கிடையில் தொடர்புகளை மேம்படுத்துவதற்கும் உற்பத்தி திறன்களை அதிகரிப்பதற்கும் வெளிநாட்டு வர்த்தகத்தின் பயன்களை பகிர்வதற்குமான முன்னுரிமைகளை வழங்கியுள்ளது. நாட்டின் பொருளாதார கொள்கை திட்டமிடலானது தொழில்நுட்ப புத்தாக்கத்தினை வழங்குதல், புதிய கைத்தொழில் வலயங்களில் தனியார் முதலீட்டினை வசதிப்படுத்துதல், பொதுச் சேவை வழங்கலினை தரமுயர்த்துதல் மற்றும் சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளின் (SMEs) விருத்தியினை மேம்படுத்துதல் என்பவற்றின் மூலம் கைத்தொழில் துறையில் சர்வதேச போட்டித் தன்மையினை மேம்படுத்துவதனையும் நோகமாகக் கொண்டுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஏற்றுமதிப் பங்கினை அதிகரிக்கும் நோக்குடன், அரசின் பொருளாதார கொள்கைகள் தொழில்நுட்ப அடிப்படையிலான ஏற்றுமதிகள் உலகின் வடிவமைக்கப்பட்ட ஏற்றுமதி தேவைகளுக்கான முதலீட்டாளர்களினை இனங்காணும் நோக்குடன் கவனம் செலுத்தப்பட்டுள்ளன.

### மொத்த இறக்குமதிகள், ஏற்றுமதிகள் மற்றும் வர்த்தக மீதி : 2010 – 2016 (மில்.அ.டொலர் பெறுமதியில்)

| ஆண்டு | ஏற்றுமதிகள் | வளர்ச்சி % | இறக்குமதிகள் | வளர்ச்சி % | மொத்த வர்த்தகம் | வர்த்தக மீதி |
|---|---|---|---|---|---|---|
| 2010 | 8,294 | 16.5 | 12,340 | 26.4 | 20,634 | -4,047 |
| 2011 | 10,018 | 20.8 | 19,703 | 59.7 | 29,721 | -9,685 |
| 2012 | 9,181 | -8.4 | 17,889 | -9.2 | 27,069 | -8,708 |
| 2013 | 10,009 | 9.0 | 17,098 | -4.4 | 27,107 | -7,088 |
| 2014 | 11,044 | 10.3 | 19,246 | 12.6 | 30,290 | -8,202 |
| 2015 | 10,212 | -7.5 | 18,989 | -1.3 | 29,201 | -8,777 |
| 2016 | 10,217 | 0.048 | 19,515 | 2.77 | 29,732 | -9,298 |


*மூலம்: இலங்கைச் சுங்கம்*

## 2.1 ஏற்றுமதி இறக்குமதி செயல்நிறைவேற்றம்




2016 ஆண்டு காலப்பகுதியில், இலங்கையின் மொத்த ஏற்றுமதி சம்பாத்தியமானது 10,217 மில்லியன் அ.டொலராக இருந்துள்ளதுடன் 2015 இல் அதன் பெறுமதி 10,212 மில்லியன் அ.டொலராக இருந்துள்ளது.


இலங்கையின் ஏற்றுமதி சம்பாத்தியங்களில் தைத்த ஆடைகளே முன்னிலை வகிப்பதுடன் மொத்த ஏற்றுமதி சம்பாத்தியத்தில் 45% ஆக இருப்பதுடன் 2015 உடன் ஒப்பிடுகையில் சிறியளிவிலான அதிகரிப்பினையும் (1.05%) பதிவு செயதுள்ளது. 2016 இல் இரண்டாவது மிகப் பெரிய ஏற்றுமதியாக தேயிலை விளங்கியுள்ளதுடன் (12%) அதனைத் தொடர்ந்து திண்ம மற்றும் ஏனைய ரயர்கள் (3%), இறப்பர் கையுறைகள் (2%) மற்றும் கறுவா (2%) என்பனவும் காணப்பட்டன.






2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையின் மொத்த இறக்குமதிச் செலவினம் 19,515 மில்லியன் அ.டொலருக்கு அதிகரித்துள்ளதுடன் இது 2015 இல்18,989 மில்லியன் அ.டொலராக இருந்துள்ளதுடன் 2016 இல் 2..77% வளர்ச்சியினைப் பதிவு செய்துள்ளது.

2016 இல் இலங்கையின் இறக்குமதிக் கூடையானது எரிபொருளினால் 12% பங்குடன் ஆதிக்கம் செலுத்தியுள்ளதுடன் 2015 உடன் ஒப்பிடுகையில் 21.49% வளர்ச்சியினைப் பதிவு செய்துள்ளது. மோட்டார் வாகனங்களின் இறக்குமதியும் (8%), இரும்பும் உருக்கும் (5%), துணியும் பருத்தியும் (4%) மற்றும் பிளாஸ்ரிக் பொருட்கள் (4%) என்பன ஏனைய பிரதான ஏற்றுமதிகளாகக் காணப்பட்டன.

## 2.2 2015 - 2016 வரையில் இலங்கை வர்த்தகத்தின் போக்கு




இறக்குமதி போக்கு
2016
2015
20%
22%
22%
20%
29%
27%
2%
2%
3%
3%
3%
3%
3%
2%
3%
3%
5%
5%
6%
5%
7%
5%
INDIA
CHINA
JAPAN
U.A.E.
SINGAPORE
MALAYSIA
THAILAND
U.K.
U.S.A.
TAIWAN
Other


ஐஅ.
ஐ
.ஒ.
ஐஎ.அ.
இந்தி
யா
சீனா
ஜப்பா
ன்
2016
ஏற்றுமதி (%)
ஐஒ. 30.47
ஐஅ. 27.48
இந்தியா 5.39
சீனா 1.95
ஐ.எ.அ. 2.69
2016
இறக்குமதி (%)
இந்தியா 19.61
சீனா 21.90
ஐஒ. 10.68
ஜப்பான் 4.87
ஐஅ. 2.77

## 3.பல்தரப்பு வர்த்தக உறவுகள்

இலங்கையின் பலதரப்பு வர்த்தக உறவுகள் உலக வர்த்தக நிறுவனத்தின் (WTO) உடன்படிக்கைகள் மீது கூடிய அக்கறையினைக் காட்டியுள்ளன. இலங்கையானது வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி மீதான ஐக்கிய நாடுகள் மாநாடு (UNCTAD), உலக புலமைச் சொத்துக்கள் நிறுவனம் (WIPO), சர்வதேச வர்த்தக நிலையம் (ITC) மற்றும் WTO சட்டவிதிக்கான மதியுரை நிலையம் (ACWL) ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வருகின்றது.

### 3.1 உலக வர்த்தக நிறுவனத்தில் இலங்கையின் பிரதிநிதித்துவம்

2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உலக வர்த்தக நிறுவனமானது, நைரோபியில் இடம்பெற்ற உலக வர்த்தக நிறுவனத்தின் அமைச்சர்கள் மட்டத்திலான மாநாட்டில் எடுக்கப்பட்ட அமைச்சர்களின் தீர்மானம் தொடர்பான விடயங்களின் அமுல்படுத்துவதிலும் விவசாயம், NAMA மற்றும் சேவைகள் மீதான பேச்சுவார்த்தைகளிலுள்ள பிரதான பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கான வழிமுறைகளினைக் கண்டறிவதிலும் கவனத்தினைச் செலுத்தியுள்ளது. எவ்வாறாயினும், பல்வேறு உறுப்பு நாடுகளினால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் மற்றும் வெளிப்படுத்தல்களுக்கமைவாக நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

மேலும் சில உறுப்பு நாடுகள் கோடைக்கால விடுமுறைக்கு முன்பான விவசாயம் தொடர்பான விசேட அமர்வில், உள்நாட்டு உதவு தொகைகள், சந்தை அணுகுமுறைகள், பருத்தி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாடுகள் தொடர்பான புதிய விடயங்களினைச் சமர்ப்பித்துள்ளது. எவ்வாறாயினும், விவசாய விசேட அமர்வின் தலைமையினால் குறிப்பிடப்பட்டவாறு, உறுப்பு நாடுகளுக்கிடையேயான அனுப்பும் வழிமுறை தொடர்பான தெளிவான வித்தியாசங்கள் தொடர்ந்தும் இருந்து வருகின்றன. ஜீ 33 இனால் முன்மொழியப்பட்டவாறான பொது இருப்பினைப் பேணுதல் மற்றும் விசேட பாதுகாப்பு பொறிமுறை என்பவற்றின் முன்னேற்றமும் மந்தமான செயல்முறையிலுள்ளன.

இலங்கையானது உலக வர்த்தக நிறுவனத்தினால் சிறிய நலிவடைந்த பொருளாதாரமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அமைச்சர்கள் மட்டத்திலான வெளிப்படுத்துகையின் உறுப்புரை 27 ஆனது நிலையானதும் அர்த்தமுள்ளதுமான வகையில் சிறிய மற்றும் நலிவடைந்த பொருளாதாரங்களின் தேவைகள் நிறைவேற்றுவது தொடர்பான இணக்கப்பாடுகளினை மீள் உறுதிப்படுத்தியுள்ளது. எனவே, இலங்கையானது அதன் வர்த்தகத்துடன் தொடர்புடைய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக உலக வர்த்தக நிறுவனத்தினூடாக தொழில்நுட்ப மற்றும் திறன் விருத்தி உதவுகையினைக கோருவதற்கான வாய்ப்பினைக் கொண்டுள்ளது. அத்துடன், அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டத்தில் சிறிய பொருளாதாரங்கள் தொடர்பான வேலை நிகழ்ச்சித்திட்டத்தினை தொடர்ந்து முன்னெடுப்பது தொடர்பான மீள்

உறுதிப்படுத்துகையானது, உலக வர்த்தக நிறுவனத்தின் அபிவிருத்தி தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து பயன்களைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பினை மேலும் வழங்குகின்றது.

இலங்கையின் உலக வர்த்தக நிறுவனப் பிரதிநிதித்துவமானது பின்வருவன உள்ளடங்கலாக குறித்த காலப்பகுதியில் இலங்கைக்கு பல்வேறு வர்த்தகம் மற்றும் முதலீடு தொடர்பான விடயங்களில் கொள்கை மதியுரையினை வழங்கியுள்ளது:.

- இலங்கை– ஐ.ஒ. கூட்டுப் பொருளாதார ஆணைக்குழுக்கான தயார்படுத்தல் குறிப்பு
- உ.வ.நிறுவனத்தின் கீழ் தகைமை பெற்ற முதலீட்டு வலயங்கள் தொடர்பான மதியுரைக் குறிப்பு
- உ.வ.நி தகவல் தொழில்நுட்ப உடன்படிக்கை (ITA) மீதான தொழில்நுட்பக் குறிப்பு
- அஸ்பெஸ்ரஸ் இறக்குமதி மீதான தடை மற்றும் உ.வ.நிறுவனத்தின் கீழான அதன் சட்ட அமுலாக்கல்கள் தொடர்பான குறிப்பு
- உலக வர்த்தக நிறுவன சட்டவிதிகளுடன் இலங்கையின் ஏற்றுமதியுடன் தொடர்புடைய மானியங்கள் மற்றும் நடைமுறைகளினை மீளாய்வு செய்யும் உத்தேச நடவடிக்கைகளின் ஒத்திசைவு தொடர்பான குறிப்பு
- மானியங்கள் மற்றும் எதிரீட்டு நடவடிக்கைகள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பான உலக வர்த்தக நிறுவன உடன்படிக்கையின் இணைப்பு VII இலிருந்தான இலங்கையின் தகுதிநிலையினை அமுலாக்குவது தொடர்பான குறிப்பு.
- வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கையின் அமுலாக்கல் தேவைப்பாடுகள் தொடர்பான மதியுரைக் குறிப்பு
- நியூசிலாந்திலிருந்து பால்மாவின் இறக்குமதி தொடர்பான விடயங்கள் குறித்த மதியுரைக் குறிப்பு
- இலங்கையில் ஐரோப்பிய ஒன்றியத்தினால் நிதியளிக்கப்பட்ட திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான தகவல்
- இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தங்கள் தொடர்பான குறிப்பு
- பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகளின் அண்மைய விருத்திகள் தொடர்பான மதியுரைக் குறிப்பு

இலங்கையானது உலக வர்த்தக நிறுவனத்தில், 2016 ஆம் ஆண்டுக்கான உலக வர்த்தக நிறுவன ஆசிய பசுபிக் குழுவிற்கான இணைப்பாளராக பெயர் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் இலங்கையானது குழுக்களின் நடவடிக்கைகளுக்கு புத்துயிரூட்டுவதற்கான புதிய நடவடிக்கைகளினை மேற்கொண்டிருந்தது. வர்த்தக திணைக்களமானது உலக வர்த்தக நிறுவனத்தின் தூதரக உள்ளக நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வர்த்தக திணைக்களத்தின் இரண்டு அதிகாரிகளுக்கு முழுமையாக நிதியளிக்கப்பட்ட உள்ளக நிகழ்ச்சித்திட்டதிற்கான வாய்ப்பினைப் பெற்றுள்ளதுடன் குறித்த காலப்பகுதியில் பயிற்சியளித்தல் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான உலக வர்த்தக நிறுவனத்தினால் (ITTC)

நடாத்தப்பட்ட பத்து பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டங்களில் இலங்கையின் பங்குபற்றுதலுக்கான வாய்ப்பினையும் உறுதிப்படுத்தியுள்ளது. இத்தகைய முயற்சிகளின் விளைவாக, குழுவின் முறையான தொடர்பாடல் அமர்வானது உலக வர்த்தக நிறுவனத்தில் 2016 ஏப்பிரல் 19 ஆம் திகதியன்று நடாத்தப்பட்டது. இந்த அமர்வானது உலக வர்த்தக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம், திரு.ரொபேட்டோ அசிவேடோவினால நடாத்தப்பட்டதுடன் விவசாய விசேட அமர்வு தொடர்பான உலக வர்த்தக நிறுவன குழவிற்கு தூதுவர் வஞ்சலிஸ் விற்றாலிஸ் தலைமை தாங்கினார்.

உலக வர்த்தக நிறுவனத்தின் நியம மற்றும் வர்த்தக விருத்தி வசதிப்படுத்தல் பிரிவுடன் (STDF) ஒருங்கிணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட இலங்கையின் கறுவா கைத்தொழில் தொடர்பான விசேட அமர்வொன்று 2016 ஜூன் 21 ஆம் திகதியன்று நடாத்தப்பட்டது. இந்த அமர்வானது அண்மையில் தாபிக்கப்பட்ட இலங்கையின் சிலோன் சினமன் அக்கடமியின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரான திரு.சரதா டி சில்வா கலந்து கொண்டார். இந்த அமர்வில் இலங்கையானது கறுவாக் கைத்தொழிலினை விரிவாக்கும் நோக்குடன் WTO, UNCTAD, UNIDO, WIPO, ITC போன்ற சர்வதேச முகவராண்மைகளினால் சாத்தியமான உதவுகையும் இலங்கையில் கறுவாக் கைத்தொழிலின் தனிச் சிறப்பியல்பினை வெளிக்கொணரக் கூடியதாக இருந்துள்ளது.

இலங்கையில் மென்பொருள் கைத்தொழிலினை விருத்தி செய்யும் நோக்குடன் உலக வர்த்தக நிறுவனத்தில் 2016 நவம்பர் 04ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட சிறிய பொருளாதாரங்கள் தொடர்பான வர்த்தக மற்றும் அபிவிருத்தி மீதான விசேட அமர்வு தொடர்பான உலக வர்த்தக நிறுவன குழுவில் இலங்கையானது இது தொடர்பில் ஆராய்வதற்கு ஏற்பாடு செய்திருந்தது. இத்தகைய உலகளாவிய வர்த்தகத்தில் சிறிய பொருளாதாரங்கள் பங்குபற்றுவதில் எதிர்நோக்குகின்ற விசேட சவால்கள் குறித்து ஆராய்வதற்கு சிறிய பொருளாதாரங்கள் மீதான CTD விசேட அமர்வானது நிகழ்ச்சித் திட்டமொன்றினைப் பின்பற்றுகின்றது. இத்தகைய விசேட அமர்வில் தனது செயலாற்றுகையினை வெளிப்படுத்துவதற்கு இது இலங்கைக்குக் கிடைத்த இரண்டாவது சந்தர்ப்பமாகும்.

## 3.2 **இலங்கையின் நான்காவது உலக வர்த்தக நிறுவன வர்த்தக கொள்கை மீளாய்வு**:

இலங்கையின் நான்காவது வர்த்தக கொள்கை மீளாய்வானது, 2010 – 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியினை உள்ளடக்கும் வகையில் 2016 நவம்பர் 1 – 3 வரையில் ஜெனிவாவில், உலக வர்த்தக நிறுவனத்தில் நடாத்தப்பட்டது.

வர்த்தக திணைக்களமானது 2010 – 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியினை உள்ளடக்கியதாக தயாரிக்கப்பட்ட அரசாங்க அறிக்கை குறித்து உரிய அக்கறைதாரர்களுடன் உசுகையினை மேற்கொண்டு வருகின்றது.

இலங்கையானது, மீளாய்வு காலப்பகுதியில் இலங்கையின் வர்த்தக கொள்கை மாற்றங்கள் தொடர்பாக 24 நாடுகளிலிருந்து 100 இற்கும் அதிகமான எழுத்து மூலமான கோரிக்கைகளினைப் பெற்றுள்ளது. வர்த்தக திணைக்களம் மற்றும் உலக வர்த்தக நிறுவன பிரதிநிதி ஆகியோர் உரிய வரிசை அமைச்சுக்களுடன் இணைந்து இத்தகைய வினாக்களுக்கான விடைகளினை வழங்குவதற்காக ஒருங்கிணைந்து செயற்பட்டு வருகின்றார்கள்.

இலங்கையின் வர்த்தக கொள்கை தொடர்பாக கருத்து வழங்குகையில், ஐக்கிய அமெரிக்காவின் பிரதிநிதியானவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியில் மனித உரிமைகள், ஜனநாயகம் மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்கு என்பன மேம்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளார். நீண்ட காலமாக நீடித்திருந்த உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் ஜனநாயக மரபுகள் தொடர்பான இணக்கப்பாடுகள் புத்துயிர் பெற்றுள்ளதுடன், ஐக்கிய அமெரிக்காவானது நாட்டின் பொருளாதாரத்தினை மீளக் கட்டியெழுப்புதல், மேம்படுத்துதல் மற்றும் உலகளாவிய ஒருமைப்பாட்டினை முன்னெடுத்தல் போன்றவற்றிற்கான தனது ஆதரவனைத் தொடர்ந்தும் நல்கி வருகின்றது. நல்லாட்சி, உறுதியான பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் சமாதானம் என்பவற்றுடன் இணைந்த வகையில் இலங்கையானது அனைத்து இலங்கையர்களுக்கும் வளமானதொரு எதிர்காலத்தினை வழங்குமென ஐக்கிய அமரிக்கா கருதுகின்றது. இலங்கையின் மரபு ரீதியான ஏற்றுமதிகளான தைத்த ஆடைகள் மற்றும் விவசாயம் போன்ற ஏற்றுமதிகளுக்கான பெறுமதி சங்கிலியினை மேம்படுத்துவதன் மூலம் வளர்ச்சிக்குத் தேவையான வாய்ப்புக்கள் கிடைக்கப் பெறுகின்றன. வேகமாக வளர்ச்சியடைந்து வரும் தகவல் தொழில்நுட்பத் துறையானது இலங்கையின் ஏற்றுமதிகளுக்கு உறுதுணையாக அமையும். ஐக்கிய அமெரிக்கப் பிரதிநிதியானவர், இலங்கையுடனான அமெரிக்காவின் உறவுகளை வலுவாக்குதற்கும் மேம்படுத்துவதற்கும் விரும்புவதாக மேலும் தெரிவித்துள்ளார். அண்மையில் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்கள் இலங்கைக்கான இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி உதவுகை நிகழ்ச்சித்திட்டங்களினை விரிவாக்குதல் என்பவற்றிற்கான நம்பிக்கையினைத் தோற்றுவித்துள்ளன. ஐக்கிய அமெரிக்காவானது வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் முதலீடு என்பவற்றினை விரிவாக்குவதற்கான ஐந்து வருட இருதரப்புக் கூட்டுச் செயற்பாடொன்றினை அமுலாக்குவது தொடர்பில் இலங்கையில் நெருங்கிப் பணியாற்றுவதற்கு எதிர்பார்த்துள்ளது.

வர்த்தக கொள்கை மீளாய்வில் அதன் தலையீட்டினைத் தொடர்ந்து, ஐரோப்பிய ஒன்றியமானது நல்லாட்சி மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்கு என்பன உள்ளடங்கலான பல்வேறு துறைகளில் மேம்பாடுகள் எற்படுவதற்கு இலங்கை

அரசாங்கமானது நடவடிக்கை எடுத்துள்ளமையினையும் அதன் மறுசீரமைக்கப்பட்ட நிகழ்ச்சிநிரலினை அமுலாக்குவதில், குறிப்பாக இலங்கையினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்தும் கருத்துரை வழங்கியுள்ளது. புதிய இலங்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் உறுதியானதும் ஆற்றல் மிக்கதும் மிகவும் திறந்த பொருளாதார கொள்கையினைக் கொண்டதுமான நடவடிக்கைகள் தொடர்பான செயல்முறைக்கு ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ந்தும் தனது ஆதரவினை வழங்கி வருகின்றது. GSP+ இற்கான இலங்கையின் விண்ணப்பம் தொடர்பில், விண்ணப்பம் தொடர்பான தொழில்நுட்ப மதிப்பீடானது தற்போது நடைபெற்று வருவதுடன் அதன் தீர்மானம் குறித்து இலங்கைக்கு நவம்பர் மாத இறுதியில் அறியத்தரப்படும். இறுதி தீர்மானமானது ஐரோப்பிய ஒன்றியத்தினால் 2017 மே மாதத்தின் இறுதியில் எடுக்கப்படும். ஐரோப்பிய ஒன்றியமானது 2015 இல் இலங்கையின் மொத்த வர்த்தகத்தில் 27% இனைக் கொண்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இலங்கைக்குமிடையிலான மொத்த பொருட்களின் வர்த்தகமானது € 4.7 பில்லியனாக இருந்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியமானது ஒப்பிட்டு ரீதியாக முன்னணி உதவி வழங்கும் அமைப்பாக இருந்து வருகின்றது. 2005 இலிருந்து 2015 வரையிலான காலப்பகுதியில், ஐரோப்பிய ஒன்றியம் € 500 மில்லியன் பெறுமதியான உதவு தொகையினையும் € 250 மில்லியன் பெறுமதியான சலுகைக் கடனையும் இலங்கைக்கு வழங்கியுள்ளது. 2014 இலிருந்து 2020 வரையிலான காலப்பகுதிக்கான இருதரப்பு அபிவிருத்தி உதவு தொகையானது € 210 மில்லியனாகும். இதற்கும் மேலாக, € 08 மில்லியன் வர்த்தகத்துடன் தெடர்புடைய திறன் விருத்தி உதவு தொகையாக அளிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய கலந்து கொள்ளலின் போது, கனடாவானது 2009 இல் அடையப்பெற்ற சமாதானத்தில் பங்கெடுக்கும் முகமாக மூலதன உதவியினைத் தொடர்ந்து நல்கி வரும் நாடு என்ற வகையில் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு தொடர்ந்து ஆதரவளிக்கும் பங்காளராக இருந்து வருவதாக தெரிவித்தள்ளது. இலங்கையானது சுற்றுலா, கடற் பயணத்துறை, புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் உள்ளக கட்டமைப்பு கருத்திட்டங்கள் போன்ற வியக்கத்தக்க பொருளாதார சாத்தியப்பாடுகள் நிறைந்த துறைகளினைக் கொண்டுள்ளது. கனடாவானது பொருளாதார அபிவிருத்திக்கான ஆதரவினை வழங்கும் வகையில் இலங்கையின் கருத்திட்டங்களுக்கு தொடர்ந்தும் முதலீடு செய்து வருகின்றது. கனடா அரசாங்கமானது எதிர்பார்க்கப்படும் நிலையான வர்த்தக சூழலினைப் பேணுவதற்குத் தேவையான மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு இலங்கைக்கு தொடர்ந்தும் ஊக்கமளித்து வருகின்றது.

இதில் கலந்துகொண்ட இந்திய பிரதிநிதி தனது நாட்டிற்கும் இலங்கைக்குமிடையில் பல நூற்றாண்டு கால நட்புறவும் நாகரீகத் தொடர்புகளும் காணப்படுவதாக குறிப்பிட்டிருந்தார். இரண்டு நாடுகளுக்குமிடையில் புவியியல், வரலாறு, சமய,மொழி, கலாச்சார மற்றும் வியாபார ரீதியாக நெருங்கிய தொடர்புகள் காணப்படுகின்றன. அண்மைய ஆண்டுகளில், இரண்டு நாடுகளுக்குமிடையிலான அனைத்துத் தொடர்புகளும் உயர்ந்த மட்டத்தில் முறையான பரிமாற்ற அடிப்படையில் மேலும் விரிவாக்கப்பட்டு வலுப்படுத்தப்பட்டுள்ளன. இந்தியாவும் இலங்கையும் மிகவும் நெருங்கியதும் நெகிழ்வுத் தன்மை கொண்டதுமான பொருளாதார மற்றும் வர்த்தக பங்குடமை உறவுகளைப் பேணி வருகின்றன. இந்தியா தென்னாசியப் பிராந்தியத்தில் இலங்கையின் மிகப் பெரிய வர்த்தகப் பங்காளி நாடாகும். இரண்டு நாடுகளுக்குமிடையிலான மொத்த வர்த்தகமானது 6 பில்லியன் அமெரிக்க டொலர்களை விஞ்சியுள்ளது. இலங்கையுடனான இந்தியாவின் பல்துறை சார்ந்த அபிவிருத்தி ஒத்துழைப்பு பங்குடமையானது 2.6 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான திரண்ட அபிவிருத்தி கடன் இணக்கப்பாடுகளுடனான அபிவிருத்திக் கருத்திட்டங்களினை உள்ளடக்குகின்றது.

இதில் கலந்து கொண்ட அவுஸ்திரேலியா ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகளுக்கான தனியொரு இலத்திரனியல் மார்க்கம், தரிவு கட்டமைப்பினை இலகுவாக்குதல் மற்றும் கணிய ரீதியான மட்டுப்படுத்தல்கள் என்பவற்றிற்கான பங்களிப்பு உள்ளடங்கலான வெளிநாட்டு முதலீடுகளினைக் கவருவதற்கான இலங்கையின் முயற்சிகள் குறித்தும் கருத்துரை வழங்கியுள்ளது.

மீளாய்வு செயல்முறைக் காலப்பகுதியில், நியூசிலாந்து நாடானது 2010 இல் இடம்பெற்ற இலங்கையின் இறுதி வர்த்தக கொள்கை மீளாய்வினூடாக இலங்கையின் உறுதியான பொருளாதார செயல்நிறைவேற்றம் ஏற்பட்டிருப்பதை தனது வரவேற்பதாகவும் குற்றிப்பிட்டுள்ளது. தேசிய நல்லிணக்க செயல்முறை, அரசியலமைப்பு மறுசீரமைப்பு மற்றும் புனருத்தாராணம் மற்றும் வளர்ச்சி என்பவற்றினை நோக்காகக் கொண்ட கொள்கை என்பன இலங்கையானது சரியான வளர்ச்சிப் பாதையில் பயணிப்பதை உறுதி செய்கின்றன. இது தற்போதைய வர்த்தக உடன்படிக்கைகள், பின்பற்றப்படும் ஏற்றுமதி ஊக்குவிப்புத் தந்திரோபாயம் என்பன தொடர்பில் மீளப் பேச்சுவாரத்தையினை நடாத்துவதற்கான இலங்கையின் பிரதான முன்னுரிமைகளினை வரவேற்பதுடன் மேலும் வெளிநாட்டு நேரடி முதலீடு மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தலினை மேம்படுத்தல் என்பனவற்றினையும் ஊக்குவிக்கின்றது. இத்தகைய வெளிப்படையானதும் எதிர்வு

கூறக்கூடியதுமான வர்த்தக சூழலினைப் பேணும் இத்தகைய நடவடிக்கைகள் இலங்கையின் தொடர்ச்சியான வளர்ச்சிக்குப் பங்களிப்பினை வழங்கும். இலங்கைத் தேயிலை மற்றும் கறுவா மற்றும் நியூசிலாந்து பாற் பண்ணை உற்பத்திப் பொருட்கள் போன்ற இரண்டு நாடுகளுக்குமிடையில் மேற்கொள்ளப்படுகின்ற தரமான உற்பத்திப் பொருட்கள் குறித்த வர்த்தகத்தினை வரவேற்கின்றது.

சீனாவானது இலங்கையின் பொருளாதார செயல்நிறைவேற்றத்தினை வரவேற்கும் அதேவேளையில், இரண்டு நாடுகளக்குமிடையில் பல ஆண்டுகளாக உறுதியான பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகள் பேணப்பட்டு வருவதனையும் குறிப்பிட்டுள்ளது. சீனாவானது இலங்கையின் 2 ஆவது மிகப் பெரிய வர்த்தகப் பங்காளி நாடாகவும் வெளிநாட்டு முதலீட்டின் 3 ஆவது நாடாகவும் விளங்குகின்றது. இலங்கையின் திரண்ட முதலீடானது 2015 இறுதியில் 890 மில்லியன் அமெரிக்க டொலர்களினை அடையப் பெற்றிருப்பதுடன் இந்த வருடத்தின் ஆகஸ்ட் மாதம் வரையில் அது தொடர்ந்தும் இருந்து வருகின்றது. சீனாவிலிருந்தான புதிய முதலீடுகள் வருடா வருட அடிப்படையில் 70% இனால் அதிகரித்துள்ளது. சீனாவானது இன்று இலங்கைக்கான மிகப் பெரிய சுற்றுலா மையமாகவும் விளங்கி வருகின்றது. சீனாவானது சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பான நடைமுறை பேச்சுவார்த்தைகளினை விரைவாக வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கின்றது.

சோவியத் ரஷிய ஒன்றியப் பிரதிநிதிகள் தமது கருத்துக்களினைத் தெரிவிக்குகையில், உள்நாட்டுப் பிரச்சனைக்குத் தீர்வு காணப்பட்டதன் பின்னர் இலங்கையின் பொருளாதார செயலாற்றுகையில் மிகவும் அக்கறை கொண்ட நாடாக தமது நாடு இருப்பதாக தெரிவித்துள்ளார்கள். அத்துடன் அவர்கள் ரஷியாவுக்கான முன்னணி தேயிலை ஏற்றுமதியாளர்களில் ஒன்றாக இலங்கை விளங்குவதுடன் இருதரப்பு வர்த்தகத்திலும் படிப்படியான முன்னேற்றம் காணப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளனர். ரஷியா 7 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கையில் முதலீடு செய்துள்ளது.

உலக வர்த்தக நிறுவனத்திற்கான பாகிஸ்தானிய தூதுவர் இலங்கையின் பொருளாதார செயலாற்றுகை குறித்து தனது பெருமித்தினை வெளிப்படுத்தியுள்ளார். மேலும் அவர் விரிவான பொருளாதார பங்குடமையினூடாக இலங்கையுடனான இருதரப்பு வர்த்தக உறவுகளை மேலும் விரிவாக்குவதற்கான தனது நாட்டின் விருப்பத்தினையும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அதனையொத்த சம்பிரதாயங்கள் தென் கொரியா, சிங்கப்பூர், மலேசியா, மொரிசியஸ், எல் சல்வடோர், மொன்ரெனகுறோ, கௌதமாலா, நேபாளம், யப்பான் மற்றும் கென்யா போன்ற நாடுகளின் பிரதிநிதிகளினால் வெளிப்படுத்தப்பட்டன.

வர்த்தக கொள்கை மீளாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பெரும்பாலான உறுப்பினர்கள், எதிர்பார்க்கத்தக்கதும் திரண்ட தரிவு மற்றும் வரிக் கட்டமைப்புக்கான இலங்கையின் அக்கறை குறித்தும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளுக்கான உள்ளக கட்டமைப்பினை மேலும் மேம்படுத்துவது குறித்தும் கவனம் செலுத்தியுள்ளனர். இலங்கையானது வெ ளிப்படையானதும் எதிர்பார்க்கப்படக்கூடியதுமான வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைகளினூடாக வெளிநாட்டு நேரடி முதலீட்டினை கவர்வதற்கான சாத்தியப்பாட்டினைக் கொண்டுள்ளது.

நான்காவது வர்த்தக கொள்கை மீளாய்வுக்கான இலங்கைத் தூதுக்குழுவானது கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் கௌரவ.ரிசாட் பதியுதீன் அவர்களின் தலைமையில் வர்த்கப் பணிப்பாளர் நாயகம் மற்றும் நிதி அமைச்சின் வர்த்தக மற்றும் முதலீட்டுத் திணைக்களம், இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி மற்றும் இலங்கை முதலீட்டுச் சபை ஆகியவற்றின் சிரேஷ்ட அதிகாரிகளினை உள்ளடக்கியிருந்தது.

### 3.2.1. **உலக வர்த்தக நிறுவனத்தில் "ஆசியாவில் மேலோங்கி வரும் இலங்கையின் பொருளாதார நிலை"**:

உலக வர்த்தக நிறுவனத்தில் 2016 நவம்பர் 1 – 3 வரை இடம் பெற்ற இலங்கையின் நான்காவது வர்த்தக கொள்கை மீளாய்வினைத் தொடர்ந்து இலங்கையினை மேம்படுத்துவதற்கான நிகழ்வொன்றினை தூதரகம் ஏற்பாடு செய்திருந்தது. இந்த நிகழ்வில், உலக வர்த்தக நிறுவனத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் ஜொனோவ் பிரெட்டரிக் அகாவ் கலந்து கொண்டார். இலங்கைத் தூதுக்குழுவிற்கு கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் கௌரவ.ரிசாட் பதியுதீன் தலைமை தாங்கியுள்ளதுடன் இலங்கையின் பொருளாதார முன்னேற்றம் குறித்து "ஆசியாவில் மேலோங்கி வரும் பொருளாதார முன்னேற்றம்" எனும் தலைப்பின் கீழ் அவர் அங்கு உரையாற்றினார். இந்த நிகழ்வில் 150 இற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் கலந்து கொண்டிருந்தார்கள். இலங்கைப் பொருளாதாரம் மற்றும் வர்த்தக செயற்பாடுகள் தொடர்பில் விரிவான சொற்பொழிவொன்று இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சிப் பிரிவின் மேலதிக பணிப்பாளரினால் ஆற்றப்பட்டது. குறுக்கு வினாக்களுக்கான விடையளித்தல் அமர்வின் மூலம் தகவல் பரிமாற்றம் மேற்கொள்ளப்பட்டது. பல்வேறு

பங்குபற்றாளர்கள் புதிதாக தாபிக்கப்பட்ட தேசிய ஐக்கிய அரசாங்கத்தின் அரசியல், வர்த்தக மற்றும் பொருளாதார மறுசீரமைப்பினூடாக இலங்கையானது பொருளாதார வளர்ச்சியில் மிகப் பெரிய சாதனையைப் புரிந்துள்ளதாக அவர்களின் நம்பிக்கையினைப் பதிவு செய்துள்ளனர்.

பார்வையாளர் சபையானது உலக வர்த்தக நிறுவனத்தின் உறுப்பு நாடுகள், உலக வர்த்தக நிறுவனத்தின் சிரேஷ்ட உறுப்பினர்கள், சர்வதேச வர்த்தக நிலையம், உலக பொருளாதார மன்றம், அங்ராட் மற்றும் உலக வர்த்தக நிறுவன சட்டம் தொடர்பான மதியுரை நிலையம் போன்றவற்றினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றது.

## 3.3. **வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி மீதான ஐக்கிய நாடுகள் மாநாடு** (UNCTAD):

அங்ராட் அமைச்சர்கள் மட்டத்திலான மாநாட்டின் அமர்வு XIV ஆனது கென்யா நைரோபியில் 2016 ஜூலை17 – 22 வரையில் நடாத்தப்பட்டது. இலங்கைத் தூதுக்குழுவுக்கு கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் கௌரவ.ரிசாட் பதியுதீன் தலைமை தாங்கினார். சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர் கௌரவ. சுஜீவ சேனசிங்க, கென்யாவுக்கான இலங்கைத் தூதுவர், உலக வர்த்தக நிறுவனத்தின் நிரந்தர பிரதிநிதி / தூதுவர் மற்றும் வர்த்தகத் திணைக்களம், முதலீட்டுச் சபை மற்றும் வெளி விவகார அமைச்சு ஆகியவற்றினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிரேஷ்ட அதிகாரிகளும் இலங்கைத் தூதுக்குழுவில் உள்ளடங்கிருந்தனர்.

மாநாடானது, அமைச்சர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தைகள், பொருண்மை சார்ந்த நிகழ்வுகள், உயர் மட்ட வட்ட மேசை மாநாடுகள், உலக முதலீட்டு மன்றம், உலக வியாபார பண்ட மன்றம், இளைஞர் மன்றம் மற்றும் சிவில் சமூக மன்றம் என்பவற்றினைக் கொண்டிருந்தது. மாநாடானது அடுத்த நான்கு வருடங்களுக்கான அங்ராட்டின் பணிகளினை நிர்ணயிக்கின்ற “நைரோபி அலிமியோ” (அரசியல் பிரகடனம்) மற்றும் “நைரோபி மாபிகியானோ” (நைரோபி உடனிணக்க வெளிப்பாடு) ஆகிய இரண்டினதும் உடன்பாட்டின் மூலமாக நடாத்தப்பட்டது.

இத்தகைய இரண்டு ஆவணங்களும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் மற்றும் அபிவிருத்தியடைந்த நாடுகள் என்பவற்றிற்கிடையில் நியாயமான வர்த்தகம் இடம்பெறுவதனை உறுதி செய்வதனை நோக்காகக் கொண்டுள்ளதுடன் முன்னைய அங்ராட் உடன்படிக்கைகள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதனை உறுதி செய்வதனையும் நோக்காகக் கொண்டுள்ளன.

நைரோபி மாபிகியானோ ஆனது வர்த்தகம் மற்றும் அபிவிருத்திக்கு உள்ளடங்கிய வகையில் சமமான பொருளாதார சூழலினை நோக்கியதாக அதன் அபிவிருத்தியடைந்து வரும் உறுப்பு நாடுகளுக்கு அங்ராட் நிறுவனம்

உதவியளிக்க முடியமான பின்வரும் நான்கு பிரதான துறைகளில் கவனம் செலுத்துகின்றது.

1. வர்த்தகம் மற்றும் உடனடுத்துவரும் நான்கு வருடங்களில் வர்த்தகத்திற்கான பல்தரப்பு வாய்ப்புக்கள் மற்றும் சவால்களினை எதிர்கொள்ளும் வகையில் அங்ராட்டின் பங்களிப்பு
2. மாபிகியானோ ஆவணமானது வர்த்தகம், முதலீடு, நிதி மற்றும் அனைத்தையும் அடைவதற்கான தொழில்நுட்பம் என்பவற்றினூடாக அனைத்தும் உள்ளடங்கலான நிலையான பொருளாதார வளர்ச்சியினை மேம்படுத்துவது தொடர்பில் பல்வேறு பங்களிப்புக்களினை அங்ராட் வழங்கி வருவதாக தெரிவிக்கின்றது. இது வறுமையினை ஒழித்தல், வேலைவாய்ப்பினை ஏற்படுத்துதல், தொழில்நுட்ப தரமுயர்த்தல், பொருளாதார பல்வகைப்படுத்தல் மற்றும் வருமான ஏற்றத்தாழ்வினை குறைத்தல் என்பற்றினை பிரதான நோக்காகக் கொண்டுள்ளது.
3. அடுத்துவரும் நான்கு ஆண்டுகளில் அங்ராட் கவனம் செலுத்தும் மூன்றாவது விடயமானது பொருளாதார கட்டமைப்பு நிலைமாற்றம் மற்றும் பொருளாதார உறுதியினைக் கட்டியெழுப்புவதற்கான ஒத்துழைப்பு என்பவற்றில் முன்னேற்றத்தினை ஏற்படுத்தும்.
4. கவனம் செலுத்தும் நான்காவது விடயம் வர்த்தகம் மற்றும் அபிவிருத்தியுடன் தொடர்புடைய உலகளாவிய மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகளிலிருந்து நிலையான அபிவிருத்தி மற்றும் உரிய வெளியீடுகள் என்பவற்றிற்கான 2030 நிகழ்ச்சிநிரலின் வினைத்திறன் வாய்ந்த அமுலாக்கத்திற்கு பங்களிப்பினை வழங்குகின்றது.

## 3.4. **வர்த்தக வசதிப்படுத்தல் தொடர்பான உடன்படிக்கை**:

உலக வர்த்தக நிறுவன வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கை தொடர்பான மரபுச் சீர்முறையினை ஏற்கும் இலங்கையின் ஆவணமானது 2016 மே 31 ஆம் திகதியன்று உலக வர்த்தக நிறுவனத்திற்கான நிரந்தர பிரதிநிதியினால் உலக வர்த்தக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் திரு.ரொபேர்டோ அஷேவெடோவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இலங்கையானது, உலக வர்த்தக நிறுவனத்தின் வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கையினை உறுதிப்படுத்துவது தொடர்பில் உலக வர்த்தக நிறுவனத்துடன் அதன் ஏற்றுக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையினை வைப்புச் செய்யும் 81 ஆவது உறுப்பினராகும். தற்போதைய உறுப்புரிமையின் மூன்றில் இரண்டு பங்கினர் (110) உடன்படிக்கையினை ஏற்றுக் கொண்டதனையடுத்து

உடன்படிக்கையானது பயனுறுதியாகும். 2017 ஜனவரி 10 ஆம் திகதியன்று 105 உலக வர்த்தக நிறுவன உறுப்பினர்கள் வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கையினை ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

வர்த்தகத் திணைக்களமானது வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கையின் வினைத்திறன் வாய்ந்த அமுலாக்கலுக்காக இலங்கைக்கு தொழில்நுட்ப மற்றும் திறன் விருத்தி உதவுகையினை இனங் காண்பதற்காக உலக பொருளாதார மன்றம், UNIDO மற்றும் உலக சுங்க நிறுவனம் என்பவற்றினூடாக உலக வர்த்தக நிறுவனம், உலக வங்கி குழு, சர்வதேச வர்த்தக நிலையம் மற்றும் வர்த்தக வசதிப்படுத்தலுக்கான உலக கூட்டமைப்பு என்பவற்றுடன் இணைந்து பணியாற்றுகின்றது. அமைச்சரவையானது உரிய வர்த்தக வசதிப்படுத்தலினை மேற்கொள்ளும் அரசாங்க முகவராண்மைகள் மற்றும் தனியார் துறை வர்த்தக மன்றங்கள் என்பவற்றின் மூலம் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தேசிய வர்த்தக வசதிப்படுத்தல் குழுவினை தாபிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. இலங்கையானது வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கையின் அமுலாக்கல் தேவைப்பாட்டிற்காக முதன்மை இணைப்பாளராக உலக வங்கி குழுவினை தெரிவு செய்துள்ளது. இதனால் தேசிய வர்த்தக வசதிப்படுத்தல் குழுவானது (NTFC) உலக வங்கி குழுவுடன் மிகவும் நெருக்கமாக பணியாற்றுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

உலக வங்கி குழுவானது தேவையான தொழில்நுட்ப, நிதியிடல் மற்றும் உள்ளக கட்டமைப்பு விருத்தி உதவுகை என்பவற்றுடன் அமுலாக்கல் தேவைப்பாடுகளினை திட்டமிடுவதற்காக 2016 ஆகஸ்ட் மற்றும் நவம்பரில் இலங்கைகு வருகை தந்து வகையீடு "இ" இணக்கப்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்கி இரண்டு செயலமர்வுகளை நடாத்தியது.

இலங்கையில் வர்த்தக சுதந்திர உடன்படிக்கையின் அமுலாக்கம் தொடர்பில் திரண்ட மற்றும் அதிக கவனம் செலுத்துதல் போன்றவற்றினை ஒழுங்கமைக்கும் பொருட்டு 2016 ஜூலை 25 ஆம் திகதியன்று ஜெனிவாவில் முகவராண்மைகளுக்கிடையிலான ஒருங்கிணைவின் முதலாவது கூட்டம் நடாத்தப்பட்டது.

## 3.5 இலங்கையில் குவிப்பெதிர்ப்பு, எதிரீட்டு நடவடிக்கைகளினைப் பாதுகாத்தல் தொடர்பான சட்டவாக்கத்தினை சட்டமாக்குதல்

இலங்கையில் குவிப்பெதிர்ப்பு, எதிரீட்டு நடவடிக்கைகளினைப் பாதுகாத்தல் தொடர்பான சட்டவாக்கத்தினை சட்டமாக்கும் நடவடிக்கையானது நீண்டகாலமாக நிறைவேற்றப்படாதுள்ளது. 2005 மே 12 ஆம் திகதியன்று நிறைவேற்றப்பட்ட பாராளுமன்ற தீர்மானத்தின்படி, அமைச்சரவையானது பாராளுமனறத்தில் இந்தச் சட்டவாக்கம் தொடர்பான வரைபினை சமர்ப்பிப்பதற்கு அங்கீகாரமளித்துள்ளது. இரண்டு சட்டமூலங்கள் 2006 ஜனவரியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் இரண்டாவது

வாசிப்பானது 2006 ஏப்பிரலில் இடம்பெற்றது. மேற்குறித்த இரண்டு சட்டமூலங்களின் ஏற்பாடுகளின் எண்ணிக்கை குறித்துப் பாராளுமன்றத்தல் பல உறுப்பினர்களினால் வினாக்கள் எழுப்பப்பட்டுள்ளதுடன் இந்த விடயம் தொடர்பில் விரிவாக கலந்துரையாடுவதற்காக பல ஆலோசனைக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. இத்தகைய ஆலோசனைக் குழுக் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்ட வினாக்களுக்கமைவாக, இரண்டு சட்ட மூலங்களின் வரைபில் பொருத்தமான திருத்தங்களினை மேற்கொள்வதற்கு சட்ட வரைஞர் திணைக்களம் தீர்மானித்தது.எவ்வாறாயினும், பாராளுமன்றமானது 2010 பெப்ரவரியில் கலைக்கப்பட்டமையினால், இரண்டு சட்ட மூலங்களும் வலுவிழந்தமையாக கருதப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, இன்னொரு அமைச்சரவை பத்திரமானது 2014 ஜூலையில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் இதனை முன்னுரிமை வாய்ந்த விடயமாக கவனத்தில் கொண்டு வரைபு சட்டவாக்கமானது நிதி திட்டமிடல் அமைச்சின் அலோசனைகள் மற்றும் அவதானங்களினைக் கருத்தில் கொண்டு சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு குறிப்பீடு செய்யப்பட்டது. அதற்கிணங்க, வர்த்தக திணைக்களமானது கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சினூடாக புதியதொரு அமைச்சரவை பத்திரத்தினை சமர்ப்பித்துள்ளதுடன் அமைச்சரவையானது அதன் செயல்முறையினூடாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு 2016 ஒக்டோபர் 18 ஆம் திகதியன்று அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## 3.6 நுகர்வுப் பொருட்களுக்கான பொது நிதியம்

நுகர்வுப் பொருட்களுக்கான பொது நிதியமானது ஐக்கிய நாடுகள் சபையின் சட்டஎல்லைக்குள் 1989 இல் தன்னியக்கமாக அரசாங்கங்களுக்கிடையிலான தாபிக்கப்பட்ட நிதி நிறுவனமாகும். இது 101 ஐக்கிய நாடுகள் உறுப்பு நாடுகளுடன் பத்து அரசாங்கங்களுக்கிடையிலான நிறுவனங்கள் உள்ளடங்கலான 111 தரப்புக்களின் பங்குடமையொன்றினை தாபித்துள்ளது. இலங்கையானது நுகர்வுப் பொருட்களுக்கான பொது நிதியத்தின் ஆரம்ப கால உறுப்பினராக இருப்பதால் தேயிலை, பாற் பண்ணை உற்பத்திகள், கறுவா, தும்பு, மூங்கில், இறப்பர், தெங்கு மற்றும் மீன்பிடி உற்பத்திகள் போன்ற நுகர்வுப் பொருட் துறைகளின் துறைகளிலிருந்து நுகர்வுப் பொருட்களுக்கான பொது நிதியத்திலிருந்து பயன்களைப் பெற்றுள்ளது. நுகர்வுப் பொருட்களுக்கான பொது நிதியமானது, நுகர்வுப் பொருட் தயாரிப்பாளர்களின் சமூக பொருளாதார அபிவிருத்தியினை விரிவாக்குவதற்கான ஆணையின்படி, மானியங்கள், கடன்களை வழங்குவதனூடாக நுகர்வுப் பொருட் துறையில் தொழிற்பாட்டாளர்களுக்கான அதன் ஆதரவினைத் தொடர்ச்சியாக வழங்கி வருவதுடன் முழுமையாக சமூகத்தின் அபிவிருத்திக்கான அதன் பங்களிப்பினை வழங்கியும் வருகின்றது.

1989 இல்பொது நிதியம் தாபிக்கப்பட்டதிலிருந்து பலவேறு மாற்றங்களுக்குட்பட்டிருந்த பொது நிதிய தாபித்தல் உடன்படிக்கையின்

பல்வேறு விடயங்களை அங்கீகரித்துள்ள நுகர்வுப்பொருட்களுக்கான பொது நிதிய அங்கத்தவர்கள், தற்போதிருகின்ற சர்வதேச அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கினை நிறைவேற்றும் வகையில் உடன்படிக்கையில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு உடன்பட்டுக் கொண்டார்கள். அதற்கிணங்க, நிறைவேற்றுச் சபையின் பரிந்துரை மற்றும் நுகர்வுப் பொருட்களுக்கான பொது நிதியத்தின் பேரவையின் அங்கீகாரம் என்பவற்றின் அடிப்படையில் பரிந்துரையின் அடிப்படையில் மறுசீரமைப்பு நடவடிக்கையானது ஆரம்பிக்கப்பட்டது. பூர்வாங்க உடகன்படிக்கைக்கான பல்வெறு திருத்தங்களினை ஆய்வு செய்ததன் பின்னர், திருத்தப்பட்ட உடன்படிக்கையின் இறுதி வடிவம் தயாரிக்கப்பட்டது. பூர்வாங்க உடன்படிக்கையின் இத்தகைய திருத்தங்கள், நுகர்வுப் பொருட்களுக்கான பொது நிதியத்தின் உறுதிப்படுத்தல் / அங்கீகாரம் குறித்த அனைத்து உறுப்பினர்களும் அவர்களின் தமது ஆவணங்களைச் சமர்ப்பித்ததும் வலிதானவையாகும்.

அதற்கிணங்க, வர்த்ததகத் திணைக்களமானது கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சினூடாக 2016 ஒக்டோபரில் நுகர்வுப் பொருட்களுக்கான பொது நிதியத் தாபித்தல் தொடர்பான திருத்தப்பட்ட உடன்படிக்கையினை ஏற்றுக் கொள்வது தொடர்பான ஆவணத்தினை சமர்ப்பிக்குமாறு கோரி சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்திற்கான அங்கீகாரம், கௌரவ. சட்டமா அதிபரிடமிருந்து திருத்தியமைக்கப்பட்ட வரைபிற்கான சட்ட விடுவிப்புச் சான்றிதழினைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு 2016 நவம்பரில் பெற்றுக் கொள்ளப்பட்டது.

## 3.7 வர்த்தக முன்னுரிமைகளின் பூகோள முறைமை (GSTP)

வர்த்தக முன்னுரிமைகளின் பூகோள முறைமை தொடர்பான உடன்படிக்கையானது, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கிடையில் 1989 இல் தாபிக்கப்பட்டது. GSTP ஆனது தெற்கு – தெற்கு வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பினை அதிகரிக்கும் நோக்குடன் வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி மீதான ஐக்கிய நாடுகள் மாநாட்டின் (UNCTAD) கீழ் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்ட தரிவு முன்னுரிமை முறைமையாகும்.

இத்திட்டத்தின் கீழ் இலங்கையானது, 2016 ஆண்டு காலப்பகுதியில், 45.14 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியுடைய பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதுடன் 0.03 மில்லியன் அ.டொலர் பெறுமதியான பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இலங்கையானது பிரதானமாக கறுவாவினை மெக்ஸிக்கோவுக்கும் பெருவுக்கும் ஏற்றுமதி செய்துள்ளதுள்ளதுடன் இத்திட்டத்தின் கீழ் இது 2015 ஐ விட 4 மில்லியன் அமெரிக்க டொலரால் குறைடைந்துள்ளது.

## 3.8 குறித்த ஆண்டு காலப்பகுதியில் EU GSP முறைமை மற்றும் ஏனைய GSP முறைமைகளில் எற்பட்ட முன்னேற்றங்கள்

### 3.8.1 EU GSP முறைமை

ஐரோப்பிய ஆணைக்குழு மற்றும் ஐரோப்பிய பாராளுமன்றம் என்பன 2014.01.01 இலிருந்து பயனுறுதியான புதிய ஜீஎஸ்பி இக்கு அங்கீகாரத்தினை வழங்கியுள்ளது. இந்தப் புதிய திட்டத்தின் கீழ், இலங்கையானது புதிய திட்டத்தின் கீழ் ஜீஎஸ்பி முன்னுரிமை நியமங்களுக்கான நன்மைகளைத் தொடர்ந்தும் பெற்று வருகின்றது.

மேலும், 2014 இலிருந்து, EU GSP திட்டத்தின் குறுக்குப் பிராந்திய திரட்சியின் ஏற்பாடுகளின் கீழ், இலங்கையானது உற்பத்தி செய்யப்படாத புகையிலையினைத் ஒன்றுதிரட்டுவதற்கான உரித்துடமையினைக் கொண்டுள்ளதுடன், இந்தோனேசியாவில் உற்பத்தி செய்யப்பட்ட 2401 எச்எஸ் தலைப்பினை மறுதலிக்கும் புகையிலையினை சுருட்டுத் தயாரித்து ஐரோப்பிய ஒன்றியத்துக்கு அவற்றினை உரித்துடமையினையுங் கொண்டுள்ளது.

#### 3.8.1.1 இலங்கைக்கான EU GSP+ இனை மீளப் பெறுதல்

வர்த்தக திணைக்களமானது இலங்கைக்கான GSP+ வசதியினை மீளப் பெறுவது தொடர்பில் உப குழுவுடன் ஆலோசனை நடாத்தியுள்ளதுடன் பல்வேறு கலந்துரையாடல்கள் மற்றும் மீளாய்வுக் கூட்டங்கள் என்பவற்றினைத் தொடர்ச்சியாக நடாத்தியதன் பின்னர் 27 ஐக்கிய நாடுகள் மற்றும் சர்வதேச தொழில் நிறுவன மாநாடுகளில் எற்பட்ட முன்னேற்றம் இணக்கப்பாடு குறித்த அனைத்து தகவல்களையும் சேகரித்துள்ளது. அனைத்துத் துணை இணைப்புக்களையும் உள்ளடக்கியதான இறுதி அறிக்கையானது 2016 ஜூன் 14 ஆம் திகதியன்று பிரஸல்ஸிலுள்ள இலங்கைத் தூதரகத்தினூடாக ஐரோப்பிய ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது. விண்ணப்பம் பெற்றுக் கொள்ளப்பட்டமை தொடர்பில் வர்த்தகப் பணிப்பாளர் நாயகத்திற்கு 2016 ஜூலை 12 ஆம் திகதியன்று ஐரோப்பிய ஆணைக்குழுவிற்கான வர்த்தகப் பணிப்பாளர் உறுதி செய்துள்ளார். அதனைத் தொடர்ந்து, 2016 நவம்பரில் ஐரோப்பிய ஆணைக்குழுவிற்கான வர்த்தகப் பணிப்பாளர் ஐரோப்பிய பாராளுமன்றத்தின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றது இலங்கைக்கு GSP+ வசதியினை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளதாக முறைப்படி அறிவித்துள்ளார்.

### 3.8.2 US GSP முறைமை

2013 ஜூலை 31 ஆம் திகதியன்று வலுவிழந்த The US GSP நிகழ்ச்சித்திட்டமானது, 2015 ஜூன் 29 ஆம் திகதியன்று சட்டவாக்கமாக சட்டமாக்கப்பட்டு 2017 டிசம்பர் 31

வரையில் முன்னுரிமைகளின் பொதுவான முறைமை என மீளவும் அதிகாரமளிக்கப்பட்டது. சட்டமூலமானது, 2013 ஜூலை 31 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் பிற்தேதியிடப்பட்டதுடன் ஜீஎஸ்பி நன்மைகளுக்கும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஏனைய GSP கூட்டமைப்புக்களுடன் சேர்ந்து இலங்கையானது குறைவிருத்தி நாடுகள் (LDCs) மற்றும் ஆபிரிக்க வளர்ச்சி மற்றும் வாய்ப்புச் சட்ட (AGOA) நாடுகளில் தயாரிக்கப்பட்ட பிரயாணப் பொருட்களுக்கான முன்னுரிமைகளின் பொதுவான முறைமையின் கீழ் (GSP) தீர்வையற்ற வரிச் சலுகையினை வரிவாக்கியுள்ள அனைத்து GSP பயனாளி நாடுகளிடமிருந்தான பிரயாணப் பொருட்களுக்கு (HS 42002) சுங்கத்தீர்வையற்ற நடைமுறையினை விரிவாக்குமாறு ஐக்கிய அமெரிக்க நிருவாகத்திற்கு கோரிக்கையொன்றினை 2017 ஆண்டின் முன்பகுதியில் முன்வைத்துள்ளது.

### 3.8.3 ஜப்பானிய ஜீஎஸ்பி முறைமை

ஜப்பான் தற்காலிக தரிவு அளவீடுகள் சட்ட வலுவாக்கலுக்கான கட்டளைச் சட்டத்தின் திருத்தத்தின் அடிப்படையிலான முன்னுரிமைகளின் பொதுவான முறைமையின் கீழ் முன்னுரிமை மூலவிதிகளின் இலகுவாக்கலினை அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது

பொருட்கள் (ஒற்றைச் செயல்முறை விதி), துணிகளிலிருந்து தயாரிக்கப்படுகின்ற போது பொருட்களின் மூலத்தன்மையினைக் கொண்டுள்ளதாக தகைமையினைப் பெறுகின்ற இசைவுக்குட்பட்ட முறைமையின் (தைத்த ஆடை மற்றும் ஆடை துணைப் பொருட்கள், முடிச்சுப் போட்ட அல்லது பின்னிய அத்தியாயம் 61 இல் திருத்தங்களுடன், வகைப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளன. இது 2015 ஏப்பிரல் 1 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வந்தது.

## 3.9 இலங்கையிலிருந்தான குறித்த சில புதிய காற்றழுத்தத்தினால் இயக்கப்படும் ரயர்களின் ("OTR") எதிரீட்டு தீர்வை விசாரணை

ஐக்கிய அமெரிக்க வர்த்தக, சர்வதேச வர்த்தக நிருவாக திணைக்களமானது இலங்கையிலிருந்தான குறித்த சில காற்றழுத்தத்தினால் இயக்கப்படும் ரயர்களின் (OTR) உதவு தொகையளிக்கப்பட்ட இறக்குமதி தொடர்பில் 2016 ஜனவரி 08 ஆம் திகதியன்று முறைப்பாடொன்றினை தாக்கல் செய்துள்ளது.

இந்த முறைப்பாடானது ரைட்டான் ரயர் கூட்டுத்தாபனத்தினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் இருப்பு, கடதாசி மற்றும் காட்டியல், இறப்பர், தயாரிப்பு, வலுவாக்கம் போன்றவற்றுடன் தொடர்புடைய கைத்தொழில்

மற்றும் சேவை தொழிலாளர்களின் சர்வதேச ஐக்கிய ஒன்றியத்தினால் ("முறைப்பாட்டாளர்கள்") ஐக்கிய அமெரிக்க வர்த்தகத் திணைக்களத்திடம் இலங்கையிலிருந்தான குறித்த சில காற்றழுத்தத்தினால் இயக்கப்படும் ரயர்களின் (OTR) உதவு தொகையளிக்கப்பட்ட இறக்குமதி தொடர்பிலான குற்றச்சாட்டுக்கள் குறித்த 22 நிகழ்ச்சித்திட்டங்கள் குறித்து விசாரணையினை ஆரம்பிக்குமாறு முறையிட்டுள்ளன.

மேற்குறித்த முறைப்பாட்டில், இலங்கையிலிருந்தான அத்தகைய பொருட்களின் இறக்குமதி காரணமாக ஐக்கிய அமெரிக்க உள்நாட்டுக் கைத்தொழிலுக்கான மூலப் பொருளுக்கு பாதிப்பு ஏற்படுவதாகவும் அல்லது அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாகவும் மேலும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

முறைப்பாட்டில் கீழ்க்காணும் இலங்கை உற்பத்தியாளர்கள் தொடர்பில் ஏற்றுமதி பிரதியீடு தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது;

- ஏற்றுமதி அபிவிருத்தி பரிசளிப்புத் திட்டம்
- மரபு சாரா உற்பத்திகளின் ஏற்றுமதியாளர்களுக்கான வரிச் சலுகைகள்
- உற்பத்தியளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களின் வழங்கல்களுக்கான ஊக்குவிப்புக்கள்
- ஏற்றுமதி உற்பத்தி கிராம கம்பனிகளுக்கான வரி விலக்களிப்புக்கள் மற்றும் வரிச் சலுகைகள்
- ஏற்றுமதி அபிவிருத்தி வரிக் கழிவுகளுக்கான ஊக்குவிப்புக்கள்
- உயர் முதலீடுகளுடனான குறித்த சில வியாபாரங்களுக்கான ஊக்குவிப்புக்கள்
- ஏற்றுமதியாளர்களுக்கான பெறுமதிசேர்வரிமுன்னுரிமைகள்
- தேசக் கட்டுமான வரி முன்னுரிமைகள்
- தீர்வைக் கழிவுத் திட்டம்
- துறைமுக மற்றும் விமான நிலைய வரிச் சலுகைகள்
- மூலதன மற்றும் நடுத்தரப் பொருட்கள் மீதான பிசுக்கால் விதிப்பனவுகளுக்கான விலக்களிப்புக்கள் / வரிச் சலுகைகள் பொருட்கள்
- ஏற்றுமதி கடன் காப்புறுதி
- ஏற்றுமதி கடன் உத்தரவாதங்கள்

ஐக்கிய அமெரிக்க சர்வதேச வர்த்தக ஆணைக்குழுவானது (ITC) அதன் ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து மேற்குறித்த பிரதியீட்டுப் பொருட்கள் குறித்த குற்றச்சாட்டினால் உள்நாட்டுக் கைத்தாழிலுக்கு பாதிப்பு ஏற்படுவதாக ஏற்றுக் கொண்டுள்ளதுடன் ஐக்கிய அமெரிக்க வர்த்தக திணைக்களமானது அத்தகைய இறக்குமதிகள் இலங்கையில் எதிரீட்டு உதவுதொகைகளினைப் பெறுகின்றனவா என்பதனை உறுதிப்படுத்துவதற்கு தொடர்ந்து விசாணைகளினை முன்னெடுக்கும்.

அதற்கிணங்க, ஐக்கிய அமெரிக்க வர்த்தக திணைக்களமானது பூர்வாங்க விசாரைணைகைகான வினாக் கொத்தினை இலங்கை அரசாங்கத்திடமும் Camso Loadstar (Pvt) Ltd எனும் பெயரினைக் கொண்ட இலங்கை ஏற்றுமதியாளரிடமும் வழங்கியுள்ளது.

இலங்கை வர்த்தக திணைக்களமானது சட்டமா அதிபர் திணைக்களம் உள்ளடங்கலான அனைத்து அக்கறைதாரர்களின் உதவுகையுடன் பூர்வாங்க விசாரணைக்கும் குறைநிரப்பி வினாக் கொத்திற்குமான பதிலினை வழங்கியுள்ளது.

2016 ஜூன் 13 ஆம் திகதிய திணைக்களத்தின் பூர்வாங்க விசாரணையின் போது எதிரீட்டுத் திர்வைகள் பின்வருமாறு கணிப்பிடப்பட்டுள்ளதாக அறிய முடிந்துள்ளது.

- பூர்வாங்க விசாரணை 2.9 (மரபு ரீதியற்ற பொருட்களின் ஏற்றுமதி யாளர்களுக்கான வரிச் சலுகைகள் மற்றும் தேசக் கட்டுமான வரி 2.9 எனும் பெயரிலான இரண்டு குற்றச்சாட்டுக்கள்)
- உத்தரவாதமளிக்கப்பட்ட விலை நிகழ்ச்சித்திட்டத்திற்கான 0.88 பின்னதான பூர்வாங்க விசாரணை

சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் ஐக்கிய அமெரிக்க வர்த்தக திணைக்களத்திற்கான ஐக்கிய அமெரிக்க சட்டவாளர் நிறுவனம் ஆகியவற்றின் உதவுகையுடன் பூர்வாங்க மற்றும் குறைநிரப்பி வினாக்கொத்துக்களுக்கான அனைத்துப் பதில்களும் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், ஐக்கிய அமெரிக்க வர்த்தக திணைக்கள அதிகாரிகளினைக் கொண்ட தூதுக்குழுவானது அரசாங்க நிறுவனங்களிலும் (உள்நாட்டு இறைவரித் திணைக்களம், நிதி அமைச்சு மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு) விசாரணைகளினை மேற்கொள்வதற்காக 2016 ஆகஸ்ட் 23 இலிருந்து 26 வரையிலும் Camso Loadstar (Pvt) Ltd இல் விசாரணை மேற்கொள்வதற்காக 2016 ஆகஸ்ட் 29 இலிருந்து செப்ரெம்பர் 02 ஆம் திகதி வரையிலும் இலங்கைக்கு வருகை தந்திருந்தனர். அவர்களின் விஜயத்திற்கு கொழும்பிலுள்ள வரத்தகத் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன்

இலங்கையிலுள்ள உள்ளூர் அதிகாரிகளுடனான தமது விசாரணைகள் நிறைவு பெற்றுள்ளதாகவும் அறிவித்துள்ளனர்.

இலங்கையிலிருந்தான குறித்த சில காற்றமுழுத்தத்தினால் இயக்கப்படும் ரயர்களுக்கான (OTR) CVD விசாரணை குறித்த பொதுமக்களின் கருத்துக்களினைக் கேட்டறியும் நிகழ்வானது, நவம்பர் 03 ஆம் திகதியன்று ஐக்கிய அமெரிக்க வர்த்தக திணைக்களத்தில் நடாத்தப்பட்டது. இலங்கை அரசாங்கமானது அத்தகைய மூன்று நிகழ்ச்சித்திட்டங்களும் கவனத்தில் கொள்ளத்தக்கவையல்ல என வாதிட்டுள்ளதுடன் SCM உடன்படிக்கையின் இணைப்பு VII (ஆ) இன் நியதிகளின்படி, 2015 டிசம்பர் 31 வரையில் ஏற்றுமதி உதவுதொகைகளினை வழங்குவதிலிருந்து இலங்கையானது தடுக்கப்பட்டிருக்கவில்லை எனவும் சுட்டிக் காட்டியுள்ளது.

ஐக்கிய அமெரிக்க வர்த்தக திணைக்களமானது Camso Loadstar (Pvt) Ltd மற்றும் எனைய இலங்கை OTR ஏற்றுமதியாளர்களுக்கான 2.18% CVD வரி வீதம் தொடர்பான அதன் இறுதி தீர்மானத்தினை அறிவித்துள்ளது.

# 4. இருதரப்பு வர்த்தக பொருளாதார ஒத்துழைப்பு

2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில், இலங்கையானது அதன் பிரதான வர்த்தக பங்காளி நாடுகளுடனும் அவ்வாறே ஏனைய நாடுகளுடனும் இருதரப்பு வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு ஆகியவற்றினை மேம்படுத்துவது தொடர்பில் கூடிய கவனம் செலுத்தியுள்ளது. ரஷியா, ஐரோப்பிய ஒன்றியம், இரான், ஐக்கிய அமெரிக்கா, பெலாரஸ், பங்களாதேஸ் மற்றும் துருக்கி என்பவற்றுடனான வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக அமைந்துள்ளன. மீளாய்வு காலப்பகுதியில், இலங்கையானது, இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் கைச்சாத்திட்டுள்ள இருதரப்பு சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் (FTA) மற்றும் சீனா, இந்தியா மற்றும் சிங்கப்பூருடனான உத்தேச சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் என்பவற்றின் கீழ் அதன் வர்த்தக நலன்கள் குறித்து சமமான முக்கியத்துவத்தினை வழங்கியுள்ளது.

## 4.1 இந்தியாவுக்கான சந்தை அணுகுமுறையினை மேம்படுத்தவதற்கான பேச்சுவார்த்தைகள்

### 4.1.1 இந்திய – இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

2000 ஆண்டிலிருந்து அமுலுக்கு வந்த சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது இரண்டு நாடுகளுக்குமிடையில் மேற்கொள்ளப்படும் வர்த்தகத்தினை விரிவாக்குவதில் பங்களிப்பினை வழங்கி வருகின்றது. சுங்கத் தீர்வையின்றி இந்திய சந்தைக்கான இலங்கையின் ஏற்றுமதிகள் 2000 ஆம் ஆண்டில் 8.6

மில்லியன் அமெரிக்க டொலரிலிருந்து 2016 ஆம் ஆண்டு 375.2 மில்லியன் அ.டொலருக்கு அதிகரித்திருந்தது. திணைக்களமானது சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான அமுலாக்கல் தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு உள்நாட்டிலுள்ள அக்கறைதார்களுடனும் அவ்வாறே இந்தியாவிலுள்ள வர்த்தகப் பங்காளிகளுடனும் தொடர்ச்சியான பேச்சுவாரத்தைகளில் ஈடுபட்டு வருகின்றது. இத்தகைய பிரச்சனைகள் ETCA பேச்சுவார்த்தை செயல்முறையின் முக்கிய பகுதியாக கருதப்படுகின்றது. 2016 இல் நடாத்தப்பட்ட இத்தகைய பேச்சுவார்த்தைகளின் போது, இலங்கை தரப்பானது தெங்கு தொடர்பான உற்பத்திப் பொருட்கள், விலங்குணவு என்பவற்றுடன் தொடர்புடைய சுங்க விடுவிப்பு தொடர்பாக தீர்க்கப்படாதுள்ள சில பிரச்சனைகள் குறித்தும் அவ்வாறே சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இந்தியாவுக்கான ஸ்ரோபரி ஏற்றுமதி தொடர்பான சில பிரச்சனைகளுக்கும் தீர்வு காண முடிந்துள்ளது.

### 4.1.2. **இந்திய - இலங்கை பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை** (ETCA)

இந்திய – இலங்கை பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கையின் முதலாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் 2016 ஆகஸ்ட் 09 – 10 ஆம் திகதிகளில் கொழும்பில் நடாத்தப்பட்ட அதேவேளையில் இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் புதுடில்லியில் 2016 செப்ரெம்பர் 29 – 30 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டது.

முதலாவது சுற்றுப் பேச்சுவார்த்தையின் போது, உடன்படிக்கை குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டு இரு தரப்பினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் இலங்கை தரப்பினால் வழங்கப்பட்ட உடன்படிக்கை தொடர்பான பூர்வாங்க கருத்துரைகளினை வழங்குவதற்கும் இந்திய தரப்பு உடன்பட்டுக் கொண்டது. இலங்கை ஏற்றுமதியாளர்கிளனால் எதிர்நோக்கப்படும் தரிவல்லா வர்த்தக நடவடிக்கைகள் (NTMs) தொடர்பில் 2015 நடுப்பகுதியில் இலங்கையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல் திரட்டிற்குப் பதிலளிக்கு முகமாக, இந்திய தரப்பானது 2 ஆம் சுற்றுப் பேச்சுவார்த்தைக்கு முன்பாக அதற்கான பதிலை அனுப்பி வைப்பதற்கு உடன்பட்டுக் கொண்டது. இலங்கையினால் அளிக்கப்பட வேண்டிய (TOR) குறிப்பீட்டு நியதிகளுக்காக தாபிக்கப்படவிருக்கும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையிலுள்ள விடயங்களுக்குத் தீர்வு காண்பதற்கான கட்டமைக்கப்பட்ட பொறுமுறையொன்று குறித்தும் உடன்பாடு காணப்பட்டது. மிளகு மற்றும் தைத்த ஆடைகள் குறித்து

வலியுறுத்திய குறித்த கோட்டாப் பங்கினை நீக்குவதற்காக இலங்கை தரப்பினால் முன்வைக்கப்பட்ட ETCA இன் முன்கூட்டியே அறுவடை செய்யும் முறைமை குறித்தும் இலங்கை தரப்பினால் கலந்துரையாடப்பட்டது. அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தகம் அமைச்சினால் ETCA இன் கீழான பேச்சுவார்த்தைகளுக்காக 07 தொழிற்படு குழுக்கள் தாபிக்கப்பட்டன. இத்தகைய பேச்சுவார்த்தைகளின் தொழில்நுட்பம் சார்ந்த விடயங்களுக்கு வர்த்தக திணைக்கள அதிகாரிகள் உதவியளித்துள்ளனர்.

இரண்டாவது சுற்றின் போது, NTM தகவல் திரட்டிற்கான இந்திய தரப்பின் பதிலளிப்பு மற்றும் தைத்த ஆடைகள், மிளகு, தேயிலை மற்றும் வனஸ்பதி என்பன தொடர்பான கோட்டாப் பங்கினை நீக்குவதற்கான இலங்கையின் கோரிக்கை என்பன தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதுடன் இந்திய தரப்பானது அவர்களின் அக்கறைதாரர்கள் மற்றும் முன்னைய அதிகாரிகளுடன் இது குறித்து கலந்தாலோசிப்பதற்கு உடன்பட்டுக் கொண்டது. இரண்டு தரப்புக்களும் பொருட்களின் வர்த்தகம் மற்றும் சேவைகளின் வர்த்தகம் தொடர்பில் பரஸ்பர அங்கீகார உடன்படிக்கைகளினை (MRAs) கையாள்வதன் முக்கியத்துவம் குறித்தும் உடன்பட்டுக் கொண்டன. இலங்கையானது ETCA இலை கைச்சாத்திடுவதற்கு முன்பாக நிறைவான நோக்குடன் முன்கூட்டியே அறுவடை செய்யும் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் வர்த்தக வசதிப்படுத்தலின் அமுலாக்கத்திற்கான மீளாய்வு செய்யப்பட்ட வரைபு பொறிமுறையினை வழங்குவதற்கும் உடன்பட்டுக் கொண்டது. தொழிற்படு குழுக்கள் உடன்படிக்கையின் இயைபான வரைபு தொடர்பில் தனித்தனியாக சந்தித்து கலந்துரையாடியுள்ளன.

## 4.2. பாகிஸ்தானுக்கான சந்தை அணுகுமுறையினை மேம்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகள்

### 4.2.1 பாகிஸ்தான் – இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (PSFTA)

2005 இல் செயற்பாட்டுக்கு வந்த பாகிஸ்தான் – இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையினைத் தொடர்ந்து இரண்டு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு வர்த்தகம் கணிசமானளவு பங்களித்துள்ளது.

இலங்கைச் சுங்கத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற தரவுகளுக்கமைய, மீளாய்வு காலப்பகுதியில் PSFTA இன் கீழ் பாகிஸ்தானுக்கான ஏற்றுமதிகள் 51.60 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்துள்ளதுடன் PSFTA இன் கீழான பாகிஸ்தானிடமிருந்தான இறக்குமதிகள் 20.72 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்துள்ளது.

மீளாய்வு காலப்பகுதியில் PSFTA இன் கீழ் ஏற்றுமதி செய்யப்பட்ட பிரதான உற்பத்திப் பொருட்களாக தெங்கு, வெற்றிலை, காய்ந்த தேங்காய் , 9 மி.மி. இனை விஞ்சிய தடிப்பினைக் கொண்ட MDF, ஏனை கறுப்புத் தேயிலை மற்றும் பகுதியளவில் வேதியல் மாற்றத்திற்குட்பட்ட தேயிலை போன்றன உள்ளடங்கியுள்ளன.

மீளாய்வு காலப்பகுதியில் PSFTA இன் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட பிரதான உற்பத்திப் பொருட்களினுள் இரும்பின் இணைக்கப்பட்ட அல்லது சுற்றுக் குறுக்கு முகம் அல்லது கலப்பில்லா உருக்கு, அரிசி, புதிய தோடம்பழங்கள், 50 கி.கி இற்குக் குறைவான நிறையில் பொதியிடப்பட்ட போட்லன்ட் சீமெந்து, கோதுமை மா, இறைச்சி மற்றும் மீன் உருண்டைகள் மற்றும் முத்துச் சிப்பி நத்தை மற்றும் ஏனைய கடல் வாழ் உயிரினங்கள் என்பன உள்ளடங்கியுள்ளன.

### 4.2.1 **பாகிஸ்தானுக்கும் இலங்கைக்குமிடையிலான வர்த்தக செயலாளர்கள் மட்டத்திலான கூட்டத்தின் 6 ஆவது அமர்வு**

கொழும்பில் 2016 ஜனவரி 4 ஆம் திகதி நடாத்தப்பட்ட பாகிஸ்தானுக்கும் இலங்கைக்குமிடையிலான வர்த்தக செயலாளர்கள் மட்டத்திலான கூட்டத்தின் 6 ஆவது அமர்விற்கு இலங்கையின் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் செயலாளரும் பாகிஸ்தானிய வர்த்தக அமைச்சின் செயலாளரும் தலைமை தாங்கினர்.

கூட்டத்தில் பாகிஸ்தானிய சலுகைப் பட்டியலில் தன்னியக்கத் துறையினை மீள் இணைப்பது குறித்து கலந்துரையாடப்பட்டது. மேலும் கோட்டாப்பங்கு உற்பத்தப் பொருட்களுக்கான சந்தை அணுகுமுறையினை விரிவாக்குதல், பிணக்குத் தீர்வு முறைமை, சில இலங்கை உற்பத்திப் பொருட்களுக்கான இறக்குமதி வர்த்தக விலைகளினை விதித்தல், முதலீட்டு ஒத்துழைப்பு என்பன தொடர்பிலும் ஆராயப்பட்டது.

### 4.3 புதிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளில் கைச்சாத்திடல்:

### 4.3.1 சீனா மற்றும் இலங்கையுடனான உத்தேச சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

சீன – இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையினை ஆரம்பிப்பது தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கையானது (MoU), வர்த்தக ஒத்துழைப்பு தெடர்பான கூட்டு தொழிற்படு குழுவினால் நடாத்தப்பட்ட கூட்டு உண்மையைக் கண்டறியும் ஆய்வின் அடிப்படையில் 2014 செப்ரெம்பர் 16 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டது. சீன – இலங்கைக்கிடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் உபாய நோக்கமானது சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் / பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகளினூடாக சீனச் சந்தையில் முன்னுரிமை இறக்குமதி தீர்வைகளினை அனுபவிக்கும் ஆசிய பிராந்தியத்திலுள்ள சீனாவுக்கான எதிர் எதிர் துறைகளில் ஓர் தொழிற்பாட்டு மட்டத்தினை உருவக்குவதன் மூலம் தைத்த ஆடைகள், இறப்பரினாலான உற்பத்திப் பொருட்கள், இரத்தினக்கற்களும் ஆபரணங்களும், தெங்கினாலான பொருட்கள், குறித்த சில உணவுப் பொருட்கள் போன்ற இலங்கைக்கான உபாய ஏற்றுமதி அக்கறை குறித்த பொருட்களுக்கான சீனச் சந்தையிலுள்ள ஒருங்கிணைந்த சந்தை வாய்ப்பு அணுகுமுறையினை விரிவாக்குவதேயாகும்.

முதலாவது மற்றும் இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் முறையே 2014 செப்ரெம்பர் 17 – 19 வரையில் கொழும்பிலும் 2014 நவம்பர் 26 – 28 வரையில் பிஜ்ஜிங்கிலும் நடாத்தப்பட்டன. சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் மூன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் 2016 ஆகஸ்ட் 02 – 04 வரையில் கொழும்பில் நடாத்தப்பட்டது. இது தொடர்பான நான்காவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் 2016 நவம்பர் 21- 23 வரையில் பிஜ்ஜிங்கிலும் நடாத்தப்பட்டது.

இரண்டு தரப்பிலும் இலங்கைக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படும் பொருட்களின் வர்த்தகத்தினைப் பொறுத்த வரையில், 2016 இல் நடாத்தப்பட்ட இரண்டு சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் போது, வர்த்தக சுதந்திரமளிப்புக்கான வரையறைகள் தொடர்பில் விரவான கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டதுடன் பொருட்களின் வர்த்தகம்

தொடர்பான உறுப்புரைகளின் எண்ணிக்கை குறித்த விடயங்கள் நிறைவு பெற்றுள்ளன.

சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் இயலுமானதான வர்த்தக சுதந்திமளிப்பிலிருந்து பயனைப் பெறக்கூடிய உள்நாட்டுக் கைத்தொழில்கள் கொண்டிக்கக்கூடிய அமுலாக்கங்களினைக் கருத்தில் கொண்டு வரைபு உடன்படிக்கை குறித்த பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

பொருட்களின் வர்த்தகத்தின் கீழ் வர்த்தக சுதந்திரமளிப்புக்கான வரையறைகள் தொடர்பில் உடன்பாட்டினைக் காண்பதற்காக சீனத் தரப்பினால் அழைப்பு விடுக்கப்பட்டதுடன் இலங்கைப் பிரதம மந்திரி அவர்களும் அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக இலங்கை அமைச்சரும் சீன வர்த்தகப் பிரதி அமைச்சருக்குமிடையில் 2016 ஒக்டோபரில் கொழும்பில் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டன. அமைச்சர்கள் மற்றும் தலைவர்களின் அறிவுறுத்தல்களினைப் பின்பற்றி, சீனத் தரப்பினால் முன்மொழியப்பட்ட 90% உற்பத்தி உள்ளடக்கம் மற்றும் 10% எதிரிடைப் பட்டியல் தொடர்பான அவர்களின் கூட்டங்களில் எட்டப்பட்ட உடன்பாடானது எதிர்கால வேலையின் அடிப்படையிலானதாக அமைதல் வேண்டும். இலங்கைத் தரப்பானது அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரினால் தூதுக்குழுவிற்கு அறிவுறுத்தப்பட்டவாறு ஆகக்கூடுதலாக எதிரீட்டுப் பட்டியலின் 30% மற்றும் உற்பத்திப் பொருள் விடுவிப்பின் 70% உள்ளடக்கத்தினை விரிவாக்குமாறு குறிப்பிட்டது. இது அனைத்து வரிசை அமைச்சுக்கள், முகவராண்மைகள், தனியார் துறை கைத்தொழில் கூட்டமைப்புக்கள் மற்றும் அக்கறைதாரர்கள் போன்றவற்றுடன் ஆலோசனை நடாத்தப்பட்டு பெற்றுக் கொள்ளப்பட்ட அங்கீகாரங்களின் அடிப்படையில் பொருட்களின் பேச்சுவார்த்தைகளுக்கான அடிப்படையானதாக அமைந்திருந்ததுடன் அதற்கான பிரதிபலிப்புக்களும் கிடைக்கப் பெற்றுள்ளன.

இலங்கை தரப்பானது எதிரிடையான வர்த்தக மற்றும் பொருளாதார உறவு முறையின் அடிப்படையில் இலங்கையும் சீனாவும் மேற்கொள்கின்ற பேச்சுவார்த்தைகளின் புரிந்துணர்வினை அடிப்படையாகக் கொண்டு மூன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் மீளவும் ஆரம்பிக்கப்பட வேண்டுமென நினைவூட்டியுள்ளது. ஆகையால், இலங்கையானது, பேச்சுவார்த்தைகளின் 3 ஆவது சுற்றில்

விடுவிப்புக்களுக்கான புதிய வரையறைகளினை சமர்ப்பித்திருந்தது. சீனத் தரப்பானது பேச்சுவார்த்தைகளின் முதல் இரண்டு சுற்றுக்களின் பெறுபேற்றினைக் கருத்தில் கொள்ளுமாறு இலங்கையினை வலியுறுத்தியுள்ளதுடன் இலங்கை ஏற்றுமதியாளர்கள் சீனச் சந்தையின் பிரமாணம், எதிரிடையான தரிவுக் கட்டமைப்பு மற்றும் இரண்டு தரப்புகளின் மட்டம் என்பவற்றின் காரணமாக சீன இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையிலிருந்து அதிகளவிலான பயன்களைப் பெற முடியுமெனவும் நம்புகின்றது.

சீனத் தரப்பானது, 451 தரிவு வரிசைகளுக்கான உடனடிச் சந்தை அணுகுமுறைக்கான இலங்கையின் கோரிக்கையினை முழுமையாகத் திருப்திப்படுத்தும் சீனாவின் நிபந்தனை தொடர்பான மொத்த தரிவு வரிசைகளின் 30% நெகிழ்வுப் பொருட்களுக்கான எதிரீட்டுப் பட்டியலினைக் குறைப்பதற்காக இலங்கை தரப்பினால் தயக்கத்துடன் முன்வைக்கப்பட்டு, அமைச்சரிடமிருந்து அதற்கான அதிகாரத்தினைப் பெறப்பட்டுள்ளதை அவதானித்துள்ளது. இலங்கை தூதுக்குழுவானது, சீனாவுக்கான இலங்கையின் ஏற்றுமதிகள் நான்கிலிரந்து ஐந்து வரையில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளைமை, சீனாவின் பொருளாதார அளவும் ஆற்றலும், சிறியதும் நலிவடைந்ததுமான இலங்கையின் பொருளாதாரம் மற்றும் ஏற்றுமதிகளிடமிருந்து பெறப்படுகின்ற பயன்கள் குறித்த சாத்தியமான வருமானம் போன்ற செலவுப் பயன்வாய்ந்த காரணிகளினால் எதிரிடை பட்டியலின் உள்ளடக்கமானது 30% தரிவு வரிசைகளில் அதிகமானவற்றினை உள்வாங்குவதற்கு சாத்தியமற்றதாகி விட்டது.

சீனத் தரப்பானது, இலங்கையின் புதிய முன்மொழிவு குறித்து அதன் அதிருப்தியினைத் தெரிவித்துள்ளதுடன் தரிவு வரிசைகள் மற்றும் வர்த்தக அளவு என்பவற்றின் நியதிகளின்படி உற்பத்தி உள்ளடக்கத்தின் 90% இற்கு அமைவாக அதன் நிலைப்பாட்டினை வலியுறுத்தியுள்ளதுடன் 10% ஆகவுள்ள அதன் எதிரிடை பட்டியலானது மாற்றமடையதுள்ளது. சீனத் தரப்பானது, மொத்த தரிவு வரிசைகளின் 10% இற்கு எதிரிடைப் பட்டியலினைக் குறைப்பதற்கு இலங்கை தரப்பினை ஊக்குவித்துள்ளதுடன் ஏனைய ஆக்க முறைகள் போன்ற வரையறை கலந்துரையாடலிலுள்ள வகையீடுகளின் நிறுத்தம் மற்றும் நீண்ட நிலைமாற்ற காலப்பகுதிகளின் சாத்தியப்பாட்டினை வெளிக்கொணருதல் எனபன தொடர்பிலும் இணங்கிக் கொண்டது.

இரண்டு தரப்புக்களும் இலங்கை தரப்பினால் முன்வைக்கப்பட்ட விடிவிப்புக்கான தனியான வரையறைகள் குறித்து மேலும் பேச்சவார்த்தைகளினை நடாத்தியுள்ளன. வெற்றிகரமான காலப்பகுதியில், இலங்கை தரப்பானது மேலும் இரண்டு கட்டங்களில் பொறப்பேற்கப்படக் கூடிய விடுவிப்பு உள்ளடக்கத்தினைக் கொண்டதாக TLP I மற்றும் TLP II எனும் இரண்டு கட்டங்களைக் கொண்ட தரிவு விடுவிப்பு நிகழ்ச்சித்திட்டத்தினை முன்மொழிந்துள்ளது. இதற்குப் பதிலளித்த சீனத் தரப்பானது, அதன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் அடிப்படையில், விடுவிப்பின் குறைந்த மட்டத்தின் காரணமாக சமநிலைப்படுத்தப்பட்ட பேரம்பேசலினைப் பெற்றுக் கொள்வது மிகவும் கடினமானதெனவும் கம்பனிகள் எதிர்பார்ப்புக்கள் மற்றும் நிச்சயத்தன்மை என்பவற்றின் குறைபாடு காரணமாக நன்மைகளைபை பெற முடியாது எனவும் வலியுறுத்தியுள்ளது. இலங்கையானது குறித்த சில கைத்தொழில்கள் மீது அமுல்படுத்தப்பட வேண்டிய சீராக்கல்களுக்கு அனுமதியளிப்பதற்கு நீண்ட வர்த்தக விடுவிப்பு காலப்பகுதியினைக் கோருவதற்கு விரும்புகின்றது. பாரிய முக்கியத்துவமானது இலங்கையின் உற்பத்திப் பொருட்களுக்கான சந்தை அணுகுமுறையினை மேம்படுத்துவதற்கான தரிவல்லா தடைகளினைக் கண்டறிவதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

சீன – இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது பொருட்கள், சேவைகளின் வர்த்தகம், முதலீடு, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நியமங்கள் (SPS&TBT), பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு, சுங்க நடைமுறைகள் மற்றும் வர்த்தக வசதிப்படுத்தல், வர்த்தக நிவாரணங்கள் போன்றவற்றில் கூடிய கவனம் செலுத்துகின்றது.

சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் மூல விதிகள் குறித்த விடயமானது PSRs முன்மொழிவுகளின் மிகப் பெரிய பெரும்பான்மையின் மீது பெறப்பட்ட உடன்பாட்டின் அடிப்படையில் பேசப்பட்டது.

வர்த்தகத் திணைக்களமானது பொருட்களின் வர்த்தகம், மூல விதிகள் மற்றும் வர்த்தக நிவாரணங்கள் எனும் பெயரிலான மூன்று தொழிற்படு குழுக்களினைத் தலைமையாகக் கொண்டுள்ளதுடன் அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் கொள்கை நெறிப்படுத்தலின் கீழ் தொழிற்படும் ஏனைய ஆறு தொழிற்படு குழுக்களுக்குத் தேவையான தொழில்நுட்ப நிபுணத்துவத்தினை வழங்குகின்றது.

தனியார் துறையினைச் சேர்ந்த அக்கறைதாரர்கள் ஒன்றினை உள்ளடக்கியதாக தயாரிப்புசு செயல்முறையொன்றினைத் தயாரிப்பதற்கான சம்பவங்களின் எண்ணிக்கை குறித்து கலந்தாலோசனை நடாத்தியுள்ளனர்.

### 4.3.2 சிங்கப்பூர் மற்றும் இலங்கையுடனான உத்தேச சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

இலங்கை மற்றும் சிங்கப்பூர் ஆகியன அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் தீர்மானத்திற்கிணங்க, சிங்கப்பூரினால் நடைமுறைப்படுத்தப்படும் உண்மையினைக் கண்டறியும் ஆய்வினைத் தொடர்ந்து 2016 ஜூனில் நவீன, விரிவான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையினை முன்னெடுத்துச் செல்லவிருப்பதாக அறிவித்துள்ளன.

உத்தேச சுதந்திர வர்த்தக உடன்படிக்கையினை நோக்கு மற்றும் உள்ளடக்கம் தொடர்பில் இலங்கை மற்றும் உரிய நிறுவனங்களுடன் ஆரம்ப கட்ட பேச்சுவார்த்தைகளினை நடாத்துவதற்காக சிங்கப்பூரிலிருந்தான தூதுக்குழுவொன்று 2016 ஜூலை 7 ஆம் திகதியன்று இலங்கைக்கு வருகை தந்தது. சிங்கப்பூருக்கு கௌரவ. இலங்கைப் பிரதம மந்திரி அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட அரச முறைப் பயணத்தின் போது இலங்கைக்கான கௌரவ. அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மற்றும் சிங்கப்பூருக்கான கௌரவ. கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ஆகியோரினால் 2016 ஜூலை 18 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதுடன் பேச்சுவார்த்தையினை ஆரம்பிப்பது தொடர்பான கூட்டு அறிக்கையொன்றும் வெளியிடப்பட்டது. 2016 ஆகஸ்ட், ஒக்டோபர் மற்றும் டிசம்பரில் சிங்கப்பூருடன் மூன்று சுற்றுப் பேச்சவார்த்தைகள் கொழும்பிலும் சிங்கப்பூரிலும் நடாத்தப்பட்டுள்ளன.

வர்த்தக திணைக்களமானது தொழிற்படு குழுக்களுக்கான தொழில்நுட்ப நிபுணத்துவத்தினையும் வழங்கியுள்ளது. பொருட்களின் வர்த்தகம், வர்த்தக நிவாரணம் மற்றும் மூல விதிகள் எனும் பெயரிலான மூன்று உப குழுக்களுக்கு வர்த்தக திணைக்களம் தலைமை வகித்திருந்தது.

## 4.4 **கூட்டுப் பொருளாதார ஆணைக்குழுக்களுக்களின் பேச்சுவார்த்தைகள்** (JEC)

இலங்கையின் இரு தரப்பு வர்த்தக உறவுகளினைப் பொறுத்த வரையில், வர்த்தக திணைக்களமானது, முக்கிய வர்த்தக பங்காளர்களுடன் இணைந்து தாபித்த வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பான கூட்டு ஆணைக்குழுக்களுக்கான கேந்திர நிலையமாக வர்த்தக திணைக்களம் தொழிற்பட்டு வருகின்றது. வர்த்தக திணைக்களமானது, கூட்டு ஆணைக்குழுக்களின் தீர்மானங்களினை வகுத்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் அமுலாக்கல் நிலையிலிருந்து கூட்டு ஆணைக்குழுக்களின் கீழான இருதரப்பு வர்த்தக பேச்சுவார்த்தைகளினை நடாத்துவதற்குத் தேவையான அனைத்து தொழிற்பாடுகளினையும் நிறைவேற்றி வருகின்றது. இத்தகைய கூட்டு ஆணைக்குழு உடன்படிக்கைகள் இத்தகைய நாடுகளுக்கான இலங்கையின் ஏற்றுமதிகளினை விருத்தி செய்வதற்கும் விரிவாக்குவதற்குமான வசதிகளினை ஏற்படுத்துக் கொடுத்துள்ள அதேவேளையில் வர்த்தகம் தொடர்பான நடவடிக்கைகளில் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான ஊக்குவிப்பினையும் வழங்கியுள்ளன.

வர்த்தக திணைக்களமானது, குறித்த மீளாய்வு ஆண்டு காலப்குதியில் அமைச்சர்கள் / செயலாளர்கள் / சிரேஷ்ட அதிகாரிகள் மட்டத்தில் நடாத்தப்பட்ட பின்வரும் கூட்டு ஆணைக்குழுக்கள்/ குழுக்களின் கீழான வர்த்தகத்துடன் தொடர்புடைய வியடங்களுக்குப் பொறுப்பு வாய்ந்ததாகும்.

### 4.4.1 **இலங்கை – ரஷிய அரசாங்கங்களுக்கிடையிலான வர்த்தகம், பொருளாதாரம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மீதான கூட்டு ஆணைக்குழு**

பல்வேறு இருதரப்பு வர்த்தக, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு தொடர்பான பல்வேறு விடயங்களுக்குத் தீர்வு காண்பதற்கும் கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்குமான ஓர் முதன்மை பொறுமுறையாகத் திகழ்கின்ற வர்த்தகம், பொருளாதாரம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மீதான இலங்கை – ரஷிய அரசாங்கங்களுக்கிடையிலான கூட்டுப் பொருளாதார ஆணைக்குழுவின் முதலாவது கூட்டம் மொஸ்கோவில் 2016 பெப்ரவரி 10 இலிருந்து 12 வரையில் நடாத்தப்பட்டது.

இருதரப்பு வர்த்தக உறவுகளில் குறிப்பிடத்தக்க உள்ளார்ந்தமான தேறக்கூடியதான நிலை காணப்படாமையினால் இருதரப்பும் இருதரப்பு வர்த்தகம், முதலீடு மற்றும் விஞ்ஞான ஒத்துழைப்பினை அதிகரிக்கும் வகையிலான வழிமுறைகளினைக் கண்டறிவதில் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களினை மேற்கொண்டிருந்தன. குறித்த

கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் ரஷிய சந்தையில் இலங்கைத் தேயிலையினை ஊக்குவிப்பது குறித்தும் இலங்கை இரத்தினக் கற்களுக்கான பாரிய சந்தை வாய்ப்பினைப் பெற்றுக் காள்வது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டன.

வர்த்தகம், முதலீடு, கல்வி, கைத்தொழில், விவசாயம், சுங்கம், தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞானம் துறைகள் இலங்கைக்கும் ரஷியாவுக்குமிடையில் பாரிய ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டிய துறைகளாக இனங்காணப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் ரஷிய தரப்புக்கான முன்மொழிவுகளும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த அமர்வின், ரஷிய சந்தைக்கு இலங்கை ஏற்றுமதியாளர்கள் தமது மீன் மற்றும் மீன்பிடி உற்பத்திகளின் ஏற்றுமதிப் பொருட்களினை எற்றுமதி செய்வதற்கான அங்கிகாரத்தினை வழங்கும் பொருட்டு ரஷிய விலங்கு வேளாண்மை அதிகாரசபையின் Rosselkhoznadzor இனால் இலங்கை மீன்பிடி தாபனங்களினை ஆய்வ்வினைப் பூர்தி செய்வதற்கு அமர்வின் போது இரண்டு தரப்பும் இணங்கிக் கொண்டன. உடனடி நடவடிக்கையாக, நீண்டகாலமாக விடயமாக காணப்பட்ட ஆய்வானது 2016 மார்ச்சில் இடம்பெற்றுள்ளது. காண்புகளின் இறுதி அறிக்கையானது அவர்களின் அங்கீகாரத்தினைப் பெறும் பொருட்டு Rosselkhoznadzor இற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

### 4.4.2. **இலங்கை மற்றும் ஈரானுக்குமிடையிலான பொருளாதார ஒத்துழைப்புக்கான கூட்டு ஆணைக்குழு** (JCEC)

இலங்கை – ஈரான் பொருளாதார ஒத்துழைப்புக்கான கூட்டு ஆணைக்குழுவானது (JCEC) இரண்டு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக, கலாச்சார, கல்வி மற்றும் சமூக உறவுகளினை மேலும் விரிவாக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கை மற்றும் ஈரானுக்குமிடையிலான பொருளாதார ஒத்துழைப்புக்கான கூட்டு ஆணைக்குழுவின் 11 ஆவது அமர்வானது இலங்கையின் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் கௌரவ. ரிசாட் பதியுதின் மற்றும் ஈரானிய வலுத்துறை அமைச்சர் அதி மேதகு திரு.ஹமிட் ஹிற்செயின் அவர்களின் இணைத் தலைமையின் கீழ் 2016 பெப்ரவரி 24 – 25 வரையில் கொழும்பில் நடாத்தப்பட்டது. இரண்டு தரப்பும் வர்த்தகம், பொருளாதாரம், சுங்க ஒத்துழைப்பு, வங்கியியல்,

சுகாதாரம், விஞ்ஞானமும் தொழிநுட்பமும், கல்வியும் கலாச்சாரமும், மின்சக்தியும் வலுவும், போக்குவரத்து நிருமாண ஒத்துழைப்பு மற்றும் தொலைத்தொடர்பு உள்ளடங்கலான பரந்துப்ட துறைகளில் பொருளாதார ஒத்துழைப்பினை மேம்படுத்துவதற்கு உடன்பட்டுக் கொண்டன.

இரண்டு தரப்பும் புடவைக் கைத்தொழில், சுரங்க கைத்தொழில் மற்றும் உணவுப் பதனிடல் கைத்தொழில் ஆகிய துறைகளில் தொழில்நுட்ப ஒத்துழைப்பினை பரிமாறிக் கொள்வதற்கான தமது அக்கறையினை வெளிப்படுத்தியிருந்தன. பின்வரும் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் இரண்டு தரப்புக்களினாலும் நிறைவு செய்யப்பட்டு வருகின்றன;

- சுங்க ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை
- சுகாதார மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணம் மிதான புரிந்துணர்வு உடன்படிக்கை
- விஞ்ஞான தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் மீதான புரிந்துணர்வு உடன்படிக்கை
- நியமங்கள் மீதான புரிந்துணர்வு உடன்படிக்கை

### 4.4.3. **இலங்கை - ஐக்கிய அமெரிக்க வர்த்தக மற்றும் முதலீட்டு சட்டரீதியான உடன்படிக்கை** (TIFA)

இலங்கை – ஐக்கிய அமெரிக்க வர்த்தக மற்றும் முதலீட்டு சட்டரீதியான உடன்படிக்கை (TIFA) பேரவைக் கூட்டமானது வொஸிங்டன், டி.சி இல் 2016 ஏப்பிரல் 28 அம் திகதியன்று நடாத்தப்பட்டது.

இரண்டு அரசாங்கங்களும் ஐக்கிய அமெரிக்கா மற்றும் இலங்கைக்கிடையிலான இருவழி வர்த்தகம் மற்றும் முதலீட்டினை கணிசமானளவு அதிகரிக்கும் நோக்கத்திற்காக வர்த்தகம் மற்றும் முதலீட்டினை அதிகரிப்பதற்கான ஐக்கிய அமெரிக்க மற்றும் முதலீட்டு கூட்டுச் செயல்திட்டத்தினை பின்பற்றியுள்ளன. கூட்டுச் செயல்திட்டமானது அதன் இலக்கினை அடைந்து கொள்வதற்காக ஐந்து வருட காலப்பகுதியில் அதன் இலக்கினை அடைந்து கொள்வதனை இலக்காகக் கொண்டுள்ளது. அதன் நோக்கமானது, இலங்கையின் வர்த்தக மற்றும் முதலீட்டு முறையினை உலக நியமங்களுக்கு மாற்றுயமைத்தல், இலங்கையின் நடைமுறை எற்றுமதிகளின் போட்டித் தன்மையினை மேம்படுத்துதல், புதிய சந்தைகளினை மேம்படுத்துதல், புதிய சந்தைகளினை விருத்தி செய்தல், பிராந்திய சேவை மையமாக இலங்கையின் தகுதி நிலையினை உயர்த்துதல், ஐக்கிய அமெரிகா – இலங்கை வியாபார சமுகம் ஆகியவற்றிற்கிடையிலான

உறவுமுறையினை மேம்படுத்துதல், ஐக்கிய அமெரிக்க தரிவு முன்னுரிமை எற்பாடுகளின் பாரிய பயன்பாடு, தொழிலாளர் உரிமைகளை வலுவுட்டுதலும், இனசார் மற்றும் சூழல்சார் நிலையான தயாரிப்புத் தொழில்கள், குறிப்பாக இலங்கையின் RMG துறை, வியாபாரத் தேவைகளுக்குப் பொருத்தமான முறையில் கல்விசார் துறையினை விருத்தி செய்தல் மற்றும் வியாபாரம் மற்றும் வர்த்தக துறைகளில் விசேடமாக பெண்களை சமுகத்தின் அனைத்து துறைகளிலும் பங்கெடுக்கச் செய்யும் வகையில் நடவடிக்க எடுத்தல் என்பனவற்றினை உள்ளடக்கியுள்ளது.

ஐக்கிய அமெரிக்க மற்றும் இலங்கை வர்த்தக மற்றும் முதலீட்டு சட்டரிதியான உடன்படிக்கையானது கொழும்பில் 2016 செப்ரெம்பர் 01 இல் நடாத்தப்பட்டதுடன் இலங்கையானது கூட்டுச் செயல்திட்டத்தினை நிறைவு செய்துள்ளது.

### 4.4.4. **வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகளின் ஒத்துழைப்பு மீதான இலங்கை – ஐரோப்பிய ஒன்றிய தொழிற்படு குழு**

வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகள் ஒத்துழைப்பு மீதான இலங்கை – ஐரோப்பிய ஒன்றிய தொழிற்படு குழுவானது, இரு தரப்பு, பிராந்திய மற்றும் பல் தரப்பு மட்டங்களில் தாக்கத்தினை ஏற்படுத்தும் வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு விடயங்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக பெல்ஜியம், புருஸல்ஸில் 2016 மே 11 ஆம் திகதி சந்தித்துக் கொண்டது. 2016 ஜூன் நடுப்பகுதியிலேனும் GSP+ விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்க வேண்டிய தேவையானது, வர்த்தகப் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையிலான இலங்கைத் தூதுக்குழுவினால் நீடிக்கப்பட்டது.

### 4.4.5. **இலங்கை – பெலாரஸ் கூட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு**

இலங்கை – பெலாரஸ் கூட்டுப் பொருளாதார ஒத்துழைப்பின் 2 ஆவது அமர்வானது பெலாரஸ் குடியரசின் மின்ஸ்க் நகரில் 2016 ஆகஸ்ட் 19 ஆம் திகதியன்று நடாத்தப்பட்டது. இக்கலந்துரையாடலின் போது இரண்டு தரப்பும் இரண்டு நாடுகளுக்குமிடையில் விஞ்ஞான ஒத்துழைப்பு மீதான உடன்படிக்கையொன்றிலை கைச்சாத்திடுவதற்கு உடன்பட்டுக் கொண்டதுடன் பொருளாதார கருத்திட்டங்களை மேலும் விருத்தி

செய்வது குறித்தும் இரண்டு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக உறவுகளை விருத்தி செய்வது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் குறித்து இரு தரப்பு உறவுகளை வலுவூட்டும் பொருட்டு இரண்டு நாடுகளுக்குமிடையில் விஞ்ஞான ஒத்துழைப்பு மீதான உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்குத் தேவையான அங்கீகாரத்தினைப் பெறுவதற்கு கூட்டத்தில் இரண்டு தரப்பும் இணங்கிக் கொண்டன.

### 4.4.6. **பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மீதான இலங்கை – துருக்கி கூட்டு குழுக் கூட்டம்** (JCETC)

முதலாவது JCETC கூட்டம் இலங்கையின் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் கௌரவ. ரிசாட் பதியுதீன் அவர்கள் மற்றும் துருக்கியின் கல்வி அமைச்சர் கௌரவ.இம்ஸெட் ஜில்மாஸ் ஆகியோரின் இணைத் தலைமையில் துருக்கி, அன்காராவில் 2016 நவம்பர் 11 – 12 வரை நடாத்தப்பட்டது.

பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் இரண்டு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பினை விரிவாக்குவதற்கான புதிய முன்மொழிவுகளினை சமர்ப்பித்தல் என்பவற்றிற்கான மிகப் பெரிய மேடையாக JCETC விளங்குகின்றது.

இலங்கை மற்றும் துருக்கி என்பன அண்மைய வரலாற்று காலப்பகுதியில் 68 வருடங்களுக்கு மேல் முறையாக தாபிக்கப்பட்ட இராஜதந்திர உறவுகளை அனுபவித்து வருகின்றன. 1991 இல் இலங்கை – துருக்கி கூட்டுக் குழுவினை தாபிப்பதற்கான ஆரம்பிக்குகை தொடர்பில் இரண்டு நாடுகளுக்குமிடையில் உறுதியான பங்குடமை உறவானது காணப்பட்ட்டது. 1 ஆவது கூட்டத்தில் வர்த்தகம் மற்றும் முதலீடு, கைத்தொழில், விவசாயம் மற்றும் நீரியல் , கப்பல்துறை, நிருமாணம் மற்றும் கல்வி போன்ற துறைகள் உள்ளடங்கலான விடயங்களில் பரந்தளவிலான ஒத்துழைப்பினை வழங்குவதற்கு உடன்பட்டுக் கொண்டன.

### 4.4.7. **இலங்கை – பங்களாதேஸ் கூட்டுப் பொருளாதார ஆணைக்குழு**

பங்களாதேஸ் – இலங்கை கூட்டு ஆணைக்குழுவின் 5 ஆவது அமர்வானது கொழும்பில் 2016 நவம்பர் 09 ஆம் திகதியன்று நடாத்தப்பட்டது. 5 ஆவது அமர்வின் அங்குரார்ப்பண நிகழ்வில் இலங்கை கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் கௌரவ.ரிசாட் பதியுதீன் அவர்களும் பங்களாதேஸ் வர்த்தக அமைச்சர் கௌரவ. ரொபைல் அஹமட் அவர்களும் கலந்த கொண்டிருந்தார்கள்.

கூட்டுப் பொருளாதார ஆணைக்குழுவானது இரண்டு நாடுகளும் தமது பொருளாதார மற்றும் வர்த்தக விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கும் அவை தொடர்பில் தீர்வுகளைக் காண்பதற்குமான பிரதான அமைப்பாக விளங்குகின்றது. பொருளாதார தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான இலங்கை – பங்களாதேஸ் கூட்டு ஆணைக்குழுவின் கீழ், வர்த்தகம், வாணிபம் மற்றும் கைத்தொழில்கள், வான் சேவைகள், சுற்றுலா, கப்பல்துறை, தகவல் தொலைத்தொடர்பு போன்ற துறைகளில் தமது ஒத்துழைப்பினை வழங்குவதற்கு உடன்பட்டுக் கொண்டன.

பங்களாதேஸ் மற்றும் இலங்கை என்பன தென்னாசிய சுதந்திர வர்த்தகப் பிரதேசத்தின் (SAFTA), தற்போது ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையெனப் (APTA), பெயரிடப்பட்ட பாங்கொக் உடன்படிக்கை, பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான வங்களா விரிகுடா ஆரம்பிக்குகை (BIMST-EC), வர்த்தக முன்னுரிமைகளுக்கான உலகளாவிய முறைமை (GSTP) மற்றும் பிராந்திய ஒத்துழைப்புக்கான இந்து சமுத்திர றிம் கூட்டமைப்பு (IOR-ARC) என்பவற்றின் உறுப்பு நாடுகளாகும்.

### 4.4.8. **வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு மீதான இலங்கை உக்கிரெயின் அரசாங்கங்களுக்கிடையலான கூட்டு ஆணைக்குழு**

மீளாய்வு காலப்பகுதியில், வர்த்தக திணைக்களமானது வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு மீதான இலங்கை – உக்கிரெயின் அரசாங்கங்களுக்கிடையிலான உடன்படிக்கையினைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கையினை எடுத்துள்ளதுடன் அதில் கைச்சாத்திடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது.

4.4.9. **மீன்பிடி உற்பத்திகள் மீதான** EU-IUU **தடையினை நீக்குதல்**

வர்த்தகத் திணைக்களமானது ஐரோப்பிய அதிகாரிகளினால் விதிக்கப்படும் பல்வேறு நிபந்தனைகளுக்குட்பட்டு இலங்கையிலுள்ள மீன்பிடி அதிகாரிகளுடனும் ஐரோப்பிய ஆணைக்குழுவுடனும் இணைந்து பணியாற்றியுள்ளது.

அதன்பின்னர், ஐரோப்பிய ஒன்றியமானது ஐரோப்பிய ஒன்றியத்தின் உத்தியோகபூர்வ நாளேட்டில் பேரவை அமுலாக்கல் தீர்மானத்தினை வெளியீடு செய்துள்ளதுடன் 2016 ஜூன் 23 ஆம் திகதியிலிருந்து இலங்கையின் மீன்பிடி உற்பத்திகளின் இறக்குமதி மீது ஐரோப்பிய ஒன்றியத்தினால் விதிக்கப்பட்ட தடையானது நீக்கப்பட்டது. இலங்கையிலிருந்தான மீன்பிடி உற்பத்திகளின் ஏற்றுமதிகள் இறக்குமதி தடை விதிப்பிற்கு முன்பாக இருந்த மட்டங்களிலிருந்து படிப்படியாக அதிகரித்து வருகின்றது.

# 5. பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு

இலங்கையானது அதன் பிராந்திய வர்த்தகம் மற்றும் APTA, SAPTA, SAFTA, BIMSTEC மற்றும் IORA எனும் பெயருடைய பொருளாதார ஏற்பாடுகளில் தொடர்ந்தும் பிரதான பாத்திரத்தினை வகித்து வருகின்றது.

## 5.1 ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை தொடர்பான (APTA) பேச்சுவார்த்தைகளினைத் தொடர்ந்தும் முன்னெடுத்தல்

1975 கைச்சாத்திடப்பட்டு முதலாவது பாங்கொக் உடன்படிக்கை என அழைக்கப்பட்ட ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையானது (APTA) 2005 இல் கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன் வரிச் சலுகைகள் தொடர்பான மூன்றாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து அது 2006 செப்ரெம்பர் 1 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வந்தது.

ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் (APTA) நிலையியல் குழுவின் 49 ஆவது அமர்வு தாய்லாந்தின் பாங்கொக்கில் 2016 செப்ரெம்பரில் நடாத்தப்பட்டது. இந்த அமர்வின் போது, நிலையியல் குழுவானது வர்த்தக வசதிப்படுத்தல், முதலீடு மற்றும் சேவைகள் மீதான சட்டரீதியான உடன்படிக்கையின் தொழிற்பாட்டு சான்றுப்படுத்தல் நடைமுறை மற்றும் அமுலாக்கலுக்கான வழிமுறை எனபவற்றினை விருத்தி செய்வதற்காக மேலும் கலந்துரையாடல்களை நடாத்தியுள்ளது. உறுப்பு நாடுகள், தாய்லாந்து, பாங்கொக்கில் 2017 ஜனவரியில் நடாத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள APTA அமைச்சர்கள் மட்டத்திலான பேரவையின் 4 ஆவது அமர்வின் போது APTA இன் கீழான பேச்சுவார்த்தைகளினை நிறைவு செய்வதற்குத் தீர்மானித்திருந்தன.

உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களின் இலத்திரனியல் வடிவத்தினை அறிமுகப்படுத்தும் நோக்குடன், உறுப்பு நாடுகளினைச் சேர்ந்த பிரதிநிதிகளின் பங்குபற்றுதலுடன் தென்கொரிய சியோலில் 2016 நவம்பரில் விழிப்புணர்வு செயலமர்வு ஒன்று நடாத்தப்பட்டது. இந்த செயலமர்வுக்கு சமாந்தரமாக, மூல விதிகளின் தொழிற்படு குழு மீதான கூட்டமொன்று APTA இன் கீழான பொருட்களின் மூல விதிகளின் (RoO) சான்றுப்படுத்தல் மற்றும் உறுதிப்படுத்தலுக்கான தொழிற்பாட்டு மீளாய்வும் நடாத்தப்பட்டது.

மீளாய்வு காலப்பகுதியில், இலங்கையானது 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 126 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியுடைய பொருட்களினை ஏற்றுமதி செய்துள்ளதுடன் அவற்றுள் 70% சீனாவுக்கும் 25% தென் கொரியாவுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. APTA இன்

கீழான இலங்கையின் இறக்குமதிகள் 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 12.50 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவு செய்யப்பட்டிருந்தது.

## 5.2 தென்னாசிய சுதந்திர வர்த்தக பிரதேசத்தின் (SAFTA) கீழான பேச்சுவார்த்தைகளினைத் தொடர்ந்தும் முன்னெடுத்தல்

தென்னாசிய சுதந்திர வர்த்தக பிரதேசமானது (SAFTA) 2004 ஜனவரியில் கைச்சாத்திடப்பட்டு 2006 ஜனவரியிலிருந்து அமுலுக்கு வந்தது. தென்னாசிய சுதந்திர வர்த்தக பிரதேசமானது (SAFTA)ஆனது 1995 இல் தென்னாசிய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையின் (SAPTA) தாபித்தலுடன் ஆரம்பித்த முன்னுரிமை வர்த்தக ஊக்குவிப்பினூடாக பிராந்திய பொருளாதார ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித்திட்டத்தினை மேலும் விரிவாக்குவதனை நோக்காகக் கொண்டது.

2016 ஆம் ஆண்டளவில் பத்து வருடத்தில் பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்ட SAFTA இன் வர்த்தக சுதந்திர நிகழ்ச்சித்திட்டத்தின் (TLP) கீழான நெகிழ்வுத் தன்மையுடைய பட்டியலிலுள்ளவை தவிர்ந்த ஏனைய உற்பத்திப் பொருட்கள் மீதான சுங்கத் தீர்வைகள், படிப்படியாகக் குறைக்கப்பட்டன. இலங்கையானது 2015 நவம்பர் 21 ஆம் திகதியன்று TLP இன் முதலாம் கட்டத்தின் கீழ் அதன் தரிவு சுதந்திர இணக்கப்பாட்டினைப் பூர்த்தி செய்துள்ளது.  குறைவிருத்தி நாடுகளும் 2016 ஆம் ஆண்டளவில் பூர்த்தி செய்வதல் வேண்டும்.

வர்த்தக சுதந்திர நிகழ்ச்சித்திட்டத்தின் (TLP) இன் இரண்டாம் கட்டமும் அனைத்து உறுப்பு நாடுகளினாலும் வெற்றிகரமாகப் பேச்சவார்த்தை நடாத்தப்பட்டு அமுல்படுத்தப்பட்டது. இரண்டாம் கட்டத்தின் கீழ், உறுப்பினர்கள் அவர்களின் ஆரம்ப நெகிழ்வுப் பட்டியல்களில் குறைந்தது 20% இனையேனும் குறைப்பதற்கு இணங்கிக் கொண்டன. நெகிழ்வுப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட உற்பத்திப் பொருட்களின் மீதான சுங்கத் தீர்வைகளின் படிப்படியான குறைப்பானது 2020 ஆம் ஆண்டளவில் பூர்த்தி செய்யும் வகையில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளதுடன் இலங்கையானது அதனை 2018 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்தலும் வேண்டும்.

2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில், SAFTA இன் கீழான இலங்கை ஏற்றுமதிகள் 6.9 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்துள்ளதுடன்

இது 2015 இல் பதிவு செய்யப்பட்ட பெறுமதியுடன் ஒப்பிடுகையில் 55% குறைவாகும். SAFTA இன் கீழான மொத்த ஏற்றுமதிப் பெறுமதியின் 60% இந்தியாவுக்கான ஏற்றுமதியாகும். எவ்வாறாயினும், இந்த உடன்படிக்கையின் கீழான இறக்குமதிகள் மிகவும் குறைந்த பெறுமதியில் இருந்துள்ளது. SAFTA இற்கு முன்னதான SAPTA இன் கீழான ஏற்றுமதிகள் 2016 இல் 2.6 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்துள்ளது.

SAARC நாடுகளுக்கான இலங்கையின் ஏற்றுமதிகளில் 80% இற்கும் அதிகமான பங்கினைக் கொண்டுள்ள, SAARC பிராந்தியத்திலுள்ள இலங்கையின் பிரதான வர்த்தகப் பங்காளர்களான இந்தியா மற்றும் பாகிஸ்தான் என்பனவற்றுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையினைக் கொண்டுள்ள இலங்கை வழங்கிய தகவல்களின்படி, குறித்த நாடுகளுக்கான SAFTA உடன்படிக்கையின் கீழ் அதிகரித்த ஏற்றுமதிகளின் போக்கினைக் கண்டறிவது மிகவும் இயலாத காரியமாகும்.

## 5.3 புதிய பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகள் மீதான பேச்சுவார்த்தைகள்

### 5.3.1 பல் துறைசார் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா ஆரம்பிக்குகை (BIMSTEC)

பங்களாதேஸ், பூட்டான், இந்தியா, மியான்மார், நேபாளம், இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய 7 நாடுகளினைக் கொண்டுள்ள பல்துறை தொழில்நுட்ப மற்றும்பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா ஆரம்பிக்குகையானது அங்கத்துவ நாடுகளுக்கிடையிலான வர்த்தக நடவடிக்கைகளினை விரிவாக்குவதனையும் பிராந்தியங்களுக்கிடையில் சிறந்த பொருளாதார உறவுகளை தாபிப்பதனையும் நோக்காக கொண்டுள்ளது.

மூன்றாவது பிம்ஸ்ரெக் மாநாடு, 14 ஆவது பிம்ஸ்ரெக் அமைச்சர்கள் மட்டத்திலான மாநாடு மற்றும் 16 ஆவது பிம்ஸ்ரெக் சிரேஸ்ட அதிகாரிகளின் கூட்டம் என்பன மியான்மார், நே பியி ரோ இல் மார்ச் 1 - 4 ஆம் திகதி வரையில் நடாத்தப்பட்டது.

அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டத்தில், அங்கத்துவ நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்கள் பிம்ஸ்ரெக்கிலுள்ள முன்னுரிமை விடயங்களின் முன்னேற்றம் குறித்து மீளாய்வு செய்துள்ளதுடன் பின்வரும் ஆவணங்களில் அவர்கள் கையெழுத்திடுவதற்கான தமது சம்மதத்தினையும் தெரிவித்துள்ளார்கள்;

- பிம்ஸ்ரெக் நிரந்தர செயலகத்தினை தாபிப்பது தொடர்பான அமைப்பு அகவிதி
- பிம்ஸ்ரெக் கலாச்சார கைத்தொழில்கள் ஆணைக்குழு மற்றும் பிம்ஸ்ரெக் கலாச்சார கைத்தொழில் அவதானிப்பு நிலையமொன்றிதை தாபிப்பது தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை
- வானிலை மற்றும் காலநிலைக்கான பிம்ஸ்ரெக் நிலையமொன்றினைத் தாபிப்பது தொடர்பில் பிம்ஸ்ரெக் அங்கத்துவ நாடுகளுக்கிடையிலான அமைப்பு அகவிதி

சிரேஷ்ட அதிகாரிகளின் கூட்டத்தில், அடுத்த வர்த்தக மற்றும் பொருளாதார அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டத்தின் போது பின்வரும் உடன்படிக்கைகளினைக் கைச்சாத்திடுவதற்கு உடன்பாடு காணப்பட்டது;

- பிம்ஸ்ரெக் சுதந்திர வர்த்தக பிரதேசம் (FTA) மீதான சட்ட ரீதியான உடன்படிக்கையின் பொருட்களின் வர்த்தகம் தொடர்பான உடன்படிக்கை
- பிம்ஸ்ரெக் சுதந்திர வர்த்தக பிரதேசம் மீதான சட்ட ரீதியான உடன்படிக்கையினைத் திருத்துவதற்கான மரபுச் சீர்முறைமை
- பிணக்குத் தீர்வு நடைமுறைகள் மற்றும் சட்டரீதியான உடன்படிக்கை மீதான பொறிமுறைமை மீதான உடன்படிக்கை
- சுங்க விடயங்களில் ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவுகை தொடர்பான உடன்படிக்கை

இலங்கையின் வர்த்தக சுதந்திர நிகழ்ச்சித்திட்டமானது (TLP), உறுப்பு நாடுகளினால் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட கட்டமைப்புக்கமைவாக, அக்கறைதாரர்களுடன் ஆலோசனை மேற்கொண்டு வகுக்கப்பட்டது.

இலங்கையின் சுதந்திர வர்த்தக நிகழ்ச்சித்திட்டத்துக்கான கட்டமைப்பு பின்வருமாறு:

| அட்டவணை | தரிவு வரிசைகளின் எண்ணிக்கை | % | குறைவிருத்தியலா நாடுகளுக்கானவை | குறைவிருத்தி நாடுகளுக்கானவை |
|---|---|---|---|---|
| வரைவான சுவட்டு நீக்குகை (FTE) | 505 | 10% | 4 சமான வருடாந்த தவணைகள் | 2 சமான வருடாந்த தவணைகள் |
| சாதாரண சுவட்டு நீக்குகை (NTE) | 2,422 | 48% | 2 ஆவது வருடத்திலிருந்து, 6 சமான வருடாந்த தவணைகள் | 2 ஆவது வருடத்திலிருந்து 4 சமான வருடாந்த தவணைகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| சாராண சுவட்டு கழிப்பனவு (NTR 1% - 5%) | 960 | 19% | 2 ஆவது வருடத்திலிருந்து 6 சமான வருடாந்த தவணைகள் | 2 ஆவது வருடத்திலிருந்து 4 சமான வருடாந்த தவணைகள் |
| பாதகப் பட்டியல் (NL) | 1,165 | 23% | பொருத்தமற்றது | பொருத்தமற்றது |

பிம்ஸ்ரெக் வர்த்தக பேச்சுவார்த்தைக் குழுவின் 20 ஆவது கூட்டம் 2015 செப்ரெம்பர் 7-9 வரையில் தாய்லாந்தில் நடாத்தப்பட்டது. மியான்மாரில் 2014 மார்ச்சில் நடாத்தப்பட்ட 3 ஆவது பிம்ஸ்ரெக் மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட அறிவுறுத்தலுக்கிணங்க, BIMSTEC FTA இன் பொருட்கள் சேவைகள் மீதான உடன்படிக்கையானது நிறைவு செய்யப்பட்டது. இந்தியாவானது 4 வருடங்களின் பின்னர் தாம் இந்த உடன்படிக்கையினை 4 வருடங்களின் பின்னர் ஏற்றுக் கொண்டுள்ளமையினால் உற்பத்திப்பொருள் விதித்துரைத்த சட்டவிதிகளின் நிரலினை (PSRs)மீளாய்வு செய்யுமாறு வலியுறுத்தியமையின் காரணமாக TIG இன் வரைபினை நிறைவு செய்ய முடியவில்லை.

மேலும், "முதலீடு" மற்றும் "சேவைகள்" மீதான தொழிற்படு குழுக் கூட்டங்களும் நடாத்தப்பட்டுள்ளன.

BIMSTEC இற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியவர்த்தக சுதந்திர நிகழ்ச்சித்திட்டத்திற்கு பொருளாதார முகாமைத்துவம் மீதான உமைச்சரவை குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதற்கிணங்க வர்த்தக சுதந்திர நிகழ்ச்சித்திட்டமானது BIMSTEC செயலகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### 5.3.2 இந்து சமுத்திர கரையோர கூட்டமைப்பு (IORA)

இந்து சமுத்திர கரையோர கூட்டமைப்பானது (IORA), அரசாங்கம், வியாபாரம் மற்றும் கல்விசார்ந்த குழு என முப்பிரிவுகளைக் கொண்டதும் அவற்றிற்கிடையேஒத்துழைப்பினையும் நெருங்கிய தொடர்பினையும் பேணி வருகின்ற இந்து சமுத்திர கரையோர நாடுகளுக்கிடையலான பிராந்திய கூட்டமைப்பாகும். வர்த்தகம் மற்றும் முதலீடு மீதான தொழிற்படு குழு (WGTI), இந்து சமுத்திர கரையோரக் கூட்டமைப்பு (IORBF), மற்றும் இந்து சமுத்திர கரையோர கல்விசார்ந்த குழு (IORAG) எனும் பெயரிலான அக்கறைதார்களின் குழு தொடர்பில் மூன்று தொழிற்படு குழுக்கள் இருந்துள்ளன.

இந்து சமுத்திர கரையோரக் கூட்டமைப்பினால் (IORA) அடையாளங் காணப்பட்டுள்ள முன்னுரிமை வாய்ந்த விடயங்கள் பின்வருமாறு.

(i) கடற் பயண பாதுகாப்பு
(ii) வர்த்தக மற்றும் முதலீட்டு வசதிப்படுத்தல்
(iii) மீன்பிடி முகாமைத்துவம்
(iv) பேரிடர் முகாமைத்துவம்
(v) கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம்
(vi) சுற்றுலா மற்றும் கலாச்சார பரிமாற்றங்கள்
(vii) பாலின வலுவூட்டல்
(viii) நிலையான வளர்ச்சியினை மேம்படுத்துவதற்காகவும் பிராந்தியம் மற்றும் அங்கத்துவ நாடுகளின் மீதியாயுள்ள அபிவிருத்தி மற்றும் பிராந்திய பொருளாதார ஒத்துழைப்புக்காக பொது அமைப்பொன்றினை உருவாக்குதல்.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர், கௌரவ.ரிசாட் பதியுதின் அவர்கள், டுபாயில் 2016 ஏப்ரல் 11 – 12 வரையில் நடைபெற்ற இரண்டாவது IORA அமைச்சர்கள் மட்டத்திலான பொருளாதார மற்றும் வியாபார மாநாட்டில் இலங்கையினைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்டார்.

மேற்குறித்த மாநாடானது ஐக்கிய அரபு எமிரேட்ஸின் பொருளாதார அமைச்சர் அதி மேதகு திரு. சுல்தான் பின் சாயிட் அல் மன்சூரி அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளினை விருத்தி செய்ய வேண்டிய தேவை எழுந்துள்ளமையினைக் குறிப்பிட்டுள்ளதுடன் நிலையான, பரந்தளவிலான பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியினை உறுதி செய்யும் வகையில் புத்தாக்கம் மிக்க பொருளாதார சூழலொன்று தோற்றுவிக்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

IORA அமைச்சர்கள் பேரவையின் 16 ஆவது மாநாடும் இணைக் கூட்டங்களும். இந்தோனேசிய ஜகார்த்தாவிலும் பாலியிலும் 2016 ஒக்டாபர் 12 – 27 ஆம் திகதி வரையில் நடாத்தப்பட்டன. அமைச்சர்களின் 16 ஆவது பேரவைக் கூட்டம் பாலியில் ஒக்டோபர் 27 ஆம் திகதியன்று நடாத்தப்பட்டது. இணைக் கூட்டங்கள், இந்து சமுத்திர கரையோர கல்விசார் குழுவின் (IORAG) 22 ஆவது கூட்டம் மற்றும் இந்து சமுத்திர வியாபார மன்றம் (IORBF) என்பன முறையே 2016 ஒக்டோபர் 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டன. வர்த்தகம் மற்றும் முதலீடு மீதான தொழிற்படு குழுவின் 16 ஆவது கூட்டம் 2016 ஒக்டோபர் 24 ஆம் திகதியன்று நடாத்தப்பட்டதுடன் சிரேஷ்ட அதிகாரி குழுவின் (CSO) 18 ஆவது கூட்டம் இந்தோனேசிய பாலியில் 25 – 26 வரையில் நடாத்தப்பட்டது.

### 5.3.3 **சேவை வர்த்தகம் மீதான சார்க் உடன்படிக்கை** (SATIS)

அங்கத்துவ நாடுகளின் தலைவர்கள், பூட்டானில் 2010 ஏப்பிரலில் நடாத்தப்பட்ட 16 ஆவது சார்க் மாநாட்டில் சேவை வர்த்தகம் மீதான சார்க் சட்டரீதியான உடன்படிக்கையில் (SATIS) கைச்சாத்திட்டார்கள். அனைத்து நாடுகளும் இந்த உடன்படிக்கையினை திருத்தியமைத்துள்ளதுடன் SATIS இன் கீழ் தேசிய இணக்கப்பாட்டு அட்டவணைகளினைப் பூர்த்தி செய்யும் செயல்முறைகளும் இடம்பெற்றுள்ளன.

குறித்த ஆண்டு காலப்பகுதியில் SATIS மீதான நிபுணர் குழு கூட்டங்கள் எதுவும் நடாத்தப்படவில்லை.

SATIS இன் கீழ் இலங்கையின் சேவைகள் வழங்கலுக்கான அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் SAARC செயலகமானது SATIS இன் கீழான அதன் சேவைகளினை வழங்கத் தயாராக இருந்தமை குறித்து மதிப்பீடு செய்தது. எவ்வாறாயினும், உடன்படிக்கையின் இறுதி வடிவமானது அவர்களின் SATIS வாய்ப்புக்களுடன் தயாராகவுள்ளதாக அனைத்து நாடுகளும் அறியத் தந்தால் மட்டுமே விநியோகிக்கப்படும்.

# 6. வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா ஊக்குவிப்பு

## 6.1 வெளிநாட்டு வர்த்தக பிரதிநிதித்துவம்

வர்த்தக திணைக்களத்தின் வர்த்தகசார் பிரதிநிதித்துவமானது வெளிநாடுகளிலுள்ள 27 தூதரங்களிலுள்ள 29 உத்தியோகத்தர்களினைக் கொண்டுள்ளதுடன் அவர்கள் வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா துறைகளில் விசேட கவனம் செலுத்துவதுடன் அனுசரணை நாடுகளில் இலங்கையின் வர்த்தகசார் மற்றும் பொருளாதார நலன்களினை ஊக்குவித்தல் மற்றும் பாதுகாத்தல் போன்ற நடவடிக்கைளில் ஈடுபட்டு வருகின்றனர். வர்த்தக திணைக்களமானது, வெளிநாட்டு தூதரகங்களிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்கள் மற்றும் இலங்கையிலுள்ள ஏனைய வியாபார ஆதரவு நிறவனங்களின் உதவுகையுடன் இலங்கை ஏற்றுமதிகளுக்கான சர்வதேச சந்தை வாய்ப்புக்களை மேலும் விரிவாக்குவதற்கும் பல்வகைப்படுத்துவதற்குமான நடவடிக்கைகளினை ஒழுங்கமைப்பதிலும் ஈடுபட்டு வருகின்றது. வர்த்தக உத்தியோகத்தர்கள் முன்னணி ஏற்றுமதியாளர்களுக்கு அவர்களின் ஏற்றுமதிப் பொருட்களுக்கான சர்வதேச சந்தை பங்கினை விரிவாக்குவதனூடாக புதிய ஏற்றுமதி சந்தை வாய்ப்புக்களினை அறிமுகப்படுத்துவதனை பிரதானமாக நோக்காகக் கொண்டு செயற்படுகின்ற அதேவேளையில் தற்போதிருக்கும் சந்தைகளில் மிகவும்

சுமுகமான சூழ்நிலையினை உருவாக்குவதிலும் அயராது உழைத்து வருகின்றனர். அத்துடன் வர்த்தக உத்தியோகத்தர்கள் சிறிய மற்றும் நடுத்தரளவிலான ஏற்றுமதியாளர்களுக்கு அவர்களுக்கான சந்தை வாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பதிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

வெளிநாட்டு தூதரகங்களிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்களினால் நிறைவேற்றப்படும் பிரதான தொழிற்பாடுகள் பின்வருவனவற்றினையும் உள்ளடக்குகின்றன.

- பல் தரப்பு மன்றங்களில் (WTO, CFC, UNCTAD, போன்ற) இலங்கையினைப் பிரதிநதித்துவப்படுத்துதலும் இருதரப்பு, பிராந்திய கொள்கை முன்னெடுப்புக்களில் ஈடுபடுதலும்.
- வர்த்தக மற்றும் ஊக்குவிப்புப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுதலும் அமுலாக்கல் மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுதலும்.
- மூல விதிகள், உற்பத்தி மூலப் பிரச்சனைகள் மற்றும் நாட்டின் வர்த்தகசார் மற்றும் பொருளாதார நலன்களிலை பிரதிநிதித்துவப்படுத்துதல், ஊக்குவித்தல் மற்றும் பாதுகாத்தல் நடவடிக்க்கைகளில் ஈடுபடுதல்.
- அரச முகவராண்மைகள் மற்றும் EDB, BOI, NGJA, SLTPB, இலங்கைத் தேயிலைச் சபை, SLECC, SLECIC போன்ற அரசாங்க அதிகார மையங்களுக்கான வர்த்தகசார் மற்றும் பொருளாதார உறவுகளினை ஒருங்கிணைத்தல்.
- அனுசரணை வழங்கும் நாட்டிலுள்ள வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய அரசாங்க அதிகாரிகளுடன் வலையமைப்பினைப் பேணுதல் மற்றும் இலங்கையின் வர்த்தகசார் மற்றும் பொருளாதார நலன்களுடன் தொடரபுடைய விடயங்கள் / பிரச்சனைகளுடன் தொடர்புடைய பல்வேறுபட்ட அரசாங்க மற்றும சர்வதேச நிறுவனங்களில் இலங்கையினைப் பிரதிநிதித்துவப்படுத்துதல்.
- அனுசரணை வழங்கும் நாட்டின் வர்த்தக கொள்கை மாற்றங்கள் குறித்து குறிப்பாக, தரிவு மற்றும் தரிவல்லா நடவடிக்கைகள் குறித்து கண்காணித்தலும் அறிக்கையிடுதலும்
- அனுசரணை வழங்கும் நாட்டில் இலங்கை தொடர்பான ஊக்குவிப்பு (தனியொரு நாடு) நடவடிக்கைகளினை முன்னெடுத்தல்.

- முக்கியமான சர்வதேச வர்த்தக கண்காட்சிகள் / நிகழ்வுகளில் இலங்கை பங்குபற்றுவதற்கான ஏற்பாடுகளினை முன்னெடுத்தல்.
- இலங்கையில் நடாத்தப்படுகின்ற கண்காட்சிகள் / நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்கு வெளிநாட்டு வர்த்தகத் தூதுக்குழுக்களுக்கு ஏற்பாடு செய்து கொடுத்தல்.
- இலங்கைக்கு விஜயம் செய்வதற்கும் அவ்வாறே வியாபார வாய்ப்புக்களைக் கண்டறிவதற்கும் வர்த்தக, முதலீடு மற்றும் சுற்றுலாத்துறை சார்ந்த தூதுக்குழுக்களுக்கு ஏற்பாடு செய்து கொடுத்தல்.
- வர்த்தகம் சார்ந்த வாய்ப்புக்களைக் கண்டறிவதற்கு இலங்கைக்கும் இலங்கையிலிருந்தும் தனிநபர் வியாபார விஜயங்களை ஏற்பாடு செய்தல்.
- புதிய சந்தைகளினைக் கண்டறிதல், சந்தை ஆராய்ச்சி, மதிப்பாய்வுகள் மற்றும் சந்தை நுண்ணாய்வின் பரவுகை மற்றும் உற்பத்தி தகவல் தொடர்பான ஆய்வுகளினை நடாத்துதல்.
- வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான விசாரணைகளுக்கு விடையளித்தல், வெளிநாட்டு தொழில் முயற்சிகளுடன் சந்திப்பு / வருகை தரல், இலங்கை ஏற்றுமதியளர்களுக்கு தொழில்நுட்ப உதவுகையினை வழங்குதல், வர்த்தகப் பிணக்குகளுக்குத் தீர்வு காண உதவியளித்தல்.
- தொழில்நுட்ப மாற்றீடு, சந்தை விருத்தி நிகழ்ச்சித்திட்டம்மற்றும் தொழில்நுட்ப உதவுகை என்பவற்றிற்கான தொழில்நுட்ப உதவுகை.
- அனுசரணை வழங்கும் நாட்டிற்குள் நுழைவதற்காக புதிய பொருட்களுக்கான தடுத்து வைக்கும் விடுவிப்பு உரிமம்.
- அனுசரணை வழங்கும் நாட்டில் இலங்கையின் அரசாங்க கேள்வி மனுக்களுக்கான விளம்பரம்.

2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெளிநாட்டு தூதரகங்களிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்ட இத்தகைய தொழிற்பாடுகளின் பொழிப்பானது பின்வருமாறு கீழே தரப்படுகின்றது.

| | செயற்பாடு | | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | அனுசரணை வழங்கும் நாடுகளில் நடாத்தப்பட்ட விசேட (தனி நாடு) ஊக்குவிப்பு பிரச்சார நடவடிக்கைகள் | | 49 |
| 2 | இலங்கைக்கான தூதுக்குழுக்கள் | தூதுக்குழுக்களின் எண்ணிக்கை | 96 |
| | | பிரதிநிதிகளின் எண்ணிக்கை | 770 |
| 3 | அனுசரணை வழங்கும் நாட்டிற்கான தூதுக்குழுக்கள் | தூதுக்குழுக்களின் எண்ணிக்கை | 142 |
| | | பிரதிநிதிகளின் எண்ணிக்கை | 1,005 |
| 4 | இலங்கைக்கான தனிப்பட்ட விஜயம் | | 253 |
| 5 | அனுசரணை வழங்கும் நாட்டிற்கான தனிப்பட்ட விஜயம் | | 224 |
| 6 | அனுசரணை வழங்கும் நாட்டில் நடாத்தப்பட்ட கண்காட்சிகள் | | 295 |
| 7 | இலங்கையில் அனுசரணை வழங்கும் நாட்டிலிருந்தான ஊக்குவிப்புச் சந்தை பங்குபற்றல் | வியாபார சந்தைகளின் எண்ணிக்கை | 62 |
| | | கண்காட்சிப்படுத்துவோர் வருகையாளர்களின் / எண்ணிக்கை | 485 |
| 8 | விளக்கமளிக்கப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை (வர்த்தக/ முதலீடு/ சுற்றுலா) | | 1,871 |
| 9 | ஆய்வு செய்யப்பட்ட வர்த்தக முறைப்பாடுகளின் எண்ணிக்கை | | 228 |
| 10 | ஊக்குவிக்கப்பட்ட உற்பத்தித் துறைகளின் எண்ணிக்கை | | 147 |
| 11 | வர்த்தக உத்தியோகத்தர்களினால் வருகை தரப்பட்ட வர்த்தக சந்தைகளின் எண்ணிக்கை | | 100 |
| 12 | அனுசரணை வழங்கும் நாட்டில் இலங்கையின் வியாபார வலையமைப்புக் கூட்டங்களில் கலந்து கொள்ளல். | | 244 |
| 13 | சந்தை நுண்ணாய்வு | | 70 |
| 14 | சர்வதேச நிறுவனங்கள்/ ல்மன்றங்களில் இலங்கையினைப் பிரதிநிதித்துவப்படுத்துத | | 32 |
| 15 | தேயிலை ஊக்குவிப்பு | | 33 |
| 16 | முதலீட்டு ஊக்குவிப்பு நடவடிக்கைகள் | | 245 |
| 17 | சுற்றுலா ஊக்குவிப்பு நடவடிக்கைகள் | | 219 |
| 18 | வியாபார வலையமைப்பு நிகழ்வுகள் | | 204 |

6.1.1 **செயல்நிறைவேற்ற மதிப்பாய்வுப் பகுப்பாய்வு**

## *1.* ஏற்றுமதி ஊக்குவிப்பு

தூதுக்குழுக்களினால் வலையமைப்புச் செய்யப்பட்ட கீழே குறிப்பிடப்படும் அனுசரணை வழங்கும் காரணிகளினால் அறிமுகப்படுத்தப்பட்ட வெளிநாட்டுத் தரப்பொன்றிடமிருந்தான கட்டளைகளின் மூலமான வெற்றியானது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட அத்தகைய காரணிகள் பொறுப்பேற்கப்பட்ட ஊக்குவிப்பு நடவடிக்கைகளின் வெளியீட்டினை மட்டுப்படுத்துகின்றன.

| நுண்பாக காரணிகள் | பெரும்பாக காரணிகள் |
|---|---|
| கம்பனியின் பொதுவான ஏற்றுமதி தயார் நிலை / அக்கறை | குறைந்த உற்பத்திச் செலவுடனான போட்டி மிக்க பொருளாதாரம் |
| போட்டி விலை (ஏனைய வழங்குனர் களுடனான போட்டி) | தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க மட்டத்திலான முதலீட்டு மட்டம் |
| பொருட்களின் தரம் | மூலவள உதவியளிப்பு நாடு |
| வழங்கல் கொள்திறன் – உரிய நேரத்தில் உரிய முறையில் பாரிய கட்டளையினைப் பூர்த்தி செய்யும் ஆற்றல் | வர்த்தக வசதிப்படுத்தல் மட்டம் |
| இறக்குமதி செய்யும் நாட்டு ஒழுங்குவிதிகள் மற்றும் தேவைப்பாடுகளுடனான இணக்கப்பாடு | செலவின நிதியிடல் கிடைப்பனவு |
| ஊக்குவிப்பு நிதியிடலின் கிடைப்பனவு | |

மேலே குறிப்பிடப்பட்டவாறான நுண்பாக மற்றும் பெரும்பாக காரணிகளுக்கு உதவக்கூடிய வகையிலான நாடு எனில் வசதிப்படுத்தலானது மிகவும் வினைத்திறன் வாய்ந்ததாக இருக்கும்.

## *2.* முதலீடு மற்றும் சுற்றுலான ஊக்குவிப்பு

அதேவேளையில், வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகமானது தேறக்கூடிய வகையில் ஆரம்பத்தலிருந்து முதலீட்டு

விசாரணையினைக் கையாளவில்லை. முதலீட்டுச் செயல்முறையின் சில பகுதிகள் பரஸ்பரம் நன்மை பயக்கும் வகையில் பேச்சவார்த்தை நடாத்தி பெறுபேற்றினை அடையும் பொருட்டுத் தனியார் துறைத் தரப்புக்களிடம் விடப்பட்டன.

எனவே, தூதரகத்தின் செயலாற்றுகையானது குறித்த தூதரகத்தினால் எடுக்கப்படும் நடவடிக்கைகளின் அளவு, தீவிரம் மற்றும் கூட்டு இணக்கப்பாடு என்பவற்றின் நியதிகளின்படி மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென அறிவுறுத்தப்படுகின்றது.

வர்த்தக உத்தியோகத்தர்களினால் நிறைவேற்றப்பட்ட தெரிவு செய்யப்பட்ட பிரதான பிரதிநிதித்துவங்கள் கீழே நிரல்படுத்தப்படுகின்றன.

- உலக வர்த்தக நிறுவனத்தின் TRIPS உடன்படிக்கையின் கீழ் புவிசார் குறியீடாக இலங்கைத் தேயிலையின் பாதுகாப்பு குறித்து தேசிய ஒழுற்குவிதியொன்றினை வரையும் நடவடிக்கையானது ஆரம்பிக்கப்பட்டதுடன் எச்எஸ் வகைப்படுத்தலில் 2007 இலிருந்து பயனுறுதியாகும் வகையில் "இலங்கை கறுவா" இற்கான விசேட வகையீட்டினைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- விவசாய பேச்சுவார்த்தையில் சிறியதும் நலிவடைந்ததுமான பொருளாதாரமாகவும், விவசாயமல்லா பேச்சுவார்த்தைகளில் விகிதாசாரமற்ற முறையில் பாதிப்புக்குள்ளாகும் நாடு என்ற வகையிலும், குறிப்பாக உலக வர்த்தக நிறுவனத்தின் டோஹா பேச்சுவார்த்தையில் எடுக்கப்பட்ட எடுக்கப்படவேண்டிய நாட்டின் நிலைப்பாடுகள் வகுக்கப்பட்டுள்ளன.
- 1998, 2003 மற்றும் 2010 மற்றும் 2016 ஆம் ஆண்டு அறிக்கைளின் இலங்கையின் உலக வர்த்தக நிறுவன வர்த்தக கொள்கை மீளாய்வின் அரசாங்க அறிக்கைகளினைத் தயாரித்தல்.
- பால் மா தொடர்பில் அக்கறையுள்ள உலக வர்த்தக நிறுவன உறுப்பு நாடுகளுடன் உறுப்புரை XXVIII இனை நிறைவு செய்ததன் பின்னர் உலக வர்த்தக நிறுவனத்திலுள்ள இலங்கையின் தரிவு கட்டுப்பாடுகளினைக் கொண்டிருக்கின்ற இலங்கையின் தரிவு உடன்படிக்கையினைப் பூர்த்தி செய்தல்.
- உணவுச் சேர்மானமாக கறுவாவில் சல்பர் டீஒக்சைட்டின் (SO2) இன் பயன்பாடு தொடர்பான சர்வதேச நியமத்தினை விருத்தி செய்வதற்காக ரோமிலுள்ள Codex Alimantarius Commission இற்கு பிரேரணையொன்றினைச் சமர்ப்பிப்பதனூடாக சல்பர் டீஒக்சட்டினால் மாசடைகின்ற கறுவாவினைக் கோருவது

தொடர்பில் ஐரோப்பிய ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்ட இலங்கை கறுவா மீதான தடையினை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தமை.

- 2004 இல் ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்தான தொழிலாளர் உரிமைகள் பாதுகாப்பு, 2005, 2008 இல் EU GSP+ வர்த்தக வரிச் சலுகைகள் மற்றும் EU GSP+ இனை மீளப் பெற்றுக் கொள்வதற்கான தற்போதைய தயாரிப்புக்கள் என்பவற்றிற்கான விசேட ஊக்குவிப்பு ஏற்பாடுகளினைப் பெற்றுக் கொள்வதற்கான செயற்பாடுகளினை முன்னெடுக்கும் செயல்முறையானது முன்னெடுக்கப்பட்டது. இலங்கையின் GSP+ விண்ணப்ப தயாரிப்புக்கள், சமர்ப்பித்தல்கள் ஐரோப்பிய ஒன்றிய ஆணைக்குழுவுடனான பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டன.
- ஐரோப்பிய ஒன்றிய – சட்டவிரோத, ஒழுங்குமுறைப்படுத்தப்படாத, அறிக்கையிடப்படாத மீன்படி ஒழுங்குவிதியின் கீழ் இலங்கையிலிருந்தான மீன்பிடி உற்பத்திகளின் இறக்குமதிகள் மீது ஐரோப்பிய ஒன்றியத்தினால் விதிக்கப்பட்ட தடையினை நீக்குவதற்கான நடைமுறையின் அமுல்படுத்தலானது வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இலங்கையிலிருந்து ஐரோப்பிய ஒன்றியத்திற்கான கடலுணவுப் பொருட்களின் ஏற்றுமதி மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையினை நீக்குவதற்கு ஆதரவளித்த இலங்கை கடலுணவு ஏற்றுமதியாளர் சங்கத்துடன் கடலுணவு ஏற்றுமதி (SEASL) இணைந்து 2016 ஏப்பிரல் 27 ஆம் திகதியன்று இலங்கையின் கடலுணவுக் கைத்தொழில் தொடர்பில் சர்வதேச ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் பத்திரிகையாளர் மாநாடு Seafood Expo Global இல் நடைபெற்றது.
- ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கையின் ஏற்றுமதிகளான பழங்கள், மரக்கறிகள் மற்றும் ஏனைய உயிர்த் தாவரங்கள் குறித்து எழுந்த சுகாதாரம் தொடர்பான பிரச்சனைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டதுடன் இலங்கையின் ஏற்றுமதிகள் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சனைகளுக்கு உரிய உள்ளூர் அதிகாரிகளுடன் இணைந்து செயற்படுவதுடன் அது தொடர்பான பிரச்சனைகள் குறித்து விளக்கமளிப்பதற்கான செயல் திட்ட்டமொன்றும் வகுக்கப்பட்டது.
- இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு பெரும் சவாலாக விளங்கி வருகின்ற ஐரோப்பிய ஒன்றிய நியமங்கள் இணங்காமையினால் ஏற்றுமதி செய்யப்பட்ட ஏற்றுமதி ஒப்படை சரக்குகள் துடுத்து வைக்கப்படுதல் மற்றும் நிராகரிக்கப்படுவதால், இலங்கையிலிருந்தான ஏற்றுமதி ஒப்படைச் சரக்குகளினை தடுத்து வைத்தல் மற்றும் நிராகரித்தல் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றித்தினால் வழங்கப்பட்ட துரித மாற்று

முறைமையின் கையாளலானது (RASFF) கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய இன்னொரு விடயமாக இன்னமும் இருந்து வருகின்றது.

- பிரயாணப் பொருட்களின் வகையீட்டுக்காக GSP இனை விரிவாக்குவதற்காக ஐக்கிய அமெரிக்க காங்கிரசின் உறுப்பினர்களினைச் சென்றடைவதற்காக பிரதான US-GSP பயனாளி நாடுகளின் குழுவுடன் ஆர்வத்துடன் பங்குபற்றியது.
- உத்தேச எதிரீட்டுத் தீர்வையினைக் குறைப்பதற்கு / நீக்குவதற்காக ஐக்கிய அமெரிக்க US காற்றழுத்தத்தினால் இயக்கப்படும் ரயர்களின் (OTR) எதிரீட்டு விசாரணைகள் மற்றும் முயற்சிகளை முன்னெடுத்தல்.
- 2017 ஜனவரி 01 ஆம் திகதியில் பதிவு செய்தல் செயல்முறையினை பூர்த்தி செய்வது தொடர்பில் இலங்கையினால் நடைமுறை இடர்பாடுகள் எதிர்நோக்கப்படுவதன் காரணமாக, 2017 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் இந்தப் பதிவு செய்யப்பட்ட ஏற்றுமதியாளர் முறைமைக்கு விண்ணப்பிப்பதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு அனுமதி வழங்குவதற்காக ஐரோப்பிய ஆணைக்குழுவின் வரி விதிப்பனவு மற்றும் சுங்க சங்கம் என்பவற்றிற்கான பணிப்பாளர் நாயகத்திடமிருந்து அங்கீகாரத்தினைப் பெற்றமை. இருந்த போதிலும், விளக்கமளிக்கப்பட்ட விசேட சூழ்நிலைகளின் கீழ், 2016 ஜூன் 30 ஆம் திகதியன்று, அதாவது குறித்துரைக்கப்பட்ட இறுதித் திகதியின் பின்னர் இந்த உத்தியோகபூர்வ கோரிக்கையானது விடுக்கப்பட்டுள்ளது.
- ஜேர்மனியிலுள்ள ஏற்றுமதி கடன் இடர் முகவராண்மைகளுடனான உறவுகளின் அடிப்படையில், OECD இன் இலங்கையினது இடர் வகைப்படுத்தலினை தரமுயர்த்து வதற்கான தமது ஆதரவினை வழங்கியுள்ளார்கள்.
- இந்தியாவில் விரைவில் பழுதடையக்கூடிய பொருட்களினையும் இந்தோனேசியாவில் உணவுப் பொருட்களினையும் விரைவாக விடுவிப்பதற்கு இலங்கையில் ஆய்வுகூட தர நிர்ணயச் சான்றிதழினைப் பெற்றுக் கொள்வதற்கு வசதியேற்படுத்திக் கொடுத்தல்
- கொரியாவுக்கான மீன் ஏற்றுமதியினை ஆரம்பிப்பதற்கு ஆர்வமுடைய இலங்கை மீன் ஏற்றுமதியாளர்களின் நிறுவனங்களைப் பரிசோதனை செய்யும் பொருட்டு இலங்கைக்கு விஜயம் செய்த கொரியக் குடியரசின் உணவு மற்றும் மருந்துப் பாதுகாப்பு அமைச்சின் குழுவிற்கு வசதியேற்படுத்திக் கொடுத்தமை. கொரிய அதிகாரிகளின் அங்கீகாரமானது 2017 இல் பெறப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.
- ஆர்மெனியா, கசஹஸ்தான், பெலாரஸ், கிர்கிஸ்தான் மற்றும் ரஷிய சம்மேளனம் ஆகிய நாடுகளின் சுங்கச் சங்கத்திற்கு தமது பொருட்களினை ஏற்றுமதி செய்வதற்கு இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு

அங்கீகாரத்தினை வழங்கும் பொருட்டு இலங்கைக்கு விஜயம் செய்த ரஷிய மிருக வைத்திய குழுவிற்கு வசதியினை ஏற்படுத்திக் கொடுத்தமை.

- இத்தாலியில் வளமான வேலைவாய்ப்புக்களினைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் (SLFEB) அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு அரச சார்பற்ற நிறுவனமானகவும் விளங்கிய இத்தாலிய M/S. Mahasara Co. உடன் ஒன்றிணைந்துள்ளது.
- 2016 இல் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருக்கின்ற 03 கருத்திட்டங்களின் தற்போதைய நிலை மற்றும் புதிய கருத்திட்டங்கள் என்பவற்றினூடாக இலங்கைக்கான IFAD நிதிகளை அதிகரிப்பதன் சாத்தியப்பாடுகளைக் கண்டறிவதற்கு IFAD உடன் இணைந்து செயற்படுதல்.

- ஜப்பானின் முதலாவது தகவல் தொழில்நுட்ப பூங்காவான Global IT Park Minami Uonuma"/Niigata" இல் தமது கம்பனிகளினைத் தாபிப்பதற்கு தெரிவு செய்யப்பட்ட 6 இலங்கை தகவல் தொழில்நுட்ப கம்பனிகளுக்கு ஒருங்கிணைப்பினை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதுடன் இந்நடவடிக்கையானது ஜப்பானிய தகவல் தொழில்நுட்ப கம்பனிகளுடன் ஒருங்கிணைந்து வெளிநாட்டுக் கம்பனிகள் பணியாற்றுவதற்கான வாய்ப்பினையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.
- புதுடில்லியில் 2016 மே 25 ஆம் திகதியன்றுஆரம்பித்து வைக்கப்பட்ட இந்திய – இலங்கை வர்த்தக மன்றத்தினை ஆரம்பித்து வைத்து வசதிப்படுத்தியுள்ளதுடன் கொழும்பில் 2016 நவம்பர் 07 ஆம் திகதியன்று இலங்கை அலுவலகத்தினைத் திறந்து வைத்தமை.
- அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் ஜேர்மன் மற்றும் மலேசியாவுக்கான விஜயம் மற்றும் பிரதம மந்திரி அவர்களின் சீனாவுக்கான விஜயம் என்பவற்றின் போது வர்த்தக கருத்தரங்குகள் மற்றும் வலையமைப்பு நிகழ்வு குறித்து ஏற்பாடு செய்தமை. மேலும், அனுசரணை வழங்கம் நாட்டிலுள்ள ஏனைய வர்த்தக ஊக்குவிப்பு நிறுவனங்களுடனும் வர்த்தக மன்றங்களுடனும் கூட்டுச் சேர்ந்து இலங்கை வலையமைப்பு நிகழ்வுகள், B2B கூட்டங்கள் மற்றும் வர்த்தக கருத்தரங்குகள் என்பன வர்த்தக உத்தியோகத்தர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டன.

6.2. **வர்த்தக சந்தைப் பங்கேற்பு**:

6.2.1. **அனுசரணை வழங்கும் நாட்டில் நடாத்தப்பட்ட வர்த்தக சந்தைகளில் இலங்கையின் பங்குபற்றல்**

தகவல் பரிமாற்றத்திற்கான அடித்தளமிடுவதற்காக கைத்தொழில் தொழில்நுட்பம் மற்றும் விசேட தேவைகளின் மட்டத்தினை அதிகரிக்கும் நோக்குடன், வர்த்தக சந்தைகள் வர்த்தகப் பங்காளர்களுக்கான முக்கியமான தகவல் பரிமாற்றம் மற்றும் சந்திக்கும் இடங்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் கொள்வனவு மற்றும் விற்பனை நடவடிக்கைகளினை முன்னெடுக்கும் வகையில் வினைத்திறன் வாய்ந்த சந்தைகளாக விருத்தி செய்யப்பட்டுள்ளன.

வெளிநாட்டுச் சந்தைகளினுள் நுழைவதற்கான மிகவும் வினைத்திறன் வாய்ந்த ஊக்குவிப்பு ஊடகமாக வர்த்தக சந்தைகளின் முக்கியத்துவம் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற அதேவேளையில், வர்த்தக உத்தியோகத்தர்கள் மீளாய்வு காலப்பகதியில் அனுசரணை / அங்கீகாரம் பெற்ற நாடுகளில் நடாத்தப்பட்ட 62 வர்த்தக சந்தைகளில் உரிய நேரத்திலான முக்கியத்துவத்தினை வழங்கியிருந்ததுடன் இத்தகைய வர்த்தக சந்தைகளில் தேயிலை, உணவு, குளிர்பானங்கள், தைத்த ஆடைகள், இரத்தினக்கற்களும் ஆபரணங்களும், கைப்பணிப் பொருட்கள், கடலுணவு, ரயர் மற்றும் இறப்பரினாலான பொருட்கள், நார் உற்பத்திப் பொருட்கள், சேதன உற்பத்திப் பொருட்கள், சுகாதார நலன் பேணல் பொருட்கள் மற்றும் பல்வகைப் பொருட்கள் உள்ளடங்கலான உற்பத்திப் பொருட்களினைக் கொண்ட இத்தகைய சந்தையில் 400 இலங்கை கண்காட்சியாளர்கள் / வருகையாளர்களின் பங்களிப்பானது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய வர்த்தக சந்தைகளில் இலங்கை பங்குபற்றுவதற்கான ஏற்பாடுகளினை மேற்கொள்ளும் பொருட்டு, வர்த்தக உத்தியோகத்தர்கள் இலங்கை கண்காட்சியாளர்கள் தமது பொருட்களைக் காட்சிப்படுத்துவதற்கான சந்தை இடவசதிகளை இலவசமாகப் பெற்றுக் கொடுப்பதற்கான பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபட்டார்கள். இதன் விளைவாக, இலங்கையானது, பொருட்களைக் கவர்சியான முறையில் காட்சிப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கப்பெற்றன.

மேலும், உரிய தூதரகங்களிலுள்ள வர்த்தக உத்தயோகத்தர்களினால் அவுஸ்திரேலிய, மெல்பேர்ணில் சர்வதேச மூலவள சந்தை (தைத்த ஆடைகள்), சுவீடன், ஸ்ரொக்கோல்மில் FORMEX வர்த்தக சந்தை (புடவை, பீங்கான் உற்பத்திகள், விளையாட்டுப் பொருட்கள், பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை மற்றும் *வாழ்க்*கைப்பணிப் பொருட்கள்) மற்றும் ஆர்மேனியா,

ஜெரெவனில் Junwex – Yerevan வர்த்தக கண்காட்சி (விலை உயர்ந்த கற்கள்) என்பவற்றில் இலங்கை பங்குபற்றுவதற்கான ஏற்பாடுகளை ஒருங்கிணைத்து வசதிப்படுத்தியிருந்தார்கள்.

வருகை தரும் இலங்கை கண்காட்சியாளர்களுக்காக வர்த்தக உத்தியோகத்தர்கள் தொழிற்சாலை, சிறப்புச் சந்தை சங்கிலித் தொடர் விஜயங்கள், செயலமர்வுகள், பத்திரிகையாளர் மாநாடு போன்ற பல்வேறு ஊக்குவிப்பு நடவடிக்கைகளினையும் மேற்கொண்டதுடன் உரிய அரசாங்க அதிகாரிகளும் வர்த்தக சந்தை பங்குபற்றுதலில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் நடாத்தப்பட்ட வர்த்தக சந்தைகளினை பிரபல்யப்படுத்தும் நோக்குடன், வர்த்தக உத்தியோகத்தர்களும் தமது அனுசரணை வழங்கும் நாடுகளில் நடாத்தப்படும் வர்த்தக சந்தைகளுக்கு முறையாக நேரடி விஜயங்களினையும் மேற்கொண்டார்கள். குறித்த காலப்பகுதியில், வர்த்தக உத்தியோகத்தர்கள் 200 இற்கும் மேற்பட்ட அத்தகைய விஜயங்களினை மேற்கொண்டுள்ளதுடன் அத்தகைய விஜயங்களின் போது அத்தகைய கண்காட்சிகளில் எதிர்காலத்தில் இலங்கையின் பங்குபற்றலுக்கான பரிந்துரைகளினை மேற்கொள்வதற்காக தமது வர்த்தக தொடர்புகளினையும் பரிமாறிக் கொண்டார்கள்.

### 6.2.2. **இலங்கையில் வர்த்தக கண்காட்சிகள் / கருத்தரங்குகளினை நடாத்துவதற்கான ஊக்குவிப்பு**

வெளிநாடுகளிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்கள் இலங்கையில் வர்த்தக சந்தைகள் மற்றும் கண்காட்சிகளினை நடாத்துவதற்காக பாரிய விளம்பர நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள். இத்தகைய பிரபல்யப்படுத்தும் பிரச்சார நடவடிக்கைகளின் போது 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில், அமைச்சர்கள், அரசாங்க அதிகாரிகள், வர்த்தக ஊக்குவிப்பு நிறுவனங்களுடன் தனிப்பட்ட சந்திப்புக்களும் இலங்கையில் 300 இற்கு மேற்பட்ட வெளிநாட்டு கொள்வனவாளர்களுக்காக கண்காட்சிகள் / கருத்தரங்குகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

### 6.2.2.1. **உலக ஏற்றுமதி அபிவிருத்தி மாநாடு 2016** (WEDF)

ஜெனிவாவில் உள்ள சர்வதேச வர்த்தக நிலையத்தின் கொடியேற்ற நிகழ்வான உலக ஏற்றுமதி அபிவிருத்தி மாநாடு 2016 (WEDF), 2016 நவம்பர் 11 – 13 வரையில் கொழும்பில் நடாத்தப்பட்டது. இந்நிகழ்வில் வர்த்தக திணைக்களமானது வெளிநாட்டுக் கொள்வனவாளர்களினைக் கவரும் வகையிலான நடவடிக்கைளில் ஈடுபட்டிருந்தது. அனைத்து வர்த்தக உத்தியோகத்தர்களும் இந்நிகழ்வினை பிரபல்யப்படுத்தும் வகையாலான அனைத்து நடவடிக்கைகளிலும் ஈடுபட்டதுடன் ஐக்கிய அரபு எமிரேட்ஸ், எகிப்து, பிரான்ஸ், சுவிற்சலாந்து, ஜேர்மனி, பாகிஸ்தான், மலேசியா, இந்தியா, சவூதி ஆரேபியா, கொரியக் குடியரசு, இத்தாலி, தென்னாபிரிக்கா, சுவீடன், தாய்லாந்து, வியட்னாம் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளிலிருந்து 171 பிரதிநிதிகள் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகளினை மேற்கொண்டிருந்தார்கள். உலக வர்த்தக நிறுவனத்தின் நிரந்தரப் பிரதிநிதியும் இந்நிகழ்வில் நடுவர் குழுவில் ஒருவராகவும் கலந்து கொண்டதுடன் உலக ஏற்றுமதி அபிவிருத்தி மாநாட்டில் ஜெனீவா வர்த்தக மன்றத்தின் சர்வதேச விவகாரங்களுகான தலைவர், திரு.வின்சன்ற் சுபிலியா, Great Europe of Ebay இன் உப தலைவர் திரு.ஈபன் சேர்மன் ஆகியோரும் பங்குபற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

## 6.3. **வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் ஊக்குவிப்பு**

வெளிநாட்டிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்கள் நாட்டிற்குள் வெளிநாட்டு நேரடி முதலீட்டினக்கொண்டு வருவதில் பெரும் பங்கினை ஆற்றியுள்ளனர். இதுதொடர்பில் அவர்கள் வெளிநாடுகளிலுள்ள பிரதான முதலீட்டாளர்கள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு முகவராணமைகளுடன் உறுதியான வலைமைப்புக்ளையும் தொடர்புளையும் ஏற்படுத்துவதில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும், அவர்கள் இலங்கையில் தயாரிப்புக் கைத்தொழற்சாலைகளின் விரிவாக்கத்திற்கான உள்ளார்ந்த கூட்டு தொழில்முயற்சிப் பங்காளர்களினை இனங்காண்பதற்காக இலங்கையிலிருந்து வெளிச்செல்லும் வியாபார தூதுக்குழுக்கள் ஒவ்வொன்றும் சந்திப்பதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளனர்.

அதற்கிணங்க, மீளாய்வு காலப்பகுதியில், வர்த்தக உத்தியோகத்தர்கள் உள்ளார்ந்த முதலீட்டாளர்களை உரிய சந்தைகளில் சந்தித்து இலங்கையில் கிடைக்கக்கூடிய முதலீட்டு வாய்ப்புக்கள் குறித்து அவர்களுக்கு விளக்கமளித்துள்ளனர்.

குறித்த ஆண்டு காலப்பகுதியில், வர்த்தக உத்தியோகத்தர்கள் ஆதன விருத்தி கைத்தொழில், ரயர் தயாரிப்பு, தளபாட உற்பத்தி, புடவைக்

கைத்தொழில், தகவல் தொழில்நுட்பத் துறை, கழிவு நீர் முகாமைத்துவம், நீர் முகாமைத்துவம் மற்றும் சுத்திகரிப்பு, மண் தடை விருத்தி, நிருமண கைத்தொழில், சுற்றுலாத் துறை, வாகன ஒருங்கிணைப்பு, தூர் வருதல், புகையிரத சேவை, வைத்தியசாலைப் பொருட்கள், ஆதன விருத்தி மற்றும் சுற்றுலா ஹோட்டல் துறை, சீமெந்து உற்பத்தி, காலுறைகளினைப் பொதி செய்தல், சக்தி பிறப்பாக்கல் துறைசார் தயாரிப்புக்கள், உருக்கு குழாய் தயாரிக்கும் பொறித் தொகுதி, மின் மற்றும் சக்தி உள்ளடங்கலான குளிரூட்டப்பட்ட களஞ்சியம், சுற்றுலா மற்றும் துறைமுகத் தொழிற்பாடு, சிறப்புச் சந்தை கருத்திட்டம், சூரிய மின்சக்திக் கருத்திட்டம், இணைந்த அபிவிருத்திக் கருத்திட்டம் மற்றும் வீதிக் குறியிடல் தேவைப்பாட்டு கருத்திட்டங்களின் தயாரிப்பு போன்ற துறைகளுடன் தொடர்புடைய வெளிநாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து 107 முதலீட்டு முன்மொழிவுகளினைப் பெற்றுள்ளனர்.

இலங்கை ஆதனச் சந்தை தொடர்பான முதலிட்டினை ஊக்குவிப்பது குறித்து ஹட்டன் நஷனல் வங்கியுடன் இணைந்து John Keels property developer & JVR Pvt. Ltd இனால் டுபாயில் ஆதன ஊக்குவிப்பு தொடர்பான வீதிக் காட்சிப்படுத்தல் நடவடிக்கைகான உதவுகையானது வழங்கப்பட்டது. 1 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டுடன் கட்டுநாயக்காவில் விவசாய உற்பத்திகளின் சேகரிப்பு மற்றும் பதப்படுத்தல் நிலையங்கள் என்பவற்றனைத் தாபிப்பதற்கான ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளினைத் தளமாகக் கொண்ட பாரிய இந்திய கம்பனிகளில் ஒன்றான லுல அதி சிறப்புச் சந்தைக்கான உதவுகை விரிவாக்கப்பட்டது. கம்பனியானது ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கான முதலாவது ஒப்படைச் சரக்கினை அனுப்புவதன் மூலம் நவம்பரில் தனது வர்த்தகத் தொழிற்பாட்டினை ஆரம்பித்துள்ளது.

இலங்கைப் பிரதம மந்திரி கௌரவ, ரணில் விக்கிரமசிங்க அவர்களுடன் காலை உணவுடன் கூடிய வட்ட மேசை மாநாடானது, பெல்ஜியம், ரினைசன்ஸ் புருஸல்ஸ் ஹோட்டல் புருஸல்ஸில் 2016 ஒக்டோபர் 20 ஆம் திகதி ன்று Belgolux – இலங்கையுடன் இணைந்து ஒன்றிணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த அமர்வில், வர்த்தக மன்றங்கள், சங்கங்கள் மற்றும் ஐரோப்பிய ஆணைக்குழு மற்றும் பாராளுமன்றம் எபவற்றினைப் பிரதிநித்துவப்படுத்தும் முதன்மை பிரதிநிதிகள் மற்றும் 46 ஐரோப்பிய கம்பனிகள் என்பன கலந்து கொண்டன. இதன் விளைவாக, Flanders Investment & Trade (FIT), Brussel Invest & Export (BIE) and Wallonia Export – Investment Agency (AWEX) என்பன 2016 நவம்பர் 29 இலிருந்து டிசம்பர் 2 ஆம் திகதி

வரையில் இலங்கைக்கான உண்மையைக் கண்டறியும் தூதுக் குழுவொன்றினை ஏற்பாடு செய்தன.

## 6.4. சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு

சுற்றுலாத்துறையில் மறைந்துள்ளவற்றினை வெளிக்கொணர்ந்து அவற்றிற்கு அங்கீகாரம் வழங்கும் நோக்குடன் வர்த்தக உத்தியோகத்தர்களினால் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் ஆதரவுடன் வெளிநாடுகளில் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இலங்கை விமான சேவையானது கண்கவர் சுற்றுலா இடமாக இலங்கையை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைளையும் மேற்கொண்டுள்ளது. சுற்றுலா இடமாக இலங்கையை ஊக்குவிப்பதற்கு வர்த்தக உத்தியோகத்தர்களினால் பின்பற்றப்படும் பிரதான தந்திரோபாயங்கள், விசேட கருத்தரங்குகள், மற்றும் மாநாடுகளை ஏற்பாடு செய்தல், சுற்றுலா குழுக்கள் விஜயம் செய்தல், சர்வதேச சுற்றுலா சந்தைகளில் பங்குபற்றுதல், இலங்கைக்கான ஊடக தூதுக்குழுக்கள் மற்றும் FAM பயண ஒழுங்குகளை ஏற்பாடு செய்தல், சுற்றுலா ஊக்குவிப்பு பேரவைகள், அநுசரணை வழங்கும் நாட்டிலுள்ள இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களினூடாக பிரபல்யப்படுத்துதல் போன்றவை உள்ளடங்குகின்றன.

மீளாய்வு காலப்பகுதியில், வர்த்தக உத்தியோகத்தர்கள் ஐக்கிய இராச்சியம், சிங்கப்பூர், இந்தியா (சென்னை, மும்பாய், பதுடில்லி), மலேசியா, தென் கொரியா, இத்தாலி, சவூதி ஆரேபியா, சுவீடன், சீனா, பெல்ஜியம், ஜேர்மனி, ரஷியா மற்றும் ஐக்கிய அமெரிக்காவில் நடாத்தப்பட்ட 22 பிரயாண மற்றும் சுற்றுலா கண்காட்சிகளில் இலங்கையைச் சேர்ந்த 380 பிரயாண மற்றும் சுற்றுலாத்துறை கம்பனிகள் அவ்வாறே இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம், சிறிலங்கன் எயார் லைன்ஸ் என்பன பங்குபற்றுவதற்கான ஏற்பாடுகளினை மேற்கொண்டிருந்தார்கள்.

பொதுமக்கள் மற்றும் பிரயாணத்துறை சார்ந்தவர்களுக்கிடையே மிகவும் வினைத்திறன் வாய்ந்த சுற்றுலா ஊக்குவிப்பு கருவியாக வீதி காட்சிப்படுத்தல்கள், நாடகங்கள் என்பன உள்ளடங்கலாக பல்வேறு ஊக்குவிப்பு நிகழ்வுகள், தெரிவு செய்யப்பட்ட நகரத்தில் அரங்கேற்றப்பட்டன. வர்த்தக உத்தியோகத்தர்கள், இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம், சிறிலங்கன் எயார் லைன் மற்றும் சிறிலங்கன் பிரயாத்துறை ஆகயவற்றுடன் ஒன்றிணைந்து சீனா ( Tianjin & Shenyang ,

Chengdu & Chenggang, Xian), மலேசியா, புருஸல்ஸ், சுவீடன், (ஸ்ரொக்கோல்ம்), டென்மார்க் (Copenhagen), நோர்வே (ஓஸ்லோ) ஆகிய நாடுகளின் நகரங்களில் வீதிக் காட்சிப்படுத்தல்கள் மற்றும் நாடகங்கள் என்பவற்றினையும் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

அனுசரணை வழங்கும் நாட்டு பிரயாண முகவர் அல்லது சுற்றுலா ஏற்பாட்டாளர், FAM ஊடக சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் என்போர் சுற்றுலா நாடு என்றவகையில் உற்பத்திப் பொருள் பற்றிய அறிவு மற்றும் / அல்லது நாடு பற்றிய அறிவு என்பவற்றினை அதிகரிப்பதற்கு வினைத்திறனுடன் செயற்படுகின்றனர். ஆகையால், இந்தியாவிலுள்ள (மும்பாய்) SLTPB மற்றும் வர்த்தக உத்தியோகத்தர்கள், பெல்ஜியம், ஜேர்மனி, இத்தாலி, சுவீடன், எகிப்து, மலேசியா என்பன 100 இற்கும் மேற்பட்ட சுற்றுலா ஏற்பாட்டாளர்கள், சுற்றுலா முகவர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கான FAM சுற்றுலாக்களுக்கு அனுசரணை வழங்கியுள்ளது. பிரெஞ்சு பிரயாண முகவர்கள் காங்கிரஸ் 2016 ஒக்டோபர் 31 இலிருந்து நவம்பர் 04 ஆம் திகதி வரையில் கொழும்பில் மாநாட்டினை நடாத்தியுள்ளதுடன் 300 இற்கும் மேற்பட்ட பிரயாண முகவர்கள் உள்ளூர் சுற்றுலா அக்கறைதாரர்களுடன் இணைந்து கலந்து கொண்டார்கள். இந்த நிகழ்வானது கடந்த 15 ஆண்டுகளில் இரண்டாவது தடவையாக ஆசியாவில் நடாத்தப்பட்டுள்ளது.

இலங்கைச் சுற்றுலா மற்றும் அதன் உணவுப் பழக்கவழக்கங்கள் என்பன தொடர்பான வீடியோ தொகுப்புக்கள் இத்தாலி, சுவீடன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் தொலைக்காட்சி அலைவரிசைகளில் ஒளிபரப்புச் செய்யப்படுவதுடன் 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு சஞ்சிகைகளும் வெளியீடு செய்யப்பட்டன.

மேலும், வர்த்தக உத்தியோகத்தர்கள் அனுசரணை வழங்கும் நாட்டில் இலங்கையின் சுற்றுலாத் துறையினை ஊக்குவிக்கும் நோக்குடன் மீளாய்வு காலப்பகுதியில், கலாச்சாரம் சார்ந்த மாலை நிகழ்வுகள் (ரஷியா – தென் கொரியா இந்தியா (புதுடில்லி, மும்பாய்), பிரயாண முகவர்கள் / சுற்றுலா ஏற்பாட்டாளர்களுக்கான செயலமர்வுகள், வருகைதரும் இலங்கை கம்பனிகளுக்கான B2B கூட்டங்கள், சொற்பொழிவுகள் மற்றும் பல்வேறு நிகழ்வுகளின் போது பிரச்சார துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தல் போன்ற நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளார்கள்.

### 6.5. வர்த்தக, முதலீடு மற்றும் சுற்றுலா தொடர்பான விசாரணைகளினை மேற்கொள்ளுதல்

வர்த்தக திணைக்களத்தின் வர்த்தக உத்தியோகத்தர்கள் உள்நாட்டிலும் அவ்வாறே வெளிநாட்டு வர்த்தகர்களினாலும் எழுப்பப்படுகின்ற வர்த்தக

விசாரணைகள் தொடர்பில் காத்திரமான பணியினை ஆற்றி வருகின்றனர். வெளிநாடுகளில் சேவையாற்றுகின்ற வர்த்தக உத்தியோகத்தர்கள் வெளிநாட்டுத் தரப்புக்களினால் எழுப்பப்படுகின்ற முதலீடு மற்றும் சுற்றுலா தொடர்பான விசாரணைகளிலும் கலந்து கொள்கின்றார்கள். மீளாய்வு காலப்பகுதியில், வர்த்தக உத்தியோகத்தர்கள் அத்தகைய 506 விசாரணைகளினைப் பெற்றுள்ளதுடன் முதலீடு மற்றும் சுற்றுலா கேந்திர நிலையமக இலங்கை விளங்குவதால், வெளிநாட்டுச் சந்தைகளில் இலங்கையின் உற்பத்திப் பொருட்களினை ஊக்குவிக்கும் நோக்குடன் தேவையான வழிகாட்டுதல்களினை வழங்குவதன் மூலம் அவற்றில் முறையாக கலந்து கொண்டுள்ளார்கள்

வெளிநாடுகளிலுள்ள வாங்குனர்களிடமிருந்து வர்த்தக உத்தியோகத்தர்களினால் பெறப்பட்ட வர்த்தக விசாரணைகள் உடனடி நடவடிக்கையினை எடுப்பதற்காக, இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு நேரடியாகவும், அவ்வாறே, வர்த்தக மன்றம், ஏற்றுமதி அபிவிருத்திச் சபை போன்வற்றினூடாகவும் அனுப்பி வைக்கப்படுகின்றன. வர்த்தக திணைக்களத்தினல் பெறப்படும் விசாரணைகளும் வெளிநாட்டு தூதரகங்களில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களின் உதவியுடன் முறையாக நிறைவேற்றப்பட்டுள்ளன. வர்த்தக உத்தியோகத்தர்கள், இலங்கையின் உற்பத்திப் பொருட்களுக்கு வெளிநாட்டு வாங்குனர்களினைக் கண்டறிவதில் வர்த்தக மன்றம் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை போன்றவற்றிற்கு அவர்கள் தமது உதவுகையினை வழங்கி வருகின்றனர்.

அவ்வாறே, முதலீடு மற்றும் சுற்றுலா என்பவற்றுடன் தொடர்புடைய வர்த்தக உத்தியோகத்தர்களினால் பெறப்படும் விசாரணைகள் இலங்கையிலுள்ள உரிய நிறுவனங்கள் /அமைச்சுக்களுக்கு அவற்றினை நெறிப்படுத்தும் அதேவேளையில் அவர்களினால் தேவையான உதவிகளும் வழங்கப்பட்டு வந்துள்ளன.

## 6.6. வர்த்தகப் பிணக்குகளுக்குத் தீர்வு காண்பதற்கான உதவுகை

வர்த்தகம் சார்ந்த பிணக்குகள் தொடர்பில் ஏற்றுமதியாளர்களுக்கும் இறக்குமதியாளர்களுக்குமிடையில் சுமுகமான தீர்வொன்றினைக் காணும் நோக்குடன் வர்த்தக திணைக்களத்தினால் சமரசம் செய்து வைக்கப்படுகின்றன. எடுக்கப்பட்ட நடவடிக்கையானது பாரபட்சமின்றியும் சுமுகமான தீர்வினைக் காணப்பதனை நோக்கமாகக் கொண்டும் பரஸ்பரம் பேச்சவார்த்தைகளினூடாக தீர்வுகள் காணப்பட்டன.

மீளாய்வு காலப்பகுதியில், வெளிநாட்டு தூதரகங்களிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்களினால் அத்தகைய 228 முறைப்பாடுகள் கையாளப்பட்டுள்ளன. திணைக்களமும் அவ்வாறான 47

முறைப்பாடுகளினைப் பெற்றுள்ளதுடன் இரண்டு தரப்புக்களுக்குமிடையில் சுமுகமான தீர்வொன்றினைக் காணும் பொருட்டு அவை முறையாக கையாளப்பட்டுள்ளன. இவற்றுள் 85% மான பிணக்குகள் சுமுகமான முறையில் தீர்க்கப்பட்டுள்ளன.

### 6.7. வதிவிட விசாக்களுக்கான பரிந்துரை

தமது வியாபாரம், தொழில்சார் மற்றும் தனிப்பட்ட நடவடிக்கைகளுக்காக இலங்கையில் நீண்டகாலம் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்கள் வதிவிட விசாக்களுக்காக கோரிக்கை விடுத்து வருகின்றனர். குடிவரவு குடியகல்வு திணைக்களமானது, வதிவிட விசாக் கோரிக்கையினைக் கவனத்தில் கொள்வதற்காக வரிசை அமைச்சிடமிருந்து அதற்கான பரிந்துரைகளினைக் கோருகின்றது. கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் செயலாளர், அமைச்சின் நோக்கல்லையின் கீழ், இலங்கையில் தற்போது வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்ற வெளிநாட்டுக் கம்பனிகள் மற்றும் ஏனைய வர்த்தக மற்றும் வணிகசார் தொழில்முயற்சிகள் அல்லது கிளை அலுவலகங்கள் மற்றும் ஒருங்கிணைந்து பணியாற்றும் அலுவலகங்களில் பணயிலீடுபட்டுள்ள குடிபெயர்ந்தவர்களுக்கான வதிவிட விசாக்களுக்கான பரிந்துரைக் கடிதங்களை வழங்குவதற்கான அதிகாரத்தினை வர்த்தக திணைக்கள அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளார்.

வர்த்தக திணைக்களமானது தகைமை வாய்ந்த வெளிநாட்டவர்கள் மற்றும் அவர்களில் தங்கியிருக்கும் பணிப்பாளர்கள், ஆலோசகர்கள் மற்றும் நிபுணர்கள் ஆகியோருக்கு அவர்களின் கோரிக்கையின் பேரில் ஒரு வருட காலப்பகுதிக்கு அவர்களுக்கான வதிவிட விசாக்களுக்கு மற்றும் அவற்றினை நீடிப்பதற்குமான பரிந்துரைக் கடிதங்களினை வழங்கி வருகின்றது. அத்தகைய விசாக்களுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுமதி வர்த்தகம், தொழில்நட்ப மாற்றுகை மற்றும் உற்பத்தித் திறன் அதிகரிப்பு என்பவற்றிற்கான அத்தகைய தொழில்களுக்கு நேரடி நன்மை பயக்கும் வகையிலும் தேசியப் பொருளாதாரத்தற்கு அதன் மூலம் சாதகமான பயன்கள் கிடைக்கும் வகையிலும் காணப்படுகின்றதா என்பது குறித்து கவனமாக மதிப்பீடு செய்யப்பட்டு அத்தகைய விசா விண்ணப்பங்களுக்கு பரிந்துரை செய்யப்படுகின்றது.

2016 இல், வர்த்தக திணைக்களமானது 121 விண்ணப்பதாரிகள் மற்றும் 72 கம்பனிகளின் 25 தேசிய இனத்தவர்களிலிருந்தான 86 தங்கியிருப்போர் ஆகியோருக்கு வதிவிட விசா பரிந்துரைக் கடிதங்களினை வழங்கியுள்ளது. இது முன்னைய 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் விண்ணப்பதாரிகளில் 35 பேரும் தங்கியிருப்போரில் 17 பேரும் 21

கம்பனிகளில் 21 உம் மற்றும் தேசிய இனத்தவர்களில் 6 பேரும் அதிகரித்துள்ளதுடன் இதன் மூலமான வருமானம் ரூபா.739,000.00 இனால் அதிகரிக்கப்பட்டுமுள்ளது.

## 6.8. கடன் முகவராண்மைகளின் அங்கீகாரம்

1949 ஆம் ஆண்டின் 6 ஆம் இல. குத்தகை சட்டத்தின் கீழ், ஏதேனும் கம்பனி, நிறுவனம் அல்லது தனிநபரினை அங்கீகரிக்கப்பட்ட கடன் முகவராண்மையாக பிரகடனப்படுத்துவதற்கான அதிகாரமானது வர்த்தகப் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் நாயகமானவர் 1949 ஆம் ஆண்டின் 6 ஆம் இல. குத்தகை சட்டத்தின் 114(1) ஆம் பிரிவின் கீழ் கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்பட்ட தலைவர் மற்றும் இரண்டு ஏனைய உறுப்பினர்களைக் கொண்ட சபையின் பரிந்துரைகளின் அடிப்படையில் அவ்வாறு மேற்கொள்வதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றார்.

மீளாய்வு காலப்பகுதியில் வர்த்தக திணைக்களமானது 8 விண்ணப்பங்களினை செயல் முறைக்குட்படுத்தியுள்ளது (அவற்றுள் 05 புதியவை மற்றும் 03 கடந்த ஆண்டில் தவறவிடப்பட்டவை. சபையினால் பெறப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில், இவ்வாறு செயல்முறைக்குட்படுத்தப்பட்ட 8 விண்ணப்பங்களில், 04 கம்பனிகள் கடன் முகவராண்மை நிறுவனங்களாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டன.

## 6.9 தொழில்நுட்ப உதவுகை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்

உரிய அரசாங்க அதிகாரிகள், வர்த்தக ஊக்குவிப்பு நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் ஏற்றுமதிக் கம்பனிகளின் பிரதிநிதிகள் ஆகியோரின் வினைத்திறனையும் உலக வர்த்தக நிறுவன உடன்படிக்கைகளின் திறன் விருத்தியினையும் அதிகரிக்கும் நோக்குடன் வர்த்தக திணைக்களமானது WTO, UNESCAP, ITC மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து மீளாய்வு காலப்பகுதியில் பின்வரும் கருத்தரங்குகளை நடாத்தியுள்ளது.

### 6.9.1. இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் (ISFTA) கீழ் வரிசாரா விடயங்கள் மற்றும் இந்திய நியமங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பான விழிப்புணர்வினை அதிகரித்தல்

இலங்கையின் ஏற்றுமதிகளுக்கு ஏற்புடைய வரி சாரா நடைமுறைகள் மற்றும் இந்திய நியமங்கள் மற்றும ஒழுங்குவிதிகள் தொடர்பில்

ஏற்றுமதியாளர் சமூகத்திற்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்குடன் ஒரு முழு நாள் செயலமர்வொன்று 2016 மார்ச் 04 ஆம் திகதியன்று நடாத்தப்பட்டது.

இந்தச் செயலமர்வின் பிரதான நோக்கம், இந்தியாவுடனான வர்த்தகமானது சீராக இடம்பெறுவதனை உறுதிப்படுத்துவதுடன் தவறான புரிந்துணர்வுகளைத் தவிர்க்கும் பொருட்டு இந்திய இறக்குமதிகளுக்கு ஏற்புடைய வகையில் பொருத்தமான சட்ட விதிகளுக்கமைய இலங்கை ஏற்றுமதியாளர் சமூகத்தினை மதிப்பீடு செய்வதேயாகும். இந்தச் செயலமர்வானது இந்திய – இலங்கை உடன்படிக்கையின் (ISFTA) கீழ் பயன்பாடற்ற சந்தை வாய்ப்புக்களுக்கு தடை விதிக்கும் வகையில் இந்திய அதிகாரிகளினால் விதிக்கப்படும் பல்வேறு வரியல்லா நடவடிக்கைகள் குறித்து முறைப்பாடு செய்துள்ள பல்வேறு இலங்கை ஏற்றுமதியாளர்களின் முறைப்பாடுகளினையும் கவனத்தில் கொள்கின்றது.

குறித்த செயலமர்வானது ISFTA இன் கீழ் கவனத்தில் கொள்ளப்படுகின்ற குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கான வாய்ப்பினை வழங்குகின்றது. தாபிக்கப்பட்ட இந்திய தூதுக்குழுவானது இந்திய கட்டளைகள் பணியகம், மதுவரி மற்றும் சுங்க மத்திய சபை, இந்திய உணவுப் பாதுகாப்பு நியமங்கள் அதிகாரசபை ஆகியவற்றிலிருந்தான அதிகாரிகள் மற்றும் வெளிநாட்டு வர்த்தக பணிப்பாளர் நாயகம் ஆகியோரினைக் கொண்டுள்ளது. இந்நிகழ்வில், ஏறக்குறைய 250 பங்குபற்றாளர்கள், இலங்கையின் ஏற்றுமதியாளர்கள் / வர்த்தக மன்றம் மற்றும் வர்த்தகத்துடன் தொடர்புடைய ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நிறுவனங்கள் ஆகியவற்றினைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றியிருந்தார்கள். பார்வையாளர்கள் இலங்கையிலிருந்தான தரமான எற்றுமதிகளுக்கு மிகச் சிறந்த சந்தை வாய்ப்பினைப் பெற்றுக் கொடுப்பதற்காக நடைமுறையிலுள்ள ஒழுங்குறையிலான சட்டவிதிகள் மற்றும் ஏனைய வர்த்தக சம்பிரதாயங்களினை மேம்படுத்துவதற்கான அவர்களின் விருப்பத் தேர்வுகளில் பங்கெடுத்துக் கொள்வதற்கும் ஏற்றுமதி தொடர்பான பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்குமான தனிநபர் கலந்துயாடல்களிலும் ஆர்வம் செலுத்தினார்கள்.

### 6.9.2 நைரோபிக்குப் பின்னரான உலக வர்த்தக நிறுவன விடயங்கள் தொடர்பான இலங்கைக்கு அனுசரணை வழங்கும் பொதுநலவாய கொள்கை வகுப்பாளர்கள் செயலமர்வு

நைரோபிக்குப் பின்னரான உலக வர்த்தக நிறுவன கூட்டத் தொடரில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் வர்த்தகப் போட்டித்

தன்மையினை எவ்வாறு விரிவாக்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்ட 3 நாள் செயலமர்வுக்காக 2016 மார்ச் 16 - 18 வரையில் கொழும்பில் நடாத்தப்பட்ட நிகழ்வில் நிலையான அபிவிருத்திக்கான சர்வதேச நிறுவகம், பொதுநலவாய செயலகம் மற்றும் பதினைந்துக்கும் மேற்பட்ட
நாடுகளிலிருந்தான சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளடங்கலாக அறுபதுக்கும் மேற்பட்ட பங்குபற்றாளர்கள் கலந்து கொண்டிருந்தார்கள்.

இந்த நிகழ்வின் போது, சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளிலுள்ள அபிவிருத்தியடைந்துவரும் மற்றும் குறைவிருத்தி நாடுகளுக்கான திறன் விருத்தி வரையறைகள், உலக வர்த்தக நிறுவன தலைமையிலான டோஹா அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலின் கீழான பல்தரப்பு வர்த்தக பேச்சுவார்த்தைகளினை ஒத்தி வைத்தல் போன்றனவும் டிரான்ஸ் பசுபிக் பங்குடமை (TPP), டிரான்ஸ்லான்டிக் வர்த்தக மற்றும் முதலீட்டு பங்குடமை (TTIP), பிராந்திய விரிவான பொருளாதார பங்குடமை மற்றும் தொழிலாளர் உரிமைகளின் ஈடுபாட்டினை அதிகரித்தல், முதலீட்டு விதிகள், அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகள் போன்றன பிரதான விடங்களின் தலைப்புக்களில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன.

இலங்கை வர்த்தக திணைக்களத்துடன் கூட்டுச் சேர்ந்து பொதுநலவாய செயலகத்தினால் IISD, கொள்கை கற்கைகள் நிறுவகம் மற்றும் இலண்டனிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயம் என்பவற்றில் இந்தச் செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

### 6.9.3. **வர்த்தக நிவாரணங்கள் தொடர்பான திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

வர்த்தக நிவாரணங்கள் தொடர்பான செயலமர்வானது, உலக வர்த்தக நிறுவன சட்ட விதிகள் பிரிவுடன் ஒன்றிணைந்து 2016 ஏப்பிரல் 4 – 8 வரையில் வர்த்தக திணைக்களத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தச் செயலமர்வானது தொடர்புடைய உலக வர்த்தக நிறுவன உடன்படிக்கைகளின் கீழ் அரசாங்க அதிகாரிகளுக்கிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் மற்றும் வர்த்தக நிவாரணங்கள் குறித்த தொழில்நுட்ப அறிவினை அளித்தல் என்பனவற்றினை நோக்கமாகக் கொண்டிருந்தது. தொழில்நுட்ப உதவுகையினைப் பின்பற்றுதல் மற்றும் தொடருதல் தொடர்பில், உலக வர்த்தக நிறுவனத்தின் சட்டவிதிகள் பிரிவானது வர்த்தக நிவாரணங்கள் மற்றும் தொழில்நுட்ப உதவுகை நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான வரைபொன்றினைத் தயாரித்துள்ளது.

இலங்கை வர்த்தக மன்றத்துடன் இணைந்து தனியார் துறைக்கான குவிப்பெதிர்ப்பு, எதிரீட்டு நடவடிக்கைகள் குறித்து விழிப்புணர்வினை

ஏற்படுத்தும் நோக்குடன் பொது மக்களுக்கான கருத்தரங்கொன்றும் நடாத்தப்பட்டது.

### 6.9.4 வர்த்தக சேவைகள் மீதான கருத்தரங்கு

வர்த்தக திணைக்களமானது சர்வதேச கற்கைகளுக்கான பண்டாரநாயக்க நிலையத்துடன் (BCIS) இணைந்து, சர்வதேச கற்கைகளுக்கான பண்டாரநாயக்க நிலையத்தில் 2016 ஜூன் 27 இலிருந்து 28 வரையில் வர்த்தக சேவைகள் தொடர்பில் ஒன்றிணைந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

உலக வர்த்தக நிறுவனத்தின் கீழான வர்த்தக சேவைகள் தொடர்பான பொதுவான உடன்படிக்கையின் (GATS) சட்ட வரைபு தொடர்பில் அரசாங்க அதிகாரிகள், தனியார் துறை, சிவில் சமூகம் என்பனவற்றிற்கு விளக்கமளிப்பதே இக்கருத்தரங்கின் பிரதான நோக்கமாக இருந்தது. சுதந்திர வர்த்தக உடன்படிக்கையிலுள்ள அதன் பல்வேறு கட்பாடுகள், இக்கப்பாடுகளினை நிரல்படுத்துதல், வெளிப்படையானதும் முறைப்படுத்தப்பட்டதுமான கடப்பாடுகள், கொள்கை வகுப்பு, சேவைகள் தொடர்பான பேச்சுவார்த்தைகளின் புதிய விடயங்கள் மற்றும் இலங்கை தொடர்பான பிராந்திய ஒருங்கிணைப்பில் ஏற்பட்ட வளர்ச்சி அவ்வாறே சுதந்திர செயல்முறையின் போதான கொள்கையுடன் தொடர்படைய விடயங்கள் மற்றும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையிலுள்ள தொழிலாளர் நகர்வுகள் தொடர்பான விடயங்கள் என்பன குறித்தும் இங்கு விளக்கமளிக்கப்பட்டது.

### 6.9.5. "பல் தரப்பு வர்த்தக முறைமையில் வர்த்தகம் நோக்கிலான அபிவிருத்தி" மீதான பிராந்திய செயலமர்வு.

வர்த்தகத் திணைக்களமானது, ஜெனிவாவிலுள்ள இலங்கை தூதரகம், உலக வர்த்தக நிறுவனத்தின் வர்த்தக மற்றும் அபிவிருத்தி பிரிவு என்பவற்றுடன் இணைந்து கொழும்பில் 2016 ஒக்டோபர் 26 – 28 வரையில் நடாத்தப்பட்ட உலக வர்த்தக நிறுவனம் மற்றும் UNESCAP இனால் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட "பல் தரப்பு வர்த்தக முறைமையில் வர்த்தகம் நோக்கிலான விருத்தி" எனும் பிராந்திய செயலமர்வொன்றினை ஒருங்கிணைப்புச் செய்திருந்தது. இந்தச் செயலமர்வில் 21 ஆசிய நாடுகளிலிருந்து 50 பங்குபற்றாளர்கள் பங்குபற்றியிருந்தார்கள்.

### 6.9.6. **வர்த்தக கொள்கை மீதான கருத்தரங்கு**

வர்த்தகத் திணைக்களமானது ஐக்கிய அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம், ஐக்கிய அமெரிக்க வர்த்தகத் திணைக்களம் என்பவற்றுடன் ஒன்றிணைந்து, பல்வேறு இலங்கை அமைச்சுக்கள், முகவராண்மைகள், ஆராய்ச்சி நிறுவகங்கள், வர்த்தக கொள்கை வள மையங்கள் மற்றும் வர்த்தக மன்றம் ஆகியவற்றிலிருந்தான 70 இற்கும் மேற்பட்ட பிரதான தீர்மானம் நிறைவேற்றுபவர்கள் மற்றும் தொழில்நுட்ப நிபுணர்கள் ஆகியோரினைக் கொண்டதாக மூன்று நாள் கருத்தரங்கொன்றினை நடாத்தியுள்ளது.

மூன்று நாட்கள் நடாத்தப்பட்ட இத்தகைய அமர்வுகளில் வர்த்தக கொள்கை பகுப்பாய்வு அடிப்படையிலான திறன் விருத்தி, வர்த்தகப் பேச்சுவார்த்தை உபாயங்கள் தொடர்பான கலந்துரையாடல்கள் மற்றும் இலங்கை தேசிய வர்த்தக கொள்கையொன்றினை வகுப்பதற்கான உள்ளார்ந்த கலந்துரையாடல் என்பன தொடர்பில் ஆராயப்பட்டன.

### 6.9.7. **உலக வர்த்தக நிறுவனம் தொடர்பான கருத்தரங்கு – வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கை**

வர்த்தக வசதிப்படுத்தல் தொடர்பான கருத்தரங்கானது கொழும்பில் 2016 ஜூலை 27 ஆம் திகதியன்று நடாத்தப்பட்டது. இத்தகைய பேச்சுவார்த்தைகளின் மூலம் பிரதானமாக, இடைத்தங்கல் சுதந்திரம், இறக்குமதி மற்றும் ஏற்றுமதியுடன் தொடர்புடைய கட்டணங்களும் சம்பிரதாயங்களும், இணையத்தளம் மூலமான வெளியீடுகள் மற்றும் வர்த்தக ஒழுங்கு விதிகளினை நிருவகித்தல் என்பன உள்ளடக்கப்படுகின்றன.

உலக வர்த்தக நிறுவனம் உறுப்பினர்களாக தற்போது 164 நாடுகளினைக் கொண்டிருப்பதுடன் வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கையானது, உலக வர்த்தக நிறுவன உறுப்புரிமையினைக் கொண்டுள்ள மூன்றில் இரண்டு நாடுகள் (110) தமது உள்நாட்டு செயல்முறைக்கு ஆதரவளித்து பூர்த்தி செய்திருக்கும் போது அமுலுக்கு வரும். இதுவரையில், 102 உறுப்பினர்கள் உடன்படிக்கைக்கு ஆதரவளித்திருப்பதுடன் இலங்கையும் அவற்றுள் ஒன்றாகும். 2016 மார்ச்சில் அமைச்சரவையானது இலங்கையில் வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கைகு ஆதரவளிப்பதற்கான அங்கீகாரத்தினை வழங்கியுள்ளதுடன் 2016 ஏப்பிரலில், சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் வர்த்தகப் பணிப்பாளர் நாயகத்தின் இணைத்

தலைமையுடன் தேசிய வர்த்தக வசதிப்படுத்தல் ஆணைக்குழுவொன்றினை (NTFC) முறையாகத் தாபிப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தினை வழங்கியுள்ளது. NTFC ஆனது 12 எல்லைப்புற ஒழுங்குமுறைப்படுத்தும் முகவராண்மைகள் மற்றும் இலங்கையின் வர்த்தகம் மற்றும் கைத்தொழில் சமூகத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 6 உறுப்பினர்கள் ஆகியோரினைக் கொண்டுள்ளது.

வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கையானது இரண்டு நாடுகளுக்குமிடையிலான வர்த்தகத்தினை அதிகரிப்பதன் மூலம் வர்த்தகச் செலவுகளினைக் குறைப்பதற்கான உள்ளார்ந்த வாய்ப்புக்களினைக் கொண்டுள்ளது. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் தற்போது மிகப் பெரியளவில் நடைமுறை இடர்பாடுகளுக்கு தற்போது முகங் கொடுத்து வருவதால் அவை மிகப் பெரிய பயன்களைப் பெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஆய்வுகள் அவர்களது வர்த்தகச் செலவுகள் 15% இலிருந்து 13% இற்கு வீழ்ச்சியடையுமென ஆலோசனை வழங்கப்படுகின்றது. குடியானவர்கள் பல்வேறு வகையான பொருட்களைப் பெற்றுக் கொள்வார்கள். கம்பனிகளுக்கு, உள்ளீடுகள் குறைந்த செலவில் வெளிநாட்டுச் சந்தைகளுக்கு மிகச் சிறந்த நிலையில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அபிவிருத்தியடைந்து வரும் நாட்டு ஏற்றுமதிகள் 14% இற்கும் 22% இற்குமிடையில் பல்வேறு வகைப் பட்டவையாக வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. கம்பனிகள் உள்நாட்டு முதலீட்டினை ஊக்குவிக்கும் வகையில் அதிகளவிலான இலாபத்தினை ஈட்டக்கூடயனவாக உள்ளன. அத்துடன், வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கையினை முழுமையாக அமுல்படுத்திய நாடுகளுக்கு கவர்ச்சிகரமான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதிகரித்த வர்த்தகம் என்பது தொழிலாளர்களுக்கான மிகச் சிறந்த ஊழிய சம்பாத்தியத்தினையும் அரசாங்கத்தினால் மிகச் சிறந்த வருமான சேகரிப்பினையும் குறிப்பிடுகின்றது. (மூலம்: உலக வர்த்தக நிறுவனம்)

வர்த்தகப் பணிப்பாளர் நாயகமும் பின்வரும் கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளில் அழைப்பின் பேரில் மூலவள ஆய்வாளராக பங்குபற்றியுள்ளார்;

- சமகால இலங்கை சீன உறவுகள் இலங்கை: சவால்கள் மற்றும் முன்னெடுக்கும் வழிமுறை – சர்வதேச கற்கைகளுக்கான பண்டாரநாயக்க நிலையம் (BCIS)

- சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் அநுகூலங்களும் பிரதகூலங்களும் – இளைய இலங்கை தொழில் முயற்சியாளர்களின் மன்றம் (COYLE)
- அரசாங்க வழிமுறைகளினைப் பயன்படுத்துவதனூடாக உலக சந்கைளினைக் கண்டறிவது மற்றும் தங்களின் வியாபாரங்களை வளர்ச்சி பெறச் செய்தல் என்பது தொடர்பான பொதுமன்றம் தொடர்பான நடுவத் தீர்ப்பாளர்களின் கலந்துரையாடல் – இலங்கை வர்த்தக மன்றம் (CCC)
- GSP + , எதிர்பார்ப்பது என்ன – இலங்கை தாபன நிறுவகம்

6.10. **ஐரோப்பிய ஒன்றியம் நிதியிட்ட வர்த்தகத்துடன் தொடர்புடைய திறன் கட்டியெழுப்பும் கருத்திட்டங்கள்**:

"ஐரோப்பிய ஒன்றிய – இலங்கை வர்த்தகம் தொடர்பான உதவுகை: பிராந்திய மற்றும் ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளில் சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளின் வர்த்தக போட்டிகளை அதிகரித்தல்" கருத்திட்டமானது 18 ஆவது ஐரோப்பிய ஒன்றிய – இலங்கை கூட்டு ஆணைக்குழுவிற்க சமாந்தரமாக புறுசல்ஸில் 2013 டிசம்பர் 2 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகள் மீதான ஐரோப்பிய ஒன்றிய – இலங்கை தொழிற்படு குழுவிற்கு முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு அமைவாக ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கையின் ஏற்றுமதி துறையின் ஒட்டுமொத்த செயலாற்றுகையினை விரிவாக்கும் நோக்கினைக் கொண்ட இந்தக் கருத்திட்டமானது, குறிப்பாக பின்வருவனவற்றினை விருத்தி செய்வதற்கு ஆதரவு வழங்குவதன் மூலம் உணவு, வாசனைத்திரவியங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் BPO துறைகளினை விருத்தி செய்வதனை யும் நோக்காகக் கொண்டது;

i. வியாபாரமும் வர்த்தக கொள்கையும்
ii. வர்த்தக வசதிப்படுத்தல்
iii. தரமான நியமங்கள் மற்றும் சுகாதார மற்றும் சுகாதார நலன் பேணல் (SPS) நடவடிக்கைகளுடன் இணங்கிப் போதல்
iv. துறைசார் குறித்துரைக்கப்பட்ட சங்கிலி விருத்தி மற்றும் சிறிய மந்றும் நடுத்தர தொழில் முயற்சிகளை பிராந்திய

மற்றும் உலகப் பெறுமதி வாய்ந்த சங்கிலித் தொடர்களாக ஒருங்கிணைத்தல்.

ஐரோப்பிய ஒன்றியமானது இக்கருத்திட்டத்திற்காக 8 மில்லியன் யூரோக்களை நிதியிடுவதற்கு உடன்பட்டுக் கொண்டுள்ளதுடன் சர்வதேச வர்த்தக நிலையமானது (ITC) இக்கருத்திட்டதினை அமுல்படுத்தும் முகவராண்மையாக செயற்படும் அதேவேளையில் இக்கருத்திட்டத்தின் தேசிய இணைப்பாளராக வர்த்தகத் திணைகைகளம் விளங்குகின்றது. அமுல்படுத்தும் அதிகாரிகள் அக்கறைதாரர்களுடன் இணைந்து ஆயத்த வேலைகளினை ஆரம்பித்துள்ளதுடன் ஐரோப்பிய ஆணைக்குழுவின் அங்கீகாரத்தினைப் பெற்று கருத்திட்ட பிரேரைணை அறிக்கையில் உதவியளிக்கப்பட்டவை வர்த்தகத் திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளன.

நான்கு வருட கருத்திட்டமானது கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் கௌரவ. ரிசாட் பதியுதீன் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய தூதுவரும் ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவிற்கான தலைவருமான அதிமேதகு திரு.ரங் - லய் மார்குவே மற்றும் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழு ஆகியோரின் பங்குபற்றுதலுடன் 2016 நவம்பர் 15 ஆம் திகதியன்று ஆரம்பிக்கப்பட்டது.

## 7. உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களின் வழங்குகை

வர்த்தக திணைக்களமானது பின்வரும் முன்னுரிமைத் திட்டங்கள் மற்றும் பிராந்திய இருதரப்பு மற்றும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கான உற்பத்தி நாட்டு சான்றிதழ்களை வழங்கி வருகின்றது.

- முன்னுரிமையின் பொதுவான முறைமை (GSP)
- வர்த்தக முன்னுரிமையின் பூகோள முறைமை (GSTP)
- சார்க் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை (SAPTA)
- தென்னாசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SAFTA)
- இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ((ISFTA)
- பாகிஸ்தான் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ((PSFTA)
- ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (APTA)

வேலை நாளொன்றில் சராசரியாக வர்த்தக திணைக்களத்தினால் 500 உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்கள் செயல்முறைப்படுத்தப்பட்டு வழங்கப்படுகின்றன. உயர்தரத்தில் பயிற்சியளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களினைக் கொண்ட குழுவொன்று உற்பத்தி நாட்டுச்சான்றிதழ் வழங்கும் பிரிவில் முழுநேரமும் நியமிக்கப்பட்டுள்ளதுடன் முன் அனுமதியின்றி அலுவலக நேரங்களில் உசாவுதல்களும் மேலதிக விளக்கங்களும் அளிக்கப்பட்டு வருகின்றன. உயர்

பதவியினை வகிக்கும் உத்தியோகத்தர்களினால் தினசரி சராசரியாக 30 முதல் 50 வரையிலான உசாவுதவல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களின் வழங்குகையானது வேறுபட்ட உடன்படிக்கைகள்/ஏற்பாடுகளின் கீழான உரிய மூல விதிகளின் வகையீடுகளில் ஆழமான அறிவுடன் விசேடமாக வடிவமைக்கப்பட்டு உயர் தரத்தில் வழங்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பில் வர்த்தக திணைக்களம் பின்வருவனவற்றிற்கு பொறுப்பு வகிக்கின்றது;

(அ) வரிச்சலுகைகளுக்கான பொருட்களின் தகமையினை மதிப்பீடு செய்தல்
(ஆ) ஏற்றுமதியாளர்களின் விபரங்களைப் பதிவு செய்தலும் பேணுதலும்,
(இ) தமது தகமையினை நிரூபிப்பதற்காக ஏற்றுமதியாளர்களினால் சமர்ப்பிக்கப்படும் செலவுக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய இணை ஆவணங்களை மதிப்பீடு செய்தல்,
(ஈ) முன்னுரிமை வழங்கும் நாடுகளின் கோரிக்கையின் பேரில் உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களின் வழங்குகையின் பின்னரான கணக்காய்வினை நடாத்துதல் மற்றும்
(உ) உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களுடன் தொடர்புடைய தரவுகள் மற்றும் பகுப்பாய்வுஅறிக்கைகளினை தொகுத்தலும்.

கடந்த 5 ஆண்டுகளில் வர்த்தக திணைக்களத்தினால் வழங்கப்பட்ட உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களின் விபரம் கீழே தரப்படுகின்றது.

| **உடன்படிக்கை** | **வழங்கப்பட்ட உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களின் எண்ணிக்கை** | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | **2011** | **2012** | **2013** | **2014** | **2015** | **2016** |
| EU GSP | 85,600 | 114,029 | 79,774 | 83,898 | 72,675 | 74,003 |
| GSP - CIS நாடுகள் | 856 | 1,009 | 929 | 842 | 480 | 514 |
| GSP – ஏனைய நாடுகள் | 14,782 | 13,909 | 13,410 | 12,706 | 11,985 | 11,981 |
| ISFTA | 35 | 9,742 | 11,088 | 10,852 | 11,494 | 12,621 |
| PSFTA | 30 | 8,057 | 8,190 | 7,069 | 7,320 | 6,673 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| APTA | 2,424 | 2,781 | 3,482 | 4,131 | 4,025 | 4,508 |
| SAFTA | - | 26 | 74 | 388 | 231 | 149 |
| SAPTA | 248 | 253 | 243 | 309 | 304 | 288 |
| GSTP | 115 | 136 | 147 | 107 | 150 | 143 |
| **மொத்தம்** | **104,090** | **149,942** | **117,337** | **120,302** | **108,664** | **110,830** |

8. **வர்த்தக திணைக்களத்தின் பதவியினர் இட நகர்வுகள்** – 2016

| அலுவரின் பெயர் | இட நகர்வு | திகதி |
|---|---|---|
| **பணி புரியும் இடமாற்றம் – திணைக்களத்திற்குத் திரும்பி வருதல்** | | |
| திரு . ப. எம். பீ.சோமஸ்ரீ<br>வர்த்தகப் பணிப்பாளர் | ஐக்கிய அமெரிக்கவொஷிங்டன் டிசி , இலுள்ள இலங்கைத் தூதரகத்திலிருந்து இலங்கைக்குத் திரும்பியுள்ளார் | 21.05.2016 |
| திரு.பீ. எம். எஸ். ஏ. பீ. கொடவிட்ட<br>வர்த்தகப் பணிப்பாளர் | கனடா ரொறொன்ரோவிலுள்ள கொன்சுலேற் ஜெனரலிலிருந்து இலங்கைக்குத் திரும்பியுள்ளார். | 21.10.2016 |
| திருமதி. டீ. ஏ. எஸ். விஜேவந்தா<br>உதவி வர்த்தகப் பணிப்பாளர் | ஐக்கிய இராச்சியம் இலண்டனிலுள்ள உயர் ஸ்தானிகராலயத்திலிருந்து இலங்கைக்குத் திரும்பியுள்ளார். | 28.09.2016 |
| **பணி புரியும் இடம் மாற்றம் – வெளிநாட்டுத் தூரகங்களுக்கு நியமித்தல்** | | |
| செல்வி. உபேக்கா ,சமரதுங்க<br>வர்த்தகப் பணிப்பாளர் | ஐக்கிய அமெரிக்காவொஷிங்டன் , டிசி இலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கு நியமிக்கப் பட்டுள்ளார். | 09.05.2016 |
| திரு.பீ. எம். எஸ். ஏ. பீ. கொடவிட்ட<br>வர்த்தகப் பணிப்பாளர் | ஐக்கிய அமெரிக்கலொஸ் , ஏஞ்சலிலுள்ள இலங்கை கொன்சுலேற் ஜெனரலுக்கு நியமிக்கப்பட்டுள்ளார் | 21.10.2016 |
| திரு.எம்.சோமசேன<br>பிரதி வர்த்தகப் பணிப்பாளர் | இத்தாலி ரோமிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார். | 07.09.2016 |
| திருமதி எ ச். கே. டப். லியன கே<br>உதவி வர்த்தகப் பணிப்பாளர் | தாய்லாந்துபாங்கொக்கிலுள்ள , இலங்கைத் தூதரகத்திற்கு நியமிக்கப்பட்டுளள்ளார் | 17.05.2016 |
| திருமதி . ஸ்ரீ மாலி யரத்ன<br>உதவி வர்த்தகப் பணிப்பாளர் | வியட்னாம்ஹைநோயிலுள்ள , இலங்கைத் தூதரகத்திற்கு நியமிக்கப்பட்டுளள்ளார் | 29.03.2016 |
| செல்வி. தாரகா போதேஜு<br>உதவி வர்த்தகப் பணிப்பாளர் | சுவிற்சலாந்து ஜெனிவாவிலுள்ள உலக வர்த்தக நிறுவனத்திற்கான நிரந்தர பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுளள்ளார். | 23.12.2016 |
| திரு.எஸ்.ஏ.எஸ்.ஏசமரவீர. | ஐக்கிய இராச்சியம் இலண்டனிலுள்ள | 21.10.2016 |

| | | |
|---|---|---|
| உதவி வர்த்தகப் பணிப்பாளர் | இலங்கைத் தூதரகத்திற்கு நியமிக்கப் பட்டுளள்ளார் | |
| **இழைப்பாறல்கள்** | | |
| திரு.டீ.டப்.ஜினதாச<br>வர்த்தகப் பணிப்பாளர் | இழைப்பாறியுள்ளார் | 20.08.2016 |

9. **வருடாந்த கணக்குகள்** – 2016

**தலைப்பு இல.**: 295

**அமைச்சு / திணைக்களம்**:- **வர்த்தக திணைக்களம்**

**நிகழ்ச்சித்திட்ட இல.**: 01

**கருத்திட்ட இல.**: 01

**மீண்டுவரும் செலவினம்**

| விபரணம் | 2015<br>**உண்மை**<br>**ரூபா**. 000 | 2016<br>**மதிப்பீடு**<br>**ரூபா**. 000 | 2016<br>**மீளாய்வு செய்யப்பட்ட மதிப்பீடு**<br>**ரூபா**. 000 | 2016<br>**உண்மைச் செலவினம்**.<br>**ரூபா**. 000 | 2016<br>**சேமிப்புக்கள்**<br>**ரூபா**. 000 |
|---|---|---|---|---|---|
| **ஆளுக்குரிய வேதனாதிகள்** | 44,898 | 47,600 | 47,600 | 46,969 | 631 |
| **ஏனையவை** | 51,104 | 53,580 | 62,688 | 62,156 | 532 |
| **மொத்தம்** | 96,002 | 101,180 | 110,288 | 109,125 | 1,163 |

## மூலதனச் செலவினம்

| செலவின விபரணம் | 2015<br>உண்மை<br>ரூபா. 000 | 2016<br>மதிப்பீடு<br>ரூபா. 000 | 2016<br>மீளாய்வு செய்யப்பட்ட மதிப்பீடு<br>ரூபா.000 | 2016<br>உண்மைச் செலவினம்.<br>ரூபா. 000 | 2016<br>சேமிப்புக்கள்<br>ரூபா. 000 |
|---|---|---|---|---|---|
| **மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும் மேம்பாடும்** | 3097 | 500 | 635 | 536 | 98 |
| கட்டிடங்களும் பொருத்துக்களும் (2001) | 2,552 | 100 | 235 | 212 | 23 |
| பொறிஇயந்திரம் , மற்றும் உபகரணம் (2002) | 0 | 0 | 0 | 0 | 0 |
| வாகனங்கள் (2003) | 545 | 400 | 400 | 324 | 75 |
| **மூலதனச் சொத்துக்களின் கொள்ளல்** | 2,618 | 3,000 | 2405 | 2,280 | 125 |
| தளபாடமும் அலுவலக உபகரணமும் (2102) | 2,548 | 2,000 | 1,540 | 1,512 | 28 |
| இயந்திரம் (2103) | 70 | 1,000 | 865 | 768 | 97 |
| **மனித வள விருத்தி** | 2,134 | 2,000 | 2,460 | 2,454 | 6 |
| பதவியினர் பயிற்சி (2401) | 2,134 | 2,000 | 2,460 | 2,454 | 6 |
| **ஏனை மூலதனச் செலவினம்** | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 4,292 | 5,000 | 5,000 | 4,806 | 194 |
| **முதலீடுகள்** (2502)<br><br>01. **புதிய சந்தைகளினைக் கண்டறிதல்** | ட<br>4,292 | 5,000 | 5,000 | 4,806 | 194 |
| **மொத்தம்** | 12,141 | 10,500 | 10,500 | 10,076 | 423 |